இரண்டாம் பதிப்பு

விலை: 20
பக்கங்கள்: 28

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

சுடர் 32
கதிர் 278
ஆவணி 15ஆம் நாள்
ிழமை
31 ஓகஸ்ட் 2017
வள்ளுவர் ஆண்டு 2048

✦ 2020ஆம் ஆண்டு வரை கூட்டரசு தொடரும்
✦ அரசதலைவர் தேர்தலில் இனி நான் போட்டியிடமாட்டேன்
✦ ஊழலுக்கு எதிராக குரல் கொடுத்த மைக்காக் மகிந்த மிரட்டினார்

# இலங்கைப் பாணியில் மெதுவாகவே பொறுப்புக்கூறல் நிறைவேற்றப்படும்

## இப்படி சாவகாசமாகக் கூறுகிறார் அரசதலைவர் மைத்திரி

யாழ்ப்பாணம், ஓக. 31

"பொறுப்புக்கூறலில்இருந்து அரசு பின்வாங்கவில்லை. அதற்குரிய ஏற்பாடுகள் இலங்கைக்கே உரிய பாணியில் மெதுவாக நிறைவேற்றப்படும்." இவ்வாறு சாவகாசமாகத் தெரிவித்தார் அரசதலைவர் மைத்திரிபால சிறிசேன.

அரசதலைவர் மாளிகையில் நேற்றுக் காலை நடைபெற்ற பத்திரிகை ஆசிரியர்கள், ஊடகப் பிரதானிகளுடனான சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

போர்க்குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்கள் தொடர்பில் தனது பொறுப்புக்கூறலை நிறைவேற்ற இலங்கை அரசு பின்வாங்குகின்றது என்று பன்னாட்டு மட்டத்தில் >> 24






மேலும் செய்தி. படங்கள் பக்.2

பலவந்தமாகக் காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கான உலக தினமான நேற்று கொழும்பில் நடந்த நிகழ்வில் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் தமிழ் உறவுகள் பெருமெடுப்பில் கலந்துகொண்டனர்.

# உண்மையை மறைத்து வைத்து நல்லிணக்கத்தை அடையமுடியாது

## எதிர்க்கட்சித் தலைவர் சம்பந்தன் கொழும்பில் இடித்துரைப்பு

யாழ்ப்பாணம், ஓக. 31

"உண்மையை மறைத்து நல்லிணக்கத்தை ஒருபோதும் அடைய முடியாது. பலவந்தமாக காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கு என்ன நடந்தது? என்பதை முழுமையாக அறியவேண்டும். அது வெளிப்படுத்தப்படாதவரை நாட்டில் நல்லிணக்கம் ஏற்படாது"

இவ்வாறு எதிர்கட்சித் தலைவரும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவருமான இரா. சம்பந்தன் தெரிவித்தார்.

பலவந்தமாகக் காணாமல் ஆக்கப்பட்டோருக்கான உலக >> 24

## மாகாண சபைகள் ஒப்புதல் தராவிடினும் 20ஐ நிறைவேற்றுவதில் அரசு உறுதியாம்

யாழ்ப்பாணம், ஓக. 31

"அரசமைப்பின் 20ஆவது திருத்தச் சட்டவரைவுக்கு மாகாண சபைகள் அங்கீகாரமளிக்காவிடின் நாடாளுமன்றில் அதனை அரசு நிறைவேற்றும்" என்று >> 25

## தன்னைப் பதவி நீக்கியதை எதிர்த்து டெனீஸ் வழக்கு

### மேன்முறையீட்டு நீதிமன்றில் இன்று அல்லது 4ஆம் திகதி விசாரிக்கப்படலாம்

யாழ்ப்பாணம், ஓக. 31

வடமாகாண முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன் தன்னை அமைச்சர் பதவியிலிருந்து நீக்கியதை எதிர்த்து முன்னாள் அமைச்சர் பா. டெனீஸ்வரன் மேன்முறையீட்டு நீதிமன்றில் நேற்று ரிட் மனுத் தாக்கல் செய்தார். எனவே தன்னைப் பதவி நீக்கியதற்கு எதிராகத் தடை விதிக்கும்படியும் குணசீலன் மற்றும் >> 25

see more news in newuthayan.com

## ஜெனரல் ஜெகத் பிரேசிலிருந்து தப்பி ஓடி வரவில்லையாம்!



யாழ்ப்பாணம், ஓக. 31

முன்னாள் இராணுவத்தளபதியும், பிரேசிலுக்கான தூதுவருமான, ஜெனரல் ஜெகத்ஜயசூரியவுக்கு எதிராக பிரேசில் நீதிமன்றில் போர்க்குற்ற வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது. அதனையடுத்து அவர் அங்கிருந்து தப்பி கொழும்புக்குஓடி வந்துவிட்டார் என செய்திகள் வெளியாகின. அந்தச் செய்தியை அடியோடு மறுத்த இலங்கை அயலுறவு அமைச்சு, ஜெனரல் ஜெகத் ஜெயசூர்ய தனது >> 24

## போரின் போதான உயிரிழப்புக்கள் அனைத்தும் படுகொலையாகாது

### ஜெகத் மீதான வழக்கால் அரசு கடும் சீற்றம்

யாழ்ப்பாணம், ஓக. 31

"பயங்கரவாதத்தைத் தோற்கடிக்கவே நாங்கள் போர் செய்தோம். ஆதாரங்கள் இல்லாமல் இராணுவத் தளபதிகள் மீது போர்க் குற்றங்களைச் சுமத்த முடியாது. போரின் போது இடம்பெற்ற உயிரிழப்புகள் அனைத்தும் படுகொலை என்று எடுத்துக் கொள்ள முடியாது"

இவ்வாறு சுகாதார அமைச்சரும் அமைச்சரவை இணைப் பேச்சாளருமான >> 24

## குருசடித்தீவு படகு விபத்து

## சிகிச்சைகள் பயனளிக்காது மாணவி நேற்று உயிரிழப்பு

யாழ்ப்பாணம், ஓக. 30

யாழ்ப்பாணம் பண்ணைக் கடற்பரப்பில் கடந்த 24ஆம் திகதி நடந்த விபத்தில் நீரில் மூழ்கிக் காப்பாற்றப்பட்டு சிகிச்சைபெற்றுவந்த மாணவி ஒருவர் நேற்று உயிரிழந்தார்.

யாழ். பல்கலைக் கழக கலைப்பீட மூன்றாம் வருட மாணவியான சகாயதாசன் டயானா (வயது-23) என்பவரே உயிரிழந்தார். இவர் மண்பிட்டி நாவாந்துறையைச் சேர்ந்தவராவார்.

திடீர் இறப்பு >> 23

## டெங்கு ஒழிப்பில் சிக்கியது கஞ்சா

### தென்மராட்சியில் சம்பவம்



தென்மராட்சி, ஓக. 31

தென்மராட்சியில் நேற்று நடத்தப்பட்ட டெங்கு ஒழிப்பு நடவடிக்கையின்போது பயிரிடப்பட்டிருந்த கஞ்சாச் செடிகள் கண்டுபிடிக்கப்பட்டன. அதையடுத்து மேற்கொள்ளப்பட்ட சோதனையில் போத்தல்களில் அடைக்கப்பட்டிருந்த கஞ்சா பொதிகளும் கண்டுபிடிக்கப்பட்டன. >> 24

## பொறுப்புக்கூறலை இழுத்தடிப்பதாலேயே முன்னாள் தளபதி மீது போர்க்குற்ற வழக்கு

### கூட்டமைப்பு தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஓக. 31

"அரசு பொறுப்புக்கூறலை இழுத்தடித்து வருகின்றது. இதன் விளைவுதான், இலங்கையின் முன்னாள் இராணுவத் தளபதிக்கு எதிராகப் போர்க்குற்றவழக்குத்தாக்கல்செய்யும்நிலையைஉருவாக்கியுள்ளது" என்றுதமிழ்த்தேசியக்கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் அந்தக் கட்சியின் பேச்சாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்ததாவது:

முன்னாள் இராணுவத்தளபதியும், பிரேசிலுக்கான தூதுவருமான ஜெகத்ஜயசூரியவுக்கு எதிராக பிரேசிலில் போர்க்குற்ற வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள் ளது. காணாமற்போனோருக்காக அலுவலகம் நிறுவுவதற்கான சட்டம் நிறைவேற்றப்பட்டு பல மாதங்களாகியுள்ள போதும், அந்த அலுவல >> 24

## அபிவிருத்தி உத்தியோகத்தர் பரீட்சை முடிவு வெளியானது

யாழ்ப்பாணம், ஓக. 31

கடந்த ஜூலை மாதம் நடத்தப்பட்ட அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கான பரீட்சைப் பெறுபேறுகள் தற்பொழுது வெளியாகியுள்ளன.

வடக்கு மாகாணத்தின் பொதுச்சேவை ஆணைக்குழுவால் நடத்தப்பட்ட இந்தப் பரீட்சையில் வடக்கு மாகாண வேலையற்ற பட்டதாரிகள் மட்டும் >> 25

## மயக்க மருந்து விசிறி 35 பவுண் நகை திருட்டு

யாழ்ப்பாணம், ஓக. 31

யாழப்பாணம், அரியாலைப் பகுதியிலுள்ள வீடொன்றில் உறக்கத்திலிருந்தவர்களுக்கு மயக்க மருந்து விசிறிவிட்டு, அங்கிருந்த 35 பவுண் தங்க நகைகள் திருடப்பட்டுள்ளன. இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை இரவு இடம்பெற்றது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

யாழ்ப்பாணம், அரியாலை பில்தெனியா ஆலயத்துக்கு அருகாமையில் உள்ள வீடொன்றில் வெளிநாட்டிலிருந்து வருகை தந்த உறவினர்கள் தங்கி >> 24

# காணாமல் ஆக்கப்பட்டோருக்காக
# வடக்கு - கிழக்கில் போராட்டங்கள்

யாழ்ப்பாணம்,ஓக.31

காணாமல் ஆக்கப்பட்டோர் பன்னாட்டுதினத்தைமுன்னிட்டு வடக்கு - கிழக்கு மாகாணங்களில் நேற்று கவனவீர்ப்புப் போராட்டங்கள் நடத்தப்பட்டன. காணாமல் ஆக்கப்பட்ட தமது உறவுகளின் விவரங்களை வெளிப்படுத்தக் கோரி, அவர்களது படங்களைத் தாங்கியவாறு ஊர்வலமாக சென்று ஆர்ப்பாட்டங்கள் நடத்தப்பட்டன.


யாழ்ப்பாணம்


வவுனியா


கிளிநொச்சி


மன்னார்


திருகோணமலை



மட்டக்களப்பு

**யாழ்ப்பாணம்**

காணாமல் ஆக்கப்பட்டோர் தினம் நல்லூர் ஆலய முன்றலில் நேற்றுக் கடைப்பிடிக்கப்பட்டது. நல்லூர் ஆலய முன்றலில் இருந்த ஊர்வலமாக சென்ற உறவுகள் நாவலர் வீதியில் அமைந்துள்ள ஐக்கிய நாடுகள் சபை அலுவலகத்தில் மனு ஒன்றையும் கையளித்துள்ளனர்.

காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள், மனித உரிமை ஆர்வலர்கள், சிவில் சமூக அமைப்புகளைச் சேர்ந்தவர்கள் எனப் பலரும் இந்தப் போராட்டத்தில் கலந்து கொண்டனர்.

அதேவேளை காணாமல் ஆக்கப்பட்வர்களின் உறவினர்கள் யாழ்ப்பாணம் பேருந்து நிலையத்துக்கு முன்பாக சுமார் ஒரு மணி நேரம் போராட்டத்தில் ஈடுபட்டனர். வடமராட்சி கிழக்கு மருதங்கேணி பிரதேச செயலகத்துக்கு முன்பாக தொடர் போராட்டத்தில் ஈடுபட்டு வரும் உறவினர் ஒன்று கூடி இந்த கவனவீர்ப்பை நடத்தினர். அதில் மதகுருமார்கள்,தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் செயலாளர் செ.கஜேந்திரன், சிவில் சமூக அமைப்புகளின் பிரதிநிதிகள், மனித உரிமை ஆர்வலர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

**கிளிநொச்சி**

காணாமல் ஆக்கப்பட்டோர் பன்னாட்டு தினம் கிளிநொச்சி மாவட்டத்திலும் நேற்றுக் கடைப்பிடிக்கப்பட்டது. ஊர்வலத்துடன் கூடிய கவனவீர்ப்புப் போராட்டம் இடம்பெற்றது. கிளிநொச்சி கந்தசுவாமி ஆலயத்துக்கு அருகில் ஆரம்பமான கவனவீர்ப்புப் ஊர்வலம் கிளிநொச்சி மாவட்ட செயலகம் வரை சென்றது. மாவட்ட செயலகத்தைச் சென்றடைந்த காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள், மாவட்டச் செலக முன்றலில் ஒன்றுகூடிப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

போராட்டத்தில் காணமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள், சமூக ஆர்வலர்கள், நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன், முன்னாள் வடமாகாண கல்வியமைச்சர் குருகுலராஜா எனப் பலரும் கலந்து கொண்டனர்.

**வவுனியா**

காணாமல் ஆக்கப்பட்டோர் பன்னாட்டு தினத்தை முன்னிட்டு வவுனியாவில் கவனவீர்ப்புப் ஊர்வலம் நடத்தப்பட்டது. வவுனியா பேருந்து நிலையத்தில் இருந்து ஆரம்பமான ஊர்வலம் ஏ9 வீதி வழியாகச்சென்று வவுனியா நகரசபை மண்டபத்தை சென்றடைந்தது. நேற்றைய போராட்டத்தில் கையளிக்கப்பட்டு கடத்தப்பட்டு காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளை தேடிக்கண்டறியும் குடும்பங்களின் சங்கத்தின் பன்னாட்டு காணாமல் ஆக்கப்பட்டோர் தின பிரகடனம் செய்தனர். அதில் நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன், வட மாகாண அமைச்சர் அனந்தி சசிதரன், வட மாகாண சபை உறுப்பினர்கள் உட்பட பலரும் கலந்து கொண்டிருந்தனர்.


வவுனியா


முல்லைத்தீவு

**மன்னார்**

வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோருக்கான பன்னாட்டு தினம் மன்னாரில் நேற்றுக் கடைப்பிடிக்கப்பட்டது. தலைமன்னார் பிரதான வீதியில் அமைந்துள்ள மன்னார் பிரஜைகள் குழு அலுவலகத்தில் இருந்து கவனவீர்ப்புப் ஊர்வலம் ஆரம்பமானது. கறுப்புக் கொடிகளை கைகளில் ஏந்தியவாறும், பல்வேறு வசனங்கள் எழுதப்பட்ட பதாதைகளை ஏந்தியவாறும் ஊர்வலத்தில் மக்கள் கலந்து கொண்டிருந்தனர். மன்னார் பிரஜைகள் குழு அலுவலகத்தில் இருந்து ஆரம்பமான ஊர்வலம் மன்னார் பொது வைத்தியசாலை வீதியூடாக மன்னார் பஸார் பகுதியைச் சென்றடைந்தது.

அங்கு காணாமல் ஆக்கப்பட்டவர்களின் குடும்ப உறவினர்களால் அமைதிப் போராட்டம் மேற்கொள்ளப்பட்டது. போராட்டத்தில் மன்னார் மாவட்டத்தில் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் சுமார் நூறுபேர் வரையில் கலந்து கொண்டனர். வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளைத்தேடும் குடும்பங்களின் சங்கம் மற்றும் மன்னார் பிரஜைகள் குழு ஆகியவை இணைந்து மன்னாரில்கவனவீர்ப்புப் போராட்டத்தை முன்னெடுத்தன. போராட்டத்துக்கு ஆதரவு தெரிவித்து தமிழ் தேசியக்கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன், வடமாகாண சுகாதார அமைச்சர் வைத்திய கலாநிதி ஜீ.குணசீலன், மன்னார் மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றிய தலைவர் வி.எஸ்.சிவகரன், ஈ.பி.ஆர்.எல்.எப்.அமைப்பின் மாவட்ட அமைப்பாளர் எஸ்.ஆர்.குமரேஸ் , மன்னார் சமாதான அமைப்பின் தலைவர் பி.ஏ.அந்தோனி மார்க் மற்றும் அருட்தந்தை ஆகியோர் கலந்து கொண்டனர்.

**முல்லைத்தீவு**

காணாமல் ஆக்கப்பட்டோர் பன்னாட்டுத் தினத்தை முன்னிட்டு முல்லைத்தீவில் கவனவீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. மாவட்டச் செயலகத்துக்கு முன்பாக போராட்டம் நடத்தப்பட்டது. 'சிந்துவதற்கு கண்ணீர் இல்லை, பிள்ளைகளை உடன் விடுதலை செய்யுங்கள்', 'காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பிலான விசாரணையை விரைவுபடுத்துங்கள்', 'தடுத்து வைத்துள்ள எங்கள் உறவுகளை விடுதலை செய்யுங்கள்' போன்ற பாதாதைகளை தாங்கியவாறு போராட்டம் மேற்கொள்ளப்பட்டது. அதில் முல்லைத்தீவு மாவட்டத்தைச் சேர்ந்த காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள், மக்கள் பிரதிநிதிகள் மற்றும் சிவில் சமூகத்தினர் எனப் பெருந்திரளானோர் கலந்து கொண்டனர்.

**திருகோணமலை**

காணாமல் ஆக்கப்பட்டவர்களின் தினத்தில் உறவுகள் ஒன்று கூடி நேற்றுப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

எமது போராட்டம் தொடர்ந்தும் இடம் பெறும்.

ஒரு தீர்வை அடைந்த பின்னரே முடிவுக்குக் கொண்டு வரப்படும். நாம் கோரி நிற்கின்ற தீர்வைப் பெற்றுக் கொடுக்க அனைத்து அமைப்புக்களும் எம்மோடு கைகோர்க்க வேண்டும்" என்று கடத்தப்பட்டு காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் திருகோணமலை மாவட்டச் சங்க தலைவி திருமதி. நாகேந்திரம் ஆசா தெரிவித்தார்.

**மட்டக்களப்பு**

"எங்களின் அன்புக்குரிய உறவுகளைப் பற்றிய உண்மையைக் கண்டறியும் வரை எமது பயணம் தொடரும்" எனும் தொனிப்பொருளில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கான பன்னாட்டு தினம் மட்டக்களப்பில் கடைப்பிடிக்கப்பட்டது. மட்டக்களப்பு காந்தி பூங்கா முன்றலில் ஒன்றுகூடிய காணாமல் ஆக்கப்பட்ட உறவுகள், காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தமக்குத் திரும்பக் கிடைக்க வேண்டும் என்று வேண்டி சுடர் ஏற்றி பிரார்த்தனையும் செய்தனர்.

காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களால் இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவின் மட்டக்களப்பு பிராந்திய ஆணையாளர் ஏ.சி.எம். அஸிஸிடம் தமது கோரிக்கைகள் அடங்கிய மனுவைக் கையளித்தனர்.

(ஐ-6,8,35,40,47)



பாதுகாப்புச் செயலாளர் கபில வைத்தியரத்ன தலைமையில் பாதுகாப்பு ஆலோசகர்களுடனான கலந்துரையாடல் பாதுகாப்பு அமைச்சில் நேற்று நடைபெற்றது. அதில் பாதுகாப்புச் செயலாளர் ஆர் எம் எஸ் சரத் குமார, பாதுகாப்பு அமைச்சின் இராணுவ இணைப்பதிகாரி மேஜர் ஜெனெரல் டீ ஏ ஆர் ரணவக மற்றும் மூத்த இராணுவ அதிகாரிகள் கலந்து கொண்டனர். (ஐ-ரி-2)

# மகிந்தவின் அறிவிப்புகளில் எந்த உண்மையும் இல்லை

## துமிந்த திஸநாயக்க சுட்டிக்காட்டு

கொழும்பு. ஒக.31
சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவர் என்று மகிந்த ராஜபக்ச விடுவிக்கும் அறிவிப்புகளில் எந்த உண்மையும் இல்லை. இவ்வாறு அந்தக் கட்சியின் பொதுச் செயலாளர் துமிந்த திஸாநாயக்க தெரிவித்தார்.
கொழும்பில் நேற்று நடத்தப்பட்ட ஊடக சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அவர் தெரிவித்தாவது;
மகிந்த கட்சியின் தலைவர் அல்லர். அவர் கட்சியின் மூத்த தொண்டர் என்பதை நினைவில் வைத்துக் கொள்வது சிறந்தது.
கட்சியின் கொள்கைக்கு அமைய தற்போதைய அரச தலைவரே கட்சியின் தலைவர். - என்றார். (ற)

# புலம்பெயர் தமிழர்களே ஜகத்துக்கு எதிராக வழக்கு

## முன்னாள் இராணுவ அதிகாரி தெரிவிப்பு

கொழும்பு.ஒக.31
புலம்பெயர் தமிழர்களே முன்னாள் இராணுவத் தளபதி ஜகத் ஜயசூரியவுக்கு எதிராக போர்க்குற்ற வழக்குத் தாக்கல் செய்துள்ளனர் என்று ஓய்வுபெற்ற இராணுவ மேஜர் ஜனரல் கமல் குணரத்ன தெரிவித்துள்ளார்.
இலங்கையின் முன்னாள் இராணுவத்தளபதி ஜகத் ஜயசூரியவுக்கு எதிராக பிரேஸிலில் போர்க்குற்ற வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளமை தொடர்பாக வினவிய போதே அவர் இதனைத் தெரிவித்தார். "ஜகத் ஜயசூரியவுக்கு எதிராக போர்க்குற்றச்சாட்டுக்களை முன் வைப்பதற்கு எந்தக் காரணங்களும் இல்லை. ஜகத் ஜயசூரிய போருக்குக் கட்டளையிடும் அதிகாரியாகச் செயற்படவில்லை. அவர் உணவு, வாகன விநியோகங்களை ஒழுங்குப டுத்ததும் பணிகளில் ஈடுபடுத்தப்பட்டிருந்தார். போருக்கான கட்டளைகள் இராணுவத்திடம் இருந்தே வந்தது. தீவிரவாதத்துக்கு முழுமையாக ஒத்துழைத்து, நிதியுதவி வழங்கிய புலம்பெயர் தமிழர்களே ஜகத் ஜகசூரியவுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்துள்ளனர்.
பிரேஸிலில் உள்ளவர்களுக்கு இவ்வாறான வழக்குத் தாக்கல் செய்ய வேண்டிய தேவை இல்லை. அவர்களது நாடுகளில் இதைவிட மோசமான நிலைமை காணப்பட்டது" எனவும் அவர் குறிப்பிட்டார். (ஐ-33)

# உழவு இயந்திரத்திலிருந்து தவறி விழுந்தவர் உயிரிழப்பு

முல்லைத்தீவு.ஒக.31
உழவு இயந்திரத்தில் பயணித்த சமுர்த்தி உத்தியோகத்தர் தவறி விழுந்து உயிரிழந்தார்.



அவர் ஒரு பிள்ளையின் தந்தை எனத் தெரிவிக்கப்பட்டது. இந்த விபத்து தண்ணீரூற்று புதறிகுடாப் பகுதியில் நேற்றுக் காலை நடந்தது. அவர் உழவியந்திரத்திரத்தின் மட்காட்டில் பயணித்துக் கொண்டிருந்த போது தவறுதலாக வீழ்ந்தார். அவரது தலையில் படுகாயம் ஏற்பட்டது எனத் தெரிவிக்கப்பட்டது.
முள்ளியவளை தண்ணீரூற்று மேற்கைச் சேர்ந்த ஒரு பிள்ளையின் தந்தையான துரைசிங்கம் நிசாந்தன் (34) என்பவரே உயிரிழந்தார் எனத் தெரிவிக்கப்பட்டது.
அவர் முல்லைத்தீவு கரைதுறைப்பற்று பிரதேச செயலகத்தின் சமூர்த்தி திட்டப் பிரிவில் பணியாற்றியவர். அவரது சடலம் மாஞ்சோலை மாவட்ட வைத்தியசாலைக்கு எடுத்து செல்லப்பட்டது.
வீதிப் போக்குவரத்துப் பிரிவு பொலிஸாரின் விசாரணைகளின் பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. உழவு இயந்திரத்தைச் செலுத்திச் சென்ற நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.
சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை முள்ளியவளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

## காணாமல் ஆக்கப்பட்டோர் விவகாரம்

# பன்னாடுகளின் தலையீடு அவசியம்

## வடக்கு மாகாண முதலமைச்சர் தெரிவிப்பு



யாழ்ப்பாணம்.ஒக.31
காணாமல் ஆக்கப்பட்டோர் விவகாரத்தில் அரசால் ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எதுவும் இதுவரை எடுக்கப்படவில்லை. இந்த விவகாரத்தில் பன்னாடுகள் அரசுக்குத் தொடர்ந்தும் அழுத்தம் கொடுக்க வேண்டும்.
இவ்வாறு வடக்கு முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வ ரன் தெரிவித்தார்.
பன்னாட்டு காணாமல் ஆக்கப்பட்டோர் தினம் தொடர்பில் அவர் நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.
அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;
காணாமல் ஆக்கப்பட்டோர் தினத்தில் வடக்குக் கிழக்கு மாகாணங்களில் கவனவீர்ப்புப் போராட்டங்கள் நடைபெற்று வருகின்றன. பல தடவைகள் நாங்கள் எழுத்து மூலமும், வாய் மூலமும் அரசிடம் கோரிக்கை விடுத்திருந்தோம். காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பாக உரிய நடவடிக்கை எடுக்குமாறு கூறியிருந்தோம். ஆனால் இதுவரை ஆக்கபூர்வமான எந்த நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை. ஏற்றுக்கொள்ளக்கூடிய நடவடிக்கைகளை விரைந்து எடுப்பதாக பன்னாடுகளுக்கு அரசு கூறியும், நடைமுறையில் எந்தவொரு நடவடிக்கையும் செயற்படுத்தவில்லை. அதனால் எமது அரசுக்கு மேலதிக இரு வருடங்கள் காலக்கேடு விதித்த பன்னாடுகள், காணாமல் ஆக்கப்பட்டோர் சம்மந்தமாகப் போதிய நெருக்குதல்களை அரசுக்கு ஏற்படுத்த வேண்டும் என்று நாங்கள் கோருகின்றோம் - என்றுள்ளது. (ஐ-ரி-2)

# பரீட்சை முறைகளை மாற்ற குழு நியமிப்பு

கொழும்பு ஒக 31
தற்போதைய பரீட்சை முறைகளை மாற்றியமைப்பதற்கு நிபுணர்கள் அடங்கிய குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது என்று கல்வி அமைச்சர் அகில விராஜ் காரியவசம் தெரிவித்துள்ளார்.
கல்வி அமைச்சில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கலந்து கொண்டு கருத்தத் தெரிவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார். "தற்போதைய பரீட்சை முறையினூடாக மாணவர்களின் கல்வி மட்டத்தில் மாற்றம் ஏற்பட்டுள்ளது. சாதாரண தரப் பரீட்சையின் பின்னர் உயர்தரத்துக்குச் செல்லும் மாணவர்களுக்கு 26 புதிய பாடத்திட்டங்கள் அறிமுகம் செய்யப்பட்டுள்ளன. அவை எதிர்வரும் ஒக்ரோபர் மாதத்தில் இருந்து ஆரம்பிக்கப்படும்" என்றும் கல்வி அமைச்சர் குறிப்பிட்டார். (ஐ-ரி-2)

ENGLISH
ஆங்கில மொழி
(வெளிநாடு செல்பவர்களுக்கான IELTS, A1)




Course fee 8,500/-
Register fee 1,000/-
மேலதிக தகவல்களுக்கு அழையுங்கள்
076 737 44 44
BRC
BRITISH ROYAL COLLEGE
267, Power House Road, Jaffna.
T-021 493 6666 M-076 584 22 22
E-mail: collegebritishroyal@gmail.com
Web: www.britishroyalcollege.com

# மியன்மார் விவகாரத்தில் ஐ.நா. தலையிடவேண்டும்

## இலங்கைப் பிரதிநிதியிடம் அமைச்சர் ஹிஸ்புல்லாஹ் கோரிக்கை

கொழும்பு.ஒக.31

மியன்மாரில்ரோஹிங்யாமுஸ்லிம்கள் மீது மேற்கொள்ளப்படும் வன்செயல்களை உடனடியாகத் தடுத்து நிறுத்தி, பாதிக்கப்பட்ட மக்களுக்கு நியாயமான தீர்வைப் பெற்றுக்கொடுக்க ஐக்கிய நாடுகள் சபை முன்வர வேண்டும். இவ்வாறு புனர்வாழ்வு மற்றும் மீள்குடியேற்ற இராஜாங்க அமைச்சர் எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லாஹ் ஐ.நா. சபையிடம் எழுத்து மூலம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

ரோஹிங்யா முஸ்லிம்களின் சமகால பிரச்சினைகள் தொடர்பாக ஐக்கிய நாடுகள் சபையின் புலம்பெயர்ந்தலுக்கான பன்னாட்டு அமைப்பின் இலங்கை மற்றும் மாலைதீவுக்கான தலைமை அதிகாரி ஜூசெப்பே க்ரொசெட்டியை கொழும்பில் அமைந்துள்ள அவரது அலுவலகத்தில் நேற்று சந்தித்தார். அந்தச் சந்திப்பிலேயே அவர் இந்த வேண்டுகோளை விடுத்துள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டது.

'மியன்மாரில் ராங்கைன் மாநிலத்தில் சுமார் 11 இலட்சத்துக்கும் அதிகமான ரோஹிங்யா முஸ்லிம்கள் வாழ்கின்றனர். அவர்கள் அங்கு ஆயிரத்து 1200 வருடங்களுக்கு மேல் வாழ்ந்து வருவதாக வரலாற்றுச் சான்றுகள் இருந்தும் அம்மக்களுக்குக் குடியுரிமை வழங்க மியன்மார் அரசு முன்வரவில்லை. குடியுரிமை இல்லாமையால் எந்த உரிமையும் அற்ற சமூகமாக மிகவும் மோசமான முறையில் பௌத்த தேசியவாத அமைப்புக்களாலும் , மியன்மார் அரசாலும் ஒடுக்கப்பட்டு வருகின்றனர்.

உலகின் மிகப்பெரிய 'நாடற்ற சிறுபான்மை சமூகமாக' அடையாளப்படுத்தப்படும் ரோஹிங்யா முஸ்லிம்கள் மீது பௌத்த தேசியவாத அமைப்புக்களினதும் , மியன்மார் இராணுவத்தினதும் வரம்பு மீறிய அட்டூழியங்கள், தாக்குதல்கள் கடந்த சில தினங்களாக அதிகரித்துள்ளன. ரோஹிங்யா முஸ்லிம்கள் விடயத்தில் பன்னாட்டுச் சமூகம் மற்றும் ஐ.நா. தலையீடு செய்து அம்மக்களுக்கு நியாயமான தீர்வைப் பெற்றுக்கொடுக்க வேண்டும். ரோஹிங்யா முஸ்லிம்கள் மீதான தாக்குதல்களால் இலங்கை முஸ்லிம்கள் மிகவும் ஆழ்ந்த கவலையுடன் இருப்பதுடன் தங்களது எதிர்ப்பையும் வெளியிட்டு வருகின்றனர்.

இலங்கை முஸ்லிம்கள் சார்பில் இந்த விடயத்தில் ஐ.நா.சபை சுமூகமான தீர்வை வழங்க வேண்டும் எனவும் இராஜாங்க அமைச்சர் வலியுறுத்தினார் எனத் தெரிவிக்கப்பட்டது. (ஐ-47)

## முஸ்லிம்கள் தாக்கப்படுவதை தடுத்து நிறுத்தக் கோரிக்கை



திருமலை.ஒக.31

முழு மனித குலமும் வெட்கி தலை குனியும் வண்ணம் மியன்மார் அரக்கான் மாநிலத்தில் முஸ்லிம்கள் மீது நடத்தப்படும் தாக்குதல்களை தடுத்து நிறுத்த நடவடிக்கை எடுக்குமாறு கிண்ணியா உலமா சபை, சூரா சபை என்பன கோரிக்கை விடுத்துள்ளன.

பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ருவன் விஜேவர்தன வுடனான சந்திப்பு கிண்ணியா நூலக கேட்போர் கூடத்தில் நேற்று நடைபெற்றது. அதில் கலந்து கொண்ட அமைப்பின் பிரதிநிதிகள் இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளனர். அது தொடர்பான மனு ஒன்றையும் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சரிடம் கையளித்தனர்.




## வறட்சி பாதித்த மக்களுக்கு உதவிகள்

பளை.ஒக.31

பச்சிலைப்பள்ளி பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட தம்பகாமம், வண்ணாங்கேணி கிராம மக்களுக்கு வறட்சி உதவிகள் நேற்றுக் காலை வழங்கப்பட்டது. நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் விஜயகலா மகேஸ்வரனின் பிரதிநிதி ஒருவரும் இணைந்து உதவிப் பொருள்களை வழங்கினர். மூன்று அங்கத்தவர்களுக்கு அதிகமுள்ள குடும்பத்தினருக்கு இரண்டாயிரத்து 500 ரூபா பெறுமதியான உலர் உணவுப் பொருள்களும், இரண்டு அங்கத்தவர்களுக்குக் குறைந்த குடும்பத்தினருக்கு இரண்டாயிரம் ரூபா பெறுமதியான உலர் உணவுப் பொருள்களும் வழங்கப்பட்டன.

கிராம சேவகர் எஸ். சுதர்சன் தலைமையில் நிகழ்வு நடைபெற்றது. அதில் பச்சிலைப்பள்ளிப் பிரதேச செயலர் ஜெயராணி பரமோதயன், சமுர்த்தி உத்தியோகத்தர், பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர், பச்சிலைப்பள்ளி இடர் முகாமைத்துவ உத்தியோகத்தர், கிளிநொச்சி மாவட்ட இடர் முகாமைத்துவ உத்தியோகத்தர் மற்றும் கிராம மக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (ஐ-ரி2.6)

## புலிகளின் இலச்சினை பொறித்த துண்டறிக்கைகள் வவுனியாவில்



வவுனியா ஒக 31

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் இலச்சினை பொறிக்கப்பட்ட துண்டறிக்கைகள் வவுனியாவின் சில பகுதிகளில் நேற்றுப் பரவலாகக் காணப்பட்டன. அவை மதில் சுவர்களில் ஒட்டப்பட்டும், வீதியோரங்களில் வீசப்பட்டும் காணப்பட்டன.

" துண்டறிக்கைகள் எவ்வாறு வந்தது? யார் அவற்றை போட்டார்கள்? என்பன பற்றி இதுவரை எந்த தகவலும் வெளிவரவில்லை. அவை தொடர்பில் பொலிஸாரும் அரச புலனாய்வுப் பிரிவினரும் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர் என்று வவுனியா பொலிஸார் தெரிவித்தனர். (வ-8)

## தொண்டமானின் பிறந்த தினம் கடைப்பிடிப்பு

கொழும்பு.ஒக.31

மலையகத்தின் மூத்த தலைவர்களில் ஒருவரான சௌமியமூர்த்தி தொண்டமானின் 104ஆவது பிறந்த தினம் நேற்றுக் கடைப்பிடிக்கப்பட்டது. கொழும்பு, காலி முகத்திடலின் அரச தலைவரின் செயலகத்தில் காணப்படும் தொண்டமானின் சிலைக்கு மலர்மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தப்பட்டது. மலையக மக்கள் முன்னணியின் தலைவரும் தமிழ் முற்போக்குக் கூட்டணியின் பிரதி தலைவரும் கல்வி இராஜாங்க அமைச்சருமான வே. இராதாகிருஸ்ணனும் அஞ்சலி செலுத்தினார். (ஐ)

## ஹெரோயின் விற்பனை இளைஞர்கள் மூவர் கைது

மட்டக்களப்பு.ஒக.31

ஹெரோயின் போதைப் பொருள் விற்பனையில் ஈடுபட்ட இளைஞர்கள் மூவர் நேற்றுக் கைது செய்யப்பட்டனர். ஏறாவூர் பொலிஸ் பிரிவிலுள்ள தாமரைக்கேணி ஏறாவூர் நகர் மற்றும் மீராகேணி பகுதிகளில் வைத்து அவர்கள் கைது செய்யப்பட்டனர் எனத் தெரிவிக்கப்பட்டது. சந்தேக நபர்களிடமிருந்து ஹெரோயின் போதைப் பொருள்களும் கைப்பற்றப்பட்டுள்ளன. அவர்கள் நீதிமன்றில் முற்படுத்தப்படுவர் என்று பொலிஸார் தெரிவித்தனர். (ஐ)



## டிப்பருடன் மோதியது ஹன்ரர் ஒருவர் சாவு; மூவர் படுகாயம்

வவுனியா.ஒக.31

வீதியில் தரித்து நின்ற டிப்பருடன் ஹன்ரர் மோதி விபத்துக்குள்ளானது. அதில் ஒருவர் உயிரிழந்தார். மூவர் படுகாயமடைந்தனர் எனத் தெரிவிக்கப்பட்டது. இந்த விபத்து வவுனியா கல்குண்ணாமடுவப் பகுதியில் நேற்று அதிகாலை 4.45 மணியளவில் நடந்தது.

ஓடுகளை ஏற்றிக் கொண்டு அனுராதபுரத்திலிருந்து வவுனியா நோக்கி வந்த டிப்பர் கல்குண்ணாமடுவ பகுதியில் எவ்வித சமிச்சை விளக்குகளுமின்றி தரித்து நின்றது. அதே வீதியால் வீட்டின் மேல் கூரை அலகரிப்புப் பொருள்களை ஏற்றி வந்த ஹன்ரர் . தரிந்து நின்ற டிப்பருடன் மோதி விபத்துக்குள்ளானது. அதில் தரித்து நின்ற டிப்பர் தடம்புரண்டது.

இந்த விபத்தில் தரித்து நின்ற டிப்பரில் பயணித்த வன்னிமுத்து கிருஸ்ணன் (வயது 48) என்பவர் உயிரிழந்தார். மூவர் படுகாயமடைந்தனர். அவர்கள் வவுனியா மாவட்டப் பொது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டது.

இந்த விபத்துத் தொடர்பான மேலதிக விசாரணைகளைப் போக்குவரத்துப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ,ரி2402)

## சிலாபத்துறை மருத்துவமனை சிறுவர் நோயாளர் விடுதி திறப்பு



மன்னார்.ஒக.31

முசலி பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட சிலாபத்துறை மருத்துவமனையில் அமைக்கப்பட்ட சிறுவர் நோயாளர் விடுதி நேற்றுத் திறக்கப்பட்டது. விடுதியை வடமாகாண சுகாதார அமைச்சர் மருத்துவர் ஜீ. குணசீலனுடன், இலங்கைக்கான ஐரோப்பிய ஒன்றியத்தின் பிரதி நிதி மற்றும் யுனிசெப் அமைப்பின் பிரதி நிதி ஆகியோர் இணைந்து திறந்து வைத்தனர்.

ஐரோப்பிய ஒன்றியத்தின் உதவியுடன், யுனிசெப் அமைப்பினூடாக சுமார் 20 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீட்டில் இந்த விடுதி அமைக்கப்பட்டது எனத் தெரிவிக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் மன்னார் மாவட்டப் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் திருமதி யூட் ரதனி, மன்னார் உதவிப் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் கில்றோய் பீரிஸ்,முசலி சுகாதார வைத்திய அதிகாரி ஒஸ்மன் சாள்ஸ் ஆகியோர் கலந்து கொண்டர். (ஐ-56)

## தெல்லிப்பழை துர்க்கை அம்மனின் கைலாய வாகனக் காட்சி இன்று

யாழ்ப்பாணம், ஒக. 31
தெல்லிப்பழை துர்க்காதேவி ஆலய வருடாந்தத் திருவிழாவில் இன்று மாலை 6 மணிக்கு அம்பாள் கையிலாய வாகனத்தில் காட்சியளிப்பார் என்று அறிவிக்கப் பட்டது.
(வ)

## சிறுப்பிட்டி சுடலை விவகாரம்; 28 பேருக்கும் நேற்றுப் பிணை

மல்லாகம், ஒக 5
புத்தூர் மேற்கு, சிறுப்பிட்டி கிந்துப் பிட்டி சுடலையின் சுற்று மதிலை இடித்தனர் என்ற குற்றச்சாட்டில் நீதிமன்றால் தொடர்சியாக விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த 28 பேருக்கும் நேற்று கடும் நிபந்தனைகளுடன் பிணை வழங்கப்பட்டது.
புத்தூர் மேற்கு, சிறுப்பிட்டி சுடலை அமைவிடம் தொடர்பில் சிலர் எதிர்ப்புத் தெரிவித்தனர்.
மற்றொரு தரப்பு அந்தச் சுடலை தொடர்ந்தும் அதில் இருக்க வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டனர். அது தொடர்பான முரண்பாடுகளின் போது, நீதிமன்ற அனுமதியுடன் அந்த மாய னத்துக்கு அமைக்கப்பட்ட மதிலின் ஒரு பகுதி உடைக்கப்பட்டது. அதனுடன் தொடர்புடைய குற்றச்சாட் டில் 8 பேர் கைது செய்யப்பட்டனர்.
மயானத்தின் மதில் உடைத்தனர் என்ற குற்றச்சாட்டில் 45 பேரின் விவரங்கள் அடங்கிய பட்டியலை அச்சுவேலிப் பொலிஸார் மல்லாகம் நீதிவான் மன்றில் சமர்ப்பித்தனர். அந்த 45 பேரையும் கைது செய்து மன்றில் முற்படுத்துமாறு நீதிவான் உத்தரவிட்டிருந்தார்.
அவர்களில் அரசியல் கட்சி ஒன்றின் செயற்பாட்டாளர் உள்ளிட்ட 6 பேர் முதலில் நீதிமன்றில் சரணடைந்தனர். அவர்கள் 6 பேரும் விளக்கமறியலில் வைக்கப்பட்டனர்.
மேலும் 39 பேர் மல்லாகம் நீதிவான் மன்றில் கடந்த மாதம் சரணடைந்தனர். அவர்களில் சிலருக்கு மட்டும் பிணை வழங்கப்பட்டது.
இந்த வழக்குடன் தொடர்புடைய 28 பேர் நீதிமன்றால் தொடர்ச்சியாக விளக்கமறியலில் வைக்கப் பட்டிருந்தனர்.
அரசியல் கட்சிச் செயற்பாட்டாளர் செல்வம் உள்ளிட்ட அனைவருக்கும் நேற்று கடும் நிபந்தனையுடன் மல்லாகம் நீதிவான் மன்றால் பிணை வழங்கப்பட்டது.
(வ-37)



## நெல்லியடியில் பொலிஸ் நடமாடும் சேவை

யாழ்ப்பாணம், ஒக.31
நெல்லியடி பொலிஸாரின் நடமாடும் சேவை தச்சை ஜங்கரன் அறநெறிபாடசாலை மண்டபத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது.
சிறப்பு விருந்தினராக காங்கேசன்துறை பொலிஸ் அத்தியட்சகர் ரஞ்சித் மாசிங்க, வடக்கு மாகாணசபை உறுப்பினர் சி.அகிலதாஸ் வடமராட்சி இறப்பு விசாரணை அதிகாரி பாஸ்கரன், நெல்லியடி, பருத்தித்துறை பொலிஸ்பொறுப்பதிகாரிகள், கரவெட்டி ஒன்றியத்தின் தலைவர் உபாலி பொன்னம்பலம் உட்பட பலர் கலந்துகொண்டனர்.
இதன்போது கர்ப்பிணித்தாய்மார்களுக்கு உணவுப் பொதிகளும், பாடசாலை மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்களும், பொதுமக்களுக்கு தென்னை நாற்றுகளும், கணவனை இழந்த இரண்டு பிள்ளைகளின் தாயாருக்கு வீடுகட்டுவதற்கு முதற்கட்டமாக ஒருதொகை காசோலையும், 15 பைக்கற் சீமெந்தும் வழங்கப்பட்டன.
(ய)

## சந்நிதியான் ஆச்சிரம முதல்வருக்கு தமிழகத்தினால் கலாநிதிப் பட்டம்

யாழ்ப்பாணம், ஒக.31
சரித்திரப்பிரசித்தி பெற்ற தொண்டைமானாறு செல்லவச்சந்நிதி ஆலய சுற்றாடலில் கடந்த 25 ஆண்டுகளுக்கு மேலாக அன்னதான ஆன்மீக சமுகப்பணிகளை மேற்கொண்டுவரும் சந்நிதியான் ஆச்சிரம முதல்வர். செ.மோகனதாஸ் சுவாமிகளுக்கு தமிழ் நாடு மத்தியபல்கலைக்கழகம் கௌரவ கலாநிதிப்பட்டத்தை வழங்கி கௌரவித்துள்ளது.
குறித்த பல்கலைக்கழக வேந்தர் கலாநிதி வி.கிருஷ்ணமூர்த்தி துணை வேந்தர் பேராசிரியர் .ஏ.பி.தாஸ் ஆகியோரின் கையொப்பத்துடன் கூடிய பட்டச் சான்றிதழ் வழங்கும்நிகழ்வு இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் கொழும்பு தலைமைச் செயலக தொழிநுட்ப பயிற்சி திணைக்கள பணிப்பாளர் நா .யோகராஜா தலைமையில் நடைபெறவுள்ளது.
(ய-173)

## தாயக உறவுகளின் போராட்டத்துக்கு வலுச்சேர்க்க லண்டனில் கவனவீர்ப்பு




லண்டன், ஒக. 31
உலக பலவந்தமாக காணாமல் ஆக்கப்பட்டோர் தினத்தை முன்னிட்டு புலம்பெயர் தமிழர்களால் நேற்று லண்டனில் கவனவீர்ப்பு போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.
தாயகத்தில் காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் போராட்டங்களுக்கு வலுச் சேர்க்கும் வகையில் இந்தப் போராட்டம் நடத்தப்பட்டது.
நாடு கடந்த தமிழீழ அரசால் ஒழுங்கமைக்கப்பட்ட இந்தப் போராட்டம் பிரிட்டன் தலைமை அமைச்சரின் அலுவலகத்துக்கு முன்பாக நடைபெற்றது.
காணாமற்போனவர்கள் எங்கே ? அவர்கள் தொடர்பான பதில்களை வழங்கு? ஐநாவே ஏன் இந்த அமைதி? பிரிட்டன் அரசே இலங்கை அரசுக்கு அழுத்தம் கொடு? போன்ற வாசகங்கள் பொறிக்கப்பட்ட பதாதைகளை உறவுகள் தாங்கி நின்றனர்.
காலநிலை இடையூறு விளைவித்தலையும் பொருட்படுத்தாது புலிக்கொடியை ஏந்தியவாறு போராட்டத்தில் கலந்துகொண்ட அனைவரும் உணர்வு பூர்வமான கோசங்களை எழுப்பினார்கள். காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பில் இலங்கை அரசு விரைவில் பதில்களை வழங்க பிரிட்டன் அழுத்தம் கொடுக்கவேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்து பிரிட்டன் தலைமை அமைச்சருக்கான மனுவும் கையளிக்கப்பட்டது.
(வ-5)

## செம்மணி கண்டி வீதியில் சீரான சுற்றுவட்டம் அமைக்க கோரிக்கை

யாழ்ப்பாணம், ஒக.31
செம்மணி சாலையும், கண்டி முதன்மைச் சாலையும் சந்திக்கும் பகுதியில் சீரான சுற்றுவட்டம் அமைக்கப்படாததன் காரணமாக அதிகளவான விபத்துகள் இடம் பெறுவதைக் காணக் கூடியதாக உள்ளது.
இந்தவிடயம் தொடர்பில் குறித்த அதிகாரிகளுக்கு கடந்த வருடம் சுட்டிக்காட்டப்பட்டது.
அந்த இடத்தில் பொருத்தமற்றதாகக் காணப்பட்ட சுற்றுவட்டம் இந்த இடத்திலிருந்து அகற்றப்பட்டதே தவிர, ஒரு வருடத்துக்கு மேலாகியும் இன்னும் மீள அமைக்கப்படவில்லை என்று குற்றஞ்சாட்டப்படுகிறது.
யாழ்ப்பாண வளைவுக்கு அண்மையில் அமைந்துள்ள இப்பிரதேசத்தை அதிகளவான மக்கள் போக்குவரத்து செயற்பாட்டுக்கு பயன்படுத்தி வருகின்றனர். இந்நிலையில் அந்தச் சாலையில் ஒரு ஒழுங்கமைப்பு இல்லாத சுற்றுவட்டம் உள்ளதால் பயணிகள் அசௌகரியங்களை எதிர்நோக்குகின்றனர்.
மேலும் இப்பாதையினூடாக அதிகளவான கனரக வாகனங்களும் செல்வதால் போக்குவரத்து நெரிசலான சாலையாக காணப்படுகின்றது.
அத்துடன் வெளிமாவட்ட வாகனங்கள் யாழ்ப்பாணத்துக்கு உள்நுளைவதும் இப் பிரதேசத்தில்தான்.
எனவே இதன்காரணமாக வெளிப்புறத்திலிருந்து வருகைதருபவர்களும் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்குகின்றனர்.
அத்துடன் யாழ்ப்பாண நகரத்தில் கல்விகற்கும் மாணவர்கள், உத்தியோகத்தர்கள் எனப் பலரும் காலை நேரங்களில் அவசரமாக இந்தச் சாலையால் பயணிக்கின்றனர்.
இதனால் அதிக விபத்துகள் இடம் பெறுவதுடன்,சாலைப் போக்குவரத்து விதியை மீறும் சந்தர்ப்பங்களும் காணப்படுகின்றது.
இவ்வாறு விதிமுறைகளை மீறுபவர்கள் மீது பொலிஸார் நடவடிக்கை எடுத்து வருகின்ற போதிலும், குறித்த இரு சாலைகளும் சந்திக்கும் இடத்தில ஒரு சீரமைக்கப்பட்ட சுற்றுவட்டம் இல்லாததன் காரணமாகவே இவ்வாறான இன்னல்களுக்கு மக்கள் முகம்கொடுக்க வேண்டியுள்ளது.
எனவே சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உரிய நடவடிக்கைகளை எடுக்கும் பட்சத்தில் அப்பகுதியில் இடம் பெற்றுவரும் விபத்துகளை தவிர்க்க முடியும் என மக்கள் தெரிவிக்கின்றனர்.
இது தொடர்பாக சாலை அபிவிருத்தி திணைக்கள அதிகாரிகளுடன் தொடர்புகொண்டு கேட்டபோது, குறித்த சாலையின் சீரமைப்பு வேலைகள் அண்மையில் இடம் பெற்றன.
அவ்விடத்தில் சாலை வளைவு அமைப்பது தொடர்பில் ஆராயப்பட்ட பின்னரே இது தொடர்பாக கூறமுடியும் என்றனர்.
(ய-8)

## சந்நிதியில் இன்று சொற்பொழிவு

வடமராட்சி, ஒக.31
தொண்டைமானாறு செல்வச்சந்நிதி ஆலய வருடாந்த மகோற்சவத்தை ஒட்டி சந்நிதியான் ஆச்சிரம சைவசபை பண்பாட்டுப் பேரவையால் சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் தினமும் முற்பகல் 10 மணிக்கு நடைபெற்றுவரும் ஆன்மிக நிகழ்வு வரிசையில் இன்று வியாழக் கிழமை இறைவழிபாடு என்னும் தலைப் பில் சைவப் புலவர் திருமதி சசிரேகா கஜராஜன் சொற்பொழிவு நிகழ்த்துவார்.
நாளை வெள்ளிக்கிழமை அழகு என்னும் தலைப்பில் செஞ்சொற்செல்வர் இரா.செல்வவடிவேலின் சொற்பொழிவும் இடம்பெறவுள்ளது.
(ய-173)

## பொது இடங்களில் புகைத்த 10 பேருக்குத் தண்டம்

தென்மராட்சி, ஒக.31
பொது இடங்களில் புகைபிடித்த 10 பேருக்கு சாவகச்சேரி நீதிமன்றில் தலா ஆயிரம் ரூபா வீதம் தண்டம் விதிக்கப்பட்டது.
சாவகச்சேரி மதுவரி நிலையத்தினர் மேற்கொண்ட நடவடிக்கைகளில் பொதுஇடங்களில் புகை பிடித்தவர்களுக்கு எதிராக சாவகச்சேரி நீதிமன்றில் வழக்குகள் தாக்கல் செய்திருந்தனர்.
நேற்று இந்த வழக்குகள் தனித்தனியாக விசாரணைக்கு எடுக்கப் பட்டன.
விசாரணையின்போது குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் குற்றத்தை ஒப்புக் கொண்டதையடுத்து தலா ஆயிரம் ரூபா வீதம் தண்டம் விதிக்கப்பட்டது.
கடந்தவாரம் பொது இடங்களில் புகைபிடித்து பொதுமக்களுக்கு இடையூறு விளைவித்தனர் என பிரதேசத்தைச் சேர்ந்த 19 பேருக்கு எதிராக மதுவரி நிலையத்தினரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகளை விசாரித்த பதில் நீதிவான் செ.கணபதிப்பிள்ளை தண்டம் விதித்தமை குறிப்பிடத்தக்கது.
(ய-9)

## ஆவணி மூல உற்சவம்

யாழ்ப்பாணம், ஒக.31
நீர்வேலி கந்தசுவாமி கோவிலில் ஆவணி மூல உற்சவம் இன்று வியாழக்கிழமை நடைபெறும். பி.ப.4மணிக்கு சிறப்புப் பூசை, அபிசேகம் மற்றும் தீபவழிபாடும் இடம்பெறும் என்று அறிவிக்கப்பட்டது.
(4-17)

# பொலிஸ் காவலரணை மீண்டும் அமையுங்கள்

## ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில் கோரிக்கை

வடமராட்சி,ஓக.31
வடமராட்சியில் சட்டவிரோத மண் அகழ்வைத் தடுப்பதற்கு முள்ளிப் பகுதியில் பொலிஸ் காவலரண் மீண்டும் அமைக்கப்பட வேண்டும் என்று கரவட்டிப் பிரதேச செயலர் சிறிமோகன் சுட்டிக்காட்டினார்.

கரவெட்டிப் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் நேற்று முன்தினம் நடந்தது. "அண்மையில் இடம்பெற்ற அசாதாரண சூழ்நிலை காரணமாக முள்ளிப் பகுதியிலுள்ள பொலிஸ் காவலரண் அடித்து நொருக்கப்பட்டது. அந்தக் காவலரணை மீளவும் கட்டியமைக்க வேண்டிய தேவை உள்ளது. சட்ட விரோத மணல் அகழ்வைத் தடுப்பதற்கு அதுவே வழி" என்றும் அவர் குறிப்பிட்டார்." முள்ளிப் பகுதியில் பொலிஸாரும், மக்களும் இணைந்து காவலரணை மீளக் கட்டியமைக்க வேண்டும்" என்று நடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார். அதற்குக் கூட்டத்தில் கலந்து கொண்ட மக்களும் சம்மதம் தெரிவித்தனர்.

# 3 உணவகங்களுக்கு ரூ.99 ஆயிரம் தண்டம்

தென்மராட்சி,ஓக.31
சுகாதாரச் சீர்கேட்டுடன் இயங்கி வந்த மூன்று உணவகங்களின் உரிமையாளர்களுக்கு 99 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டது. இரு உணவகங்களைத் திருத்த வேலைகள் முடியும் வரை மூடுமாறும் சாவகச்சேரி நீதிமன்றம் நேற்று முன்தினம் உத்தரவிடப்பட்டது.

சாவகச்சேரி சுகாதாரத் திணைக்களத்தினர் கடந்த சனிக்கிழமை கைதடிப் பகுதி உணவகங்களில் பரிசோதனை மேற்கொண்டனர். அவற்றில் 3 உணவகங்களில் சுகாதாரச் சீர்கேட்டுடன் உணவுகள் விற்பனை செய்யப்பட்டு வந்தமை கண்டறியப்பட்டது. அவர்களுக்கு எதிராக சாவகச்சேரி நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்தனர். உணவு கையாளும் நிலையத் துப்புரவு வடிகால் அமைப்பு மற்றும் மருத்துவச் சான்றிதழ் பெறாமல் சிப்பந்திகளை வைத்திருந்தமை, பறவைகள் நடமாட்டம், துப்புரவில்லாத களஞ்சியம் மற்றும் பாத்திரங்கள் வைத்திருந்தமை போன்ற குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டிருந்தன. வழக்குகள் நேற்று விசாரணைக்கு எடுக்கப்பட்டன.

வழக்குகளை விசாரணை செய்த நீதிவான் 40 ஆயிரம் ரூபா, 35 ஆயிரம் ரூபா, 24 ஆயிரம் ரூபா என்ற அடிப்படையில் தண்டம் விதித்தார். இரு உணவகங்களில் காணப்பட்ட குறைபாடுகளை நிவர்த்தி செய்யும் வரை உணவகங்களை மூடுமாறும், குறைபாடுகள் நிவர்த்தி செய்யப்பட்ட பின்னர் நீதிமன்ற அனுமதியுடன் உணவகங்களைத் திறக்குமாறும் உத்தரவிட்டார். (ஐ-9)

# போதையில் குழப்பம்: 5 தென்னங்கன்றுகள் வழங்குமாறு உத்தரவு

தென்மராட்சி,ஓக.31
மதுபோதையில்பொது இடத்தில் குழப்பம் விளைவித்த நபரை, 5 தென்னங்கன்றுகளை நீதிமன்றுக்கு வழங்குமாறு சாவகச்சேரி நீதிமன்றம் நேற்று முன்தினம் உத்தரவிட்டது.

சாவகச்சேரிப் பொலிஸாரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. வழக்கை விசாரணை செய்த நீதிவான் 5 தென்னங்கன்றுகளை விலைக்கு வாங்கி நீதிமன்றிடம் ஒப்படைக்குமாறு உத்தரவிட்டார். (ஐ-9)

## துன்னாலை விவகாரம்

# சந்தேகநபர்கள் சரணடைந்தால் பிரச்சினை சுமுகமாக முடியும்

## ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் சுட்டிக்காட்டு





நெல்லியடி, ஓக.31
துன்னாலை மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் தொடர்பில் உரிய அதிகாரிகளுடன் கலந்துரையாடப்படும். எனினும் சட்டம் தொடர்பிலான பொலிஸாரின் நடவடிக்கைகளுக்குள் நாம் தலையிட முடியாது. இவ்வாறு கரவெட்டிப் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் அதன் தலைவர்களால் சுட்டிக்காட்டப்பட்டது.

"துன்னாலைப் பிரதேசத்தில் பொலிஸாரின் செயற்பாடுகளால் அச்சத்துடன் வாழ வேண்டிய நிலையில் உள்ளோம். எமது பிரதேசத்தில் இப்போது இளைஞர்களே இல்லை. எமது அன்றாடக் கடமைகளைச் சரியான முறையில் செய்ய முடியாத நிலையில் உள்ளோம். இறப்புச் சடங்குகளைச் செய்யக்கூட இளைஞர்கள் இல்லை. எமக்கு ஒரு சரியான தீர்வு வேண்டும்." என்று துன்னாலைப் பிரதேச மக்கள் கோரிக்கை விடுத்தனர்.

"அங்குள்ள நிலைமை தொடர்பில் உரிய அதிகாரிகளுடன் கலந்துரையாடப்படும். எனினும் பொலிஸாரின் சட்டம் தொடர்பான நடவடிக்கைகளுக்குள் நாம் தலையிட முடியாது. பொலிஸார் சட்டத்தின் அடிப்படையில் நடவடிக்கை எடுக்கும் போதும் நாம் அவர்களின் பணியைத் தடுக்க முடியாது. தலைமறைவாகியுள்ள 56 சந்தேகநபர்களும் நீதிமன்றில் சரணடைந்தால் பொலிஸாரின் தேடுதல் நடவடிக்கை தொடர்பில் சுமுகமான இணக்கப்பாட்டை எட்ட முடியும். குற்றமற்றவர் எனில் நீதிமன்றின் ஊடாக விடுவிக்கப் படுவார்கள். சந்தேகநபர்கள் சரணடைவார்களாக இருந்தால் அவர்களுக்கான சட்டத்தரணிகளை இலவசமாக ஏற்பாடு செய்து, நீதிமன்றின் ஊடாக தீர்வைப் பெற்றுத் தர உதவ முடியும்." என்று இணைத் தலைவரான நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன் தெரிவித்தார்.

"துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் உயிரிழந்த துன்னாலை இளைஞனின் வீட்டுக்கு நாம் சென்றிருந்தோம். அந்த இளைஞனின் சகோதரிக்கு வடக்கு மாகாண சபை ஊடாக எனது நிதியொதுக்கீட்டில் நிதியுதவி வழங்கியுள்ளேன். வேறு இடங்களில் துப்பாக்கிச் சூட்டில் உயிரிழக்கும் மக்களுக்கு உதவியை வழங்கும் அரசு, இந்த இளைஞனின் குடும் பத்துக்கு எவ்விதமான உதவிகளையும் வழங்கவில்லை" என்று வடக்கு மாகாண சபை உறுப்பினர் எம். சிவாஜிலிங்கம் தெரிவித்தார். "கைது செய்யப்பட்ட சந்தேகநபர்களுக்கான அடையாள அணிவகுப்பு நேற்று (நேற்றுமுன்தினம்) ஆரம்பமானது. அதில் அடையாளப்படுத்தப்படாதவர்களை விடுவிப்பதற்கான நடவடிக்கைகளை நாம் மேற்கொண்டு வருகின்றோம்." என்று கூட்டத்தில் கலந்து கொண்ட பொலிஸ் அதிகாரிகள் தெரிவித்தனர். (ற-26,ரி2)

# கொக்குவிலில் சடலம் மீட்பு

யாழ்ப்பாணம், ஓக. 31
கொக்குவில் பகுதியில் வீட்டுக் கிணற்றில் இருந்து பெண்ணொருவரின் சடலம் நேற்று முன்தினம் மீட்கப்பட்டது.

கொக்குவில் மேற்கு ஞானபண்டிதர் வித்தியாலயத்துக்கு அண்மையில் வசிக்கும் அன்னலிங்கம் அன்பரசி(வயது 38) என்பவரே சடலமாக மீட்கப்பட் டார். அவர் நோயால் பாதிக்கப்பட்டிருந்தார் எனத் தெரிவிக்கப்பட்டது.

சடலம் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் உடற்கூற்றுப் பரிசோதனையின் பின்னர் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. (4,8-ரி1)



# கைக்குண்டு மீட்பு

அல்வாய் வடக்கு சக்கோட்டைப் பிரதேசத்தில் பழைய கைக்குண்டொன்று நேற்று முன்தினம் மீட்கப்பட்டது எனத் தெரிவிக்கப்பட்டது. வீட்டுக் காணியில் தென்னை மரமொன்றுக்குக் கிடங்கு வெட்டும்போது கைக்குண்டு மீட்கப்பட்டது. அந்த இடத்துக்கு விரைந்த பொலிஸார், நீதிமன்ற அனு மதியுடன் கைக்குண்டை மீட்டனர் எனத் தெரிவிக்கப்பட்டது. (ஐ-26,ரி2)

# பட்டப்பகலில் வீட்டில் திருட முயன்றவர் மடக்கிப் பிடிப்பு

யாழ்ப்பாணம், ஓக.31
கொக்குவில் நந்தாவில் அம்மன் ஆலயத்துக்கு அண்மையில் உள்ள வைத்தியரின் வீட்டுக்குள் திருட முயற்சித்தார் என்ற குற்றச்சாட்டில் இளைஞன் ஒருவரை ஊர்மக்கள் மடக்கி பிடித்து கோப்பாய் பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

இச்சம்பவம் நேற்றுமுன்தினம் இடம்பெற்றுள்ளது. 23 வயது மதிக்கத்தக்க இளைஞன் ஒருவரையே ஊர்மக்கள் மடக்கிப் பிடித்துள்ளனர்.

அவரிடம் மேற்கொண்ட ஆரம்ப விசாரணையில், அவர் கோவில் சாலை நல்லூரைச் சேர்ந்தவர் என கூறப்படுகின்றது.

பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (ய-8)

# திருக்குடமுழுக்கு

யாழ்ப்பாணம், ஓக. 31
காரைநகர் களபூமி தன்னையம்பதி சித்தி விநாயாகர் ஆலய மகா கும்பாபிசேக திருக்குட முழுக்குப் பெருஞ்சாந்திப் பெருவிழா இன்று வியாழக்கிழமை காலை 7.30 மணிக்கு பூசை வழிபாடுகளுடன் நடைபெறவுள்ளது.

மாலை 6 மணிக்கு பூசை, கூட்டுப் பிரார்த்தனைகள் நடைபெற்று விநாயகப் பெருமான் திருவீதியுலா வரும்காட்சியும்இடம்பெறவுள்ளது. (4)




# வாழ்வாதாரபயிற்சிப்பட்டறை

தென்மராட்சி, ஓக.31
தென்மராட்சிப் பிரதேச மக்களுக்கான வாழ்வாதார மற்றும் வனஜீவராசிகள் அபிவிருத்தித் திட்டம் தொடர்பான பயிற்சிப் பட்டறை நேற்றுமுன்தினம் தென்மராட்சி பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது..

பிரதேசத்தில் உள்ள காட்டுவளங்களைப் பாதுகாத்தல் திட்டத்தின் கீழான பயிற்சிப் பட்டறையில் மாணவர்கள், பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் பலர் கலந்துகொண்டனர்.

யாழ். மாவட்டச் செயலக ஏற்பாட்டில் நடத்தப்பட்ட பயிற்சிப் பட்டறையில் மருத்துவர்களான கணபதி கஜபதி, திருமதி துளசி வில்லியம் சாந்தகுமார், திருமதி ஆர். ஞானேஸ்வரி , எஸ். ஆரத்திகன் ஆகியோர் வளவாளர்களாக கலந்துகொண்டனர் . (ய-9)



## அஸ்கிரிய பீட ஞானரத்தினதேரர் யாழ்ப்பாணத்தில்சுற்றுப்பயணம்

யாழ்ப்பாணம், ஒக. 31
அஸ்கிரியபீடத்தின் மகா நாயக்க தேரரான வரக்கொட சிறி ஞான ரத்தின தேரர் யாழ்ப்பாணத்துக்குநேற்றுமுன்தினம் பயணம் செய்தார்.
குறித்த குழுவினர் இராணுவ பாதுகாப்புடன் யாழ்ப்பாணத்துக்கு வருகைதந்தனர். அவர்கள் யாழ்ப்பாணத்தின் பல இடங்களுக்கும் பயணம் செய்தனர். பலாலி இராணுவ முகாமுக்கு சென்று அங்குள்ளஇராணுவஉயர் அதிகாரிகளை சந்தித்துக் கலந்துரையாடினர்.
கீரிமலை வீட்டுத்திட்டப் பணிகளைப் பார்வையிட்டனர். ஜம்புகோளப்பட்டினம், கந்தரோடைவிகாரை, கோட்டை, நல்லூர் கந்தசுவாமி ஆலயம் ஆகியவற்றுக்கும் சென்றனர்.
யாழ்ப்பாணம் நாக விகாரையில் சிறப்பு வழிபாட்டிலும்ஈடுபட்டனர். அத்துடன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்த. சித்தார்த்தன் கந்தரோடையில் அமைந்துள்ளதொல்வியல் மையத்தில் தேரர்களைச் சந்தித்துக் கலந்துரையாடினார். (4-8)

# மாற்றுவலுவுடையோருக்கு சாரதி அனுமதிப்பத்திரம் விண்ணப்பங்கள் ஆராய்வு

யாழ்ப்பாணம், ஒக. 31
வாகனச்சாரதி அனுமதிப்பத்திரங்களுக்குவிண்ணப்பிக்கும்மாற்றுவலுவுடையவர்களின் மருத்துவச் சான்றிதழ்கள் வடக்கு மாகாணத்தில் காணப்படுகின்ற மோட்டார் போக்குவரத்து திணைக்கள அதிகாரிகளால் ஆராயப்பட்டு கொழும்பு மோட்டார் போக்குவரத்து திணைக்களத்துக்கு அனுப்பிவைக்கும் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுவருகின்றன. இவ்வாறு வடக்கு மாகாண போக்குவரத்து அமைச்சு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.
இந்த முறைமையை எமது மாகாணத்தில் செய்வதற்கான வசதி வாய்ப்புகள் இல்லாமையினாலேயே கொழும்புக்குச்சென்றுசாரதி அனுமதிப்பத்திரத்தை பெறவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது என்றும் அதிகாரிகள் தெரிவித்தனர்.
வாகனங்களைச் செலுத்தத் தகுதியான மாற்று வலுவுடையவர்களான நாம் சாரதி அனுமதிப்பத்திரத்தை பெற்றுக் கொள்வதில் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருவதாக பாதிக்கப்பட்டுள்ள மாற்றுத் வலுவுடையவர்கள் தெரிவித்துள்ளனர்.
அவர்கள் இதுதொடர்பில் தெரிவிக்கையில்:
கடந்த காலத்தில் இடம்பெற்ற உள்நாட்டுப் போரின் காரணமாக பொதுமக்கள், முன்னாள்போராளிகள் எனப்பலர் மாற்றுவலுவுடையவர்களாகக் காணப்படுகின்றனர்.
அவர்களில் சாரதி அனுமதிப்பத்திரத்தைப்பெற்றுக்கொள்ளக்கூடியவர்களை தெரிந்தெடுத்து அவர்களுக்கான சாரதி அனுமதிப்பத்திரங்களை பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.
தற்போதைய சூழ்நிலையில் அநேகமான மாற்றுத்திறனாளிகள் சாரதி அனுமதிப்பத்திரம் பெறக்கூடிய நிலையில் உள்ளபோதும், அவர்கள்பெறமுடியாத சிரமம் காணப்படுகின்றது.
இதன்காரணமாக முன்னாள் போராளிகள் உட்பட மாற்றுத்திறனாளிகள் பலர் சாரதி அனுமதிப்பத்திரம் இல்லாத காரணத்தினால் வேலைவாய்ப்பை இழக்கின்றனர். இதனால் அவர்களின் வாழ்வாதாரம் மிகவும் பாதிக்கப்படுகின்ற நிலைமை காணப்படுகின்றது.
எனவேஇதற்குத்தீர்வுகிடைக்கும்வகையில் மாற்றுவலுவுடையோரில் ஓரளவுக்கு இயலுமானவர்களை இனங்கண்டுஅவர்களுக்குஉந்துருளிமற்றும் முச்சக்கர வண்டி வாகனங்களுக்கான சாரதி அனுமதிப்பத்திரங்களைவழங்குவதன்மூலம்அவற்றைகொண்டுஅவர்கள் தங்களது வாழ்வாதாரத்தை முன்னேற்ற உதவிகரமாக அமையும்எனத் தெரிவித்துள்ளனர். (ய-8)

## குமுதினிப் படகு மீண்டும் சேவையில்

யாழ்ப்பாணம், ஒக. 31
நெடுதீவுக்கான படகுச்சேவையில் ஈடுபட்டு வந்த நிலையில் பழுதடைந்துபோன குமுதினிப் படகு மீண்டும் சேவையில் ஈடுபட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.
இதற்கான நேரமும் அறிவிக்கப்பட்டுள்ளது.
குறிகாட்டுவான் நெடுந்தீவுக்கானசேவையில்ஈடுபட்டு வந்த குமுதினிப் படகு கடந்தவாரம் பழுதடைந்தது. இதன் காரணமாக அதன் சேவை தடைப்பட்டிருந்தது. இந்த நிலையில்படகில்பழுதுகள் யாவும்திருத்தப்பட்டு தற்போது சேவையில் ஈடுபடுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.
இதேவேளை, குறிகாட்டுவான்நெடுந்தீவுஇரண்டுக்கும் இடையில் வடதாரகை, நெடுந்தராகை போன்ற படகுகளின் சேவையும் இடம்பெற்று வருகின்றன.
நாளாந்தம்நெடுந்தீவிலிருந்துகுறிகாட்டுவான்நோக்கி காலை 6.30 மணிக்கு தனியார் படகும் சேவையில் ஈடுபட்டு வருகின்றது.
அதே படகு பிற்பகல் 3 மணிக்கு குறிகாட்டுவானிலிருந்து நெடுந்தீவுக்கான சேவையில் ஈடுபடும்.
குமுதினிப் படகு நெடுந்தீவிலிருந்து குறிகாட்டுவான் நோக்கி காலை 7.30 மணிக்கு தனது சேவையை ஆரம்பித்து முற்பகல் 9.30 மணிக்கு குறிகாட்டுவானிலிருந்து நெடுந்தீவுக்கு பயணிக்கும். பின்னர் மதியம் 2.30 மணிக்கு நெடுந்தீவிலிருந்து குறிகாட்டுவானுக்கு புறப்பட்டு மாலை 4 மணிக்கு குறிகாட்டுவானிலிருந்து நெடுந்தீவுக்கான தனது இறுதி சேவையை வழங்கி வருகின்றது.
நெடுந்தாரகைபடகுச்சேவைமுற்பகல்11.30மணிக்கு நெடுந்தீவிலிருந்து பயணத்தை ஆரம்பித்து மதியம் 1.30 மணிக்கு மீண்டும் குறிகாட்டுவானிலிருந்து நெடுந்தீவை நோக்கிப் பயணிக்கும்.
வடதாரகைகாலை8மணிக்குகுறிகாட்டுவானிலிருந்து நெடுந்தீவு நோக்கிச் சேவையை வழங்குவதுடன் பிற்பகல் 4.30 மணிக்கு நெடுந்தீவிலிருந்து குறிகாட்டுவானுக்குப் பயணிக்கும்.
இதேவேளை குறிகாட்டுவான் நெடுந்தீவுக்கான சேவையில் ஈடுபட்டு வரும் குமுதினி ஞாயிற்றுக்கிழமைகளில் சேவையில் ஈடுபடுவதில்லை.
அத்துடன் நெடுந்தாரகை படகு செவ்வாய்க்கிழமைகளில் சேவையில் ஈடுபடுத்தப்படுவதில்லை என்று தெரிவிக்கப்பட்டது. (ய-8)

## கோப்பாய் ஆசிரியர் பயிற்சி கல்லூரிக்கு 254 பேர் தெரிவு

அச்சுவேலி, ஒக. 31
கோப்பாய் ஆசிரிய கலாசாலையில் இரண்டு வருடகால ஆசிரிய பயிற்சியைப் பெறுவதற்கு இந்தவருடம் 254 ஆசிரியர்கள் எட்டுப்பாடநெறிகளுக்குத்தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.
இவர்களுக்கானபதிவுகள்எதிர்வரும் 6ஆம்திகதி ஆசிரிய கலாசாலையில் நடைபெறுவதுடன் அன்றுதொடக்கம் பயிற்சிக்கானதிசைமுகப்படுத்தல்விரிவுரைகள் மற்றும் பயிற்சிகள் நடைபெறும்.
இவ்வாறு ஆசிரிய கலாசாலை அதிபர் வீ. கருணலிங்கம் தெரிவித்தார்.
ஆசிரிய கலாசாலைகளின் இரண்டு வருடகால ஆசிரியர் பயிற்சிக்கான நேர்முகப்பரீட்சைகள்கொழும்புகல்வி அமைச்சில் நடைபெற்று, 254 ஆசிரியர்கள் கோப்பாய் ஆசிரியகலாசாலைக்கு பயிற்சிக்காகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.
இவர்களில் 148பேர் ஆரம்பக்கல்வி பாடநெறிக்கும் 27பேர் இந்துசமய பாடநெறிக்கும், 19 பேர் விவசாய பாடநெறிக்கும், 18 பேர் சங்கீதம் பாடநெறிக்கும், 18பேர் கணித பாடநெறிக்கும், 13 பேர் மனைப்பொருளியல் பாடநெறிக்கும், 8 பேர்வர்த்தகப்பாடநெறிக்கும், 3 பேர் சிறப்புக் கல்விப் பாடநெறிக்குமாக 254பேர் இரண்டு வருடகாலஆசிரியர்பயிற்சிக்குதெரிவு செய்யப்பட்டுள்ளனர். (ய-11)

## உயிரெடுத்தது தலைக் "கிளிப்"

யாழ்ப்பாணம், ஒக. 31
தலையில் குத்தியிருந்த கிளிப், விபத்தினால்தலைக்குள்புகுந்ததால் சுய நினைவு இழந்து சிகிச்சை பெற்றுவந்த பெண் உயிரிழந்தார்.
இந்தவிபத்துவேலணையில்கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது.
அதேஇடத்தைச்சேர்ந்தபிரான்சிஸ் நாகரத்தினம்(வயது 64)என்பவரே சிகிச்சை பயனளிக்காது மறுநாள் உயிரிழந்தார். தனது கணவருடன் மோட்டார் சைக்கிளில் சென்றுகொண்டிருந்தபோது அவருடைய சேலைத் தலைப்பு மோட்டார் சைக்கிளின் சில்லுக்குள் சிக்கியதில் விபத்து இடம்பெற்றது.
அதன்போதே அந்தப் பெண் தனது தலையில் அணிந்திருந்த 'கிளிப்' தலைக்குள் குத்தியுள்ளது. படுகாயமடைந்த அவர் ஊர்காவற்துறை வைத்தியசாலையில்சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம்போதனாவைத்தியசாலைக்கு மாற்றப்பட்டிருந்தார். எனினும் சிகிச்சை பலனளிக்கவில்லை. விசாரணைகளின் பின்னர் சடலம் உறவினர்களிடம்நேற்றுமுன்தினம் ஒப்படைக்கப்பட்டது. (4-8-ரி1)

## புகையிரதக் கடவைகள் விவகாரம்: பிரதேச சபையினருடன் இணைந்து பொலிஸார் செயற்படவேண்டும்

### முதலமைச்சர் தெரிவிப்பு

தொடருந்துக் கடவைகள் தொடர்பாக பிரதேச சபையினரையும்இணைத்துமுடிவுகளைஎடுக்குமாறு வடக்குமாகாண முதலமைச்சர் பொலிஸாருக்குத் தெரிவித்துள்ளார்
வடக்குமாகாணத்தில்தொடருந்துக்கடவைகள் தொடர்பாக பல முறைப்பாடுகள் தெரிவிக்கப்பட்டு வருகின்றது. கடவைகள் அமைக்கப்பட வேண்டிய இடங்களில் கடவைகள் இல்லை. அமைக்கப்பட்டுள்ள கடவைகளில் விபத்துகள் இடம்பெற்று வருகின்றன.
இந்தநிலையில் திங்கட்கிழமை கிளிநொச்சி மாவட்ட அபிவிருத்திக்குழுக் கூட்டத்தில் இணைத்தலைவரானவடக்குமாகாணமுதலமைச்சர் தொடருந்துக் கடவைகள் விவகாரம் குறித்துப் பிரஸ்தாபித்திருந்தார்.
தொடருந்துக் கடவைகள் தற்போது பொலிஸாரின்கட்டுப்பாட்டில்உள்ளன. ஆனால்சிலஇடங்களில் கடவைகள் அமைக்கப்பட வேண்டிய நிலை காணப்படுகின்றது. அத்தோடு புதிதாக கடவைகள் அமைக்கப்படவேண்டிய இடங்களையும் அடையாளப்படுத்தி அதற்கான ஏற்பாடுகளைமேற்கொள்வதோடுபிரதேசசபையினரையும் அதில் இணைத்துக்கொள்ளுமாறு தெரிவித்திருந்தார். (ய-6)



ஸ்ரீ துர்க்காதேவி
தேவஸ்தானம்
தெல்லிப்பழை

இன்று (31.08.2017)
புதன்கிழமை
9ஆம் நாள்
திருவிழா

ஆடி வலம் வந்தருள்வாய் துர்க்கையென் தாயே

துக்கமெனும் நிலையறுத்துக் காக்குமன்னையே
துர்க்கையென்று பெயர் படைத்த எங்கள் தெய்வமே
எக்கணமும் உன்னினைவே சுழன்று ஆடிடும்
ஆவணிநற் திங்களிலுன் புகழைப் பாடவே
பெருமாட்டி உந்தனருள் விழிகாட்டியே
பேரிடர்கள் யாவையுமே உடன் மறைந்தோட
அருட்கோலம் காட்டியெமை ஆளுமன்னையே
ஆடிவலம் வந்தருள்வாய் துர்க்கையென் தாயே

அனுசரணை: சபாநாதன் குடும்பம் - மல்லாகம்
9 ஆம் திருவிழா உபயகாரர்கள்
இந்து இளைஞர் சங்கம் - தெல்லிப்பழை.

### இளைஞர் கொள்கை உருவாக்கம்:
## இளையோரிடம் நேரில் சென்று கருத்துகளைப் பெறத் தீர்மானம்

யாழ்ப்பாணம், ஓக. 31

வடக்கு மாகாணத்தில் இளைஞர் கொள்கை உருவாக்குவதற்கு இளைஞர்களிடம் நேரில் சென்று தகவல்களைப் பெறுவது சிறப்பாக அமையும் என்று அனைத்து தரப்பினரும் கருதுகின்றனர்.

அதனால்மாகாணசபையின் அனுமதியின் பின்னர் இதை முன்னெடுக்கவுள்ளதாக

வடக்கு மாகாண கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

இதுபற்றி மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

வடக்கு மாகாணத்தில் இளைஞர்களின் தேவைகளை நிறைவேற்றுவதற்கு கொள்கை ரீதியான பகுப்பு ஒன்று அவசியமாகின்றது. அதற்காக இளைஞர்களுக்கான கொள்கை ஒன்றை உருவாக்குவதற்கு அமைச்சு தீர்மானித்தது.

அதற்கான அமைச்சரவை அனுமதி 53ஆவது கூட்டத்தில் கிடைத்திருந்தது. இதற்கு அமைய கொள்கை ஒன்று எப்படி அமையவேண்டும் என்று பல்வேறு தரப்பினர்' ன் கருத்துகளும் பெறப்பட்டு வருகின்றன.

அத்துடன்கொள்கைஒன்றுஅமைவதற்குவடக் குமாகாண சபையின் அனுமதியைப் பெறுவதற்காக அமைச்சு தயார்படுத்தலை மேற்கொண்டுள்ளது.

இளைஞர்களின் பல்வேறு தேவைகளை நிறைவேற்றுவதற்குஇந்தக்கொள்கைஉதவும். ஆகவேஇளைஞர்களுக்கு என்ன தேவை, எதை எதிர்பார்க்கிறார்கள் என்று நாம் அறிந்து கொள்கையைத் தயாரிக்கவேண்டும்.

அதற்காக மாவட்டரீதியில் இதற்கான சிறப்பு நிகழ்ச்சித் திட்டங்களை நடத்தி அதன்மூலம் நேரடியாகவே இளைஞர்களின்கருத்துகளைப்பெற்று, அதனைப்பரிசீலித்துகொள்கை ஒன்று உருவாக்கப்படுமாயின் அது ஆக்கபூர்வமாக இருக்கும் என்று அனைத்துத் தரப்பினரும் கருதுகின்றனர்.

இதற்கமைவாக மாவட்டரீதியாக இளைஞர்களிடம் கருத்துகளைப் பெறும் நடவடிக்கை மாகாணசபையின் அனுமதியின் பின்னர் மேற்கொள்ளப்படும். இந்தச் செயற்பாட்டுக்கு யு.என்.எப்..எ நிறுவனம் நிதி உதவி செய்ய முன்வந்துள்ளது என்று மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ய-ரி)

# கடற்பாசி வளர்ப்புக்கு வடக்கில் ஊக்குவிப்பு

## மீன்பிடி அமைச்சு நடவடிக்கை



யாழ்ப்பாணம், ஓக. 31

வடக்கு மாகாணத்தில் கடற்பாசி வளர்ப்புத் தொடர்பான பயிற்சிகளை தொடர்ச்சியாக வழங்கி, அதன்மூலம் வருமானத்தை பெற்றுக்கொள்ளும் சந்தர்ப்பத்தை ஏற்படுத்திகொடுக்கவுள்ளதாக வடக்கு மாகாண மீன்பிடி அமைச்சு தெரிவித்துள்ளது.

இதுபற்றி மேலும் தெரிவித்ததாவது.

வடக்கு மாகாணத்தில் மீன்பிடி சார்ந்த கைத்தொழில்களை ஊக்குவிக்க அமைச்சு பல்வேறு செயற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றது. இவற்றில் அதிக வருமானம் கிடைக்ககூடியதும், ஏற்றுமதிக்கான சந்தர்ப்பத்தை அதிகமாகப் பெற்றுக்கொடுக்கும் கடல்பாசி வளர்ப்புப் பயிற்சிநெறியை மாவட்டரீதியாக வழங்கி வருகிறது.

இதன் முதற்கட்டமாக தற்போது மீள்குடியேற்ற அமைச்சின் நிதியுதவியில் 3 மாவட்டங்களுக்கான பயிற்சிநெறிகளை நிறைவு செய்துள்ளோம்.

5.5 மில்லியன் செலவில் இந்தப் பயிற்சி நெறிகள் வழங்கப்பட்டு வருகின்றன. யாழ்ப்பாண மாவட்டத்தில் சுழிபுரம், சங்கானை, தெல்லிப்பளை ஆகிய பகுதிகளிலும், கிளிநொச்சி மாவட்டத்தில் பூநகரிப் பிரதேசத்திலும், மன்னார் மாவட்டத்தில் முசலி, நானாட்டான் பிரதேசங்களிலும் பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளன.

கடல்பாசி வளர்ப்பதற்கு கடல்மட்டம் சமாந்தரமாகவும், அலைகள் குறைந்த ஆழம் குறைந்த கடல் பரப்புகள் அவசியமாகும். ஆகவே இதனைக் கருத்தில்கொண்டு முல்லைத்தீவு மாவட்டத்தில் கடலின் தன்மையைக் கருத்தில் கொண்டு இந்தப் பயிற்சிகள் வழங்கப்படவில்லை. கடல்பாசி மருத்துவ தேவைகளுக்கும், அழகு சாதனப் பொருள்கள் தயாரிப்பதற்கும் பயன்படுவதால் அதற்கு ஏற்றுமதி வாய்ப்பு அதிகம்.

வடக்கு மாகாணத்தில் கடல்பாசியைக் கொள்வனவு செய்வதற்கு 'கேலிஸ்' நிறுவனம் முன்வந்துள்ளது. ஆகவே மக்கள் பயிற்சிகளைப் பெற்று கடல்பாசி உற்பத்தியில் ஆர்வம் காட்டவேண்டும். நாளாந்த வருமானத்தைப் பெற்றுக் கொள்ளும் நோக்கில் இல்லாமல் 45 நாளில் அதிகளவு வருமானத்தைத் தரக்கூடிய கடல்பாசி வளர்ப்பில் மக்கள் ஆர்வம் காட்ட வேண்டும். பயிற்சிகள் மற்றும் உபகரணங்கள் என்பவை இலவசமாக வழங்கப்பட்டு வருகின்றன.

பயிற்சிநெறியை முழுமையாக நிறைவு செய்தவர்கள் தாமாகவே கடல்பாசி விதைகளைக் கொள்வனவு செய்து உற்பத்தியை அதிகரிக்க முடியும்.

இரண்டாம் கட்டப் பயிற்சி செயற்பாட்டில் மக்கள் ஆர்வமாக ஈடுபடவேண்டும் என்று மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ய-ரி)

## வடக்கில் அமைக்கப்பட்ட பொதுக் கட்டடங்களை திறக்கும் பணி ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஓக. 31

வடக்கு மாகாணத்தில் அமைக்கப்பட்டு திறந்து வைக்கப்படாத கட்டடங்களைத் திறந்து வைக்கும் பணிகள் ஆரம்பமாகியுள்ளன என்று உள்ளூராட்சித் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதுபற்றி மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;

வடக்கு மாகாணத்தில் மக்களின் தேவைகருதி சிறப்பு செயற் திட்டங்கள் மூலம் பல கட்டடங்கள் கடந்த ஆண்டுகளில் அமைக்கப்பட்டன. அமைக்கப்பட்ட காலம்முதல் சில கட்டடங்கள் திறந்து வைக்கப்படவில்லை என்று பல்வேறு தரப்பினராலும், வடக்கு மாகாணசபையின் அமர்விலும் சுட்டிக்காட்டப்பட்டது.

இதற்கு அமைவாக கட்டடங்கள் திறக்கப்படாமைக்குரிய காரணங்களை நாம் சபைகளைக் கேட்டிருந்தோம். அவற்றை உடனடியாக திறப்பதற்கான நடவடிக்கையில் ஈடுபடும்படியும் பணித்திருந்தோம். இதற்கு அமைவாக நெல்சிப் திட்டத்தின் ஊடாக அமைக்கப்பட்ட கட்டடங்களைத் திறக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

இதுவரை 4 கட்டடங்கள் திறந்து வைக்கப்பட்டுள்ளன. மீதமாக உள்ள 6 கட்டடங்களை எதிர்வரும் செப்டெம்பர் மாதம் முதலாம் திகதிக்குள் திறப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. இதனை விரைவுபடுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நெல்சிப் திட்டத்தின்கீழ் 100 மில்லியன் ரூபா செலவில் 10 கட்டடங்கள் அமைக்கப்பட்டன. முல்லைத்தீவு மாவட்டத்தில் கரைத்துறைப்பற்று பிரதேசசபையால் நிர்மாணிக்கப்பட்ட சிறுவர் பூங்கா, மன்னார் மாவட்ட முசலிப் பிரதேசசபையால் நிர்மாணிக்கப்பட்ட மறிச்சுக்கட்டி மற்றும் சிலாவத்துறை கடைத்தொகுதி, மன்னார் மாவட்ட நகரசபையால் நிர்மாணிக்கப்பட்ட நகரசபை பேருந்து நிலையத்துக்கு அண்மையில் உள்ள கடைத்தொகுதி, மன்னர் பிரதேச சபையால் நிர்மாணிக்கப்பட்ட எருக்கலம்பிட்டி கொள்கலம் வவுனியா மாவட்ட தெற்கு சிங்களப் பிரதேசசபையினால் நிர்மாணிக்கப்பட்ட பெரிய உலுக்குளம் சந்தை, மகா கச்சக்கொடிய சந்தை, ஈரப்பெரிய குளம் சந்தை, ஈரப்பெரிய குளம் கலாசார மண்டபம் மற்றும் தோணிக்கல் விளையாட்டரங்கு என்பவை இன்னமும் திறக்கப்படாமல் பயன்படுத்தப்படாமல் உள்ளன என்று தெரிவிக்கப்பட்டிருந்தது.

(ய-ரி)

## தாதியர்களின் மேலதிக வேலைநேர கொடுப்பனவுக்கு ரூபா 140 மில்லியன் தேவை

### சுகாதார அமைச்சு தகவல்

யாழ்ப்பாணம், ஓக. 31

வடக்கு மாகாண தாதியர்களின் மேலதிக நேர வேலைக்கான கொடுப்பனவை வழங்குவதற்கு 140 மில்லியன் ரூபா தேவை என்று வடக்கு மாகாண சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இதுபற்றி மேலும் தெரிவிக்கையில்;

வடக்கு மாகாணத்தில் சேவை புரியும் தாதியர்களின் மேலதிக நேரவேலைக்காக வழங்கப்படும் கொடுப்பனவை விட மேலதிகமான தொகையை வழங்குவதற்கு கொழும்பு அரசு அனுமதி வழங்கியிருந்தது.

இதற்கு அமைவாக 2016ஆம் ஆண்டு ஆரம்பகாலம் வரை இந்தச் சம்பள அதிகரிப்பு முறையினை வழங்குவதற்கு அறிக்கையை வெளியிட்டிருந்தது. எனவே, தாதியர்கள் தமக்கான சம்பள அதிகரிப்பு இன்னமும் வழங்கப்பட வில்லை என்று போராட்டத்தில் ஈடுபடுவதற்கு தயாரான நிலையில் இருந்தனர்.

ஆனால் உண்மையான விடயம் மேலதிக சம்பளம் வழங்க அரசு அனுமதி வழங்கியிருந்த போதிலும், அதனை வழங்குவதற்கு போதுமான நிதி எம்மிடம் இல்லை. இவ்வாறான அனுமதிகளை அரசு வழங்கும்போது நிதி உள்ளதா என்பதைக் கருத்தில் கொள்ளவில்லை. இவர்களுக்கான சம்பளத்தை வழங்குவதற்கு 140 மில்லியன் தேவையாக உள்ளது.

ஆகவே இதுதொடர்பில் தீர்வினைப் பெற்றுத்தருவதற்கு அமைச்சு கடிதம் ஒன்றை கொழும்புக்கு அனுப்பியுள்ளது என்று மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ரி)

## பாடசாலைகளில் தொழில்கல்வி செப்ரெம்பர் முதல் ஆரம்பம்

அச்சுவேலி, ஓக. 31

ஜீ.சி.ஈ.சாதாரணதரத்தில் சித்தியடையாத மாணவர்களுக்கான தொழில்துறைசார் வகுப்புகள் வடக்கு மாகாணத்தின் ஐந்து பாடசாலைகளில் செப்ரெம்பர் முதல்வாரத்தில் ஆரம்பமாகின்றன.

ஜீ.சி.ஈ.சாதாரண தரம் 2016 பரீட்சைக்குத் தோற்றி பரீட்சையில் சித்தியடையாத மாணவர்கள் இதில் இணைந்து கற்கலாம்.

அனுமதிக்கான விண்ணப்பங்களை வலயக்கல்வி அலுவலகங்களிலும், புதிய வகுப்புக்கள் நடைபெறவுள்ள பாடசாலைகளிலும் பெற்றுக்கொள்ள முடியும் என வடக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் செ.உதயகுமார் அறிவித்துள்ளார். 13 வருட உறுதிப்படுத்தப்பட்ட கல்விக்கொள்கை தொடர்பாக வடக்குமாகாண கல்விப் பணிப்பாளர் பாடசாலைகளுக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் மேலும் தெரிவித்துள்ளதாவது.

ஜீ.சி.ஈ.உயர்தரத் தொழிற்கல்வித் துறைக்கான வகுப்புகள் தொடர்பாக குறித்த பாடசாலைகளுடன் அல்லது வலயத்துடன் தொடர்பு கொண்டு தகவல் பெறலாம்.

சாவகச்சேரி இந்துக்கல்லூரி (021 227 0350) தென்மராட்சி வலயம் (021 227 0013) மன்னார் சித்திவிநாயகர் இந்துக்கல்லூரி (023 222 2321) மன்னார் வலயம் (023 222 2286) முல்லைத்தீவு வித்தியானந்தக் கல்லூரி (021206 1040) முல்லைத்தீவு வலயம் (021 229 0017) கிளிநொச்சி மத்திய கல்லூரி (021 228 5115) கிளிநொச்சி வலயம் (021 228 5826) வவுனியா காமினி மகாவித்தியாலயம் வவுனியா தெற்கு வலயம் (024 222 2373) ஆகிய பாடசாலைகளில் செப்ரெம்பர் முதல் வாரத்தில் வகுப்புகள் ஆரம்பமாகின்றன.

மேற்படி வகுப்புகளில் இணைந்து கல்விகற்பதற்கு கடந்த டிசெம்பர் மாதம் நடைபெற்ற ஜீ.சி.ஈ. சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்கள் விண்ணப்பிக்கலாம். (சித்தி, சித்தியின்மை கருதப்படவில்லை) ஜீ.சி.ஈ.உயர்தர தொழிற்துறைசார் வகுப்புகளில் கல்வி கற்கும் மாணவர்களுக்கு தேசியரீதியிலும், பன்னாட்டு ரீதியிலும் அங்கீகாரம் பெற்ற தொழிற்துறை பாடத்திட்டம் இரண்டு வருடங்களுக்கு கற்பிக்கப்படும். பயிற்சிநெறியின் இறுதியில் நடைபெறும் மதிப்பீட்டில் தேர்ச்சி பெறுபவர்களுக்கு சான்றிதழ் வழங்கப்படும்.

குறித்த கற்கைநெறியில் இணைந்து தொழிற்துறை சார் கல்வியைக் கற்றுத் தேர்ச்சியடையுமாறு மாகாணக் கல்விப்பணிப்பாளர் அறிவித்துள்ளார். (ய-11)

## 3 லட்சம் மக்கள் வறட்சியால் பாதிப்பு

### ஐ.நா. அறிவிப்பு

கொழும்பு, ஓக. 31
இலங்கையில்நிலவும்கடுமையான வறட்சி காரணமாக சுமார் மூன்று லட்சத்துக்கு அதிகமான குடும்பங்களில் உணவு பாதுகாப்பின்மை நிலை அதிகரித்துள்ளதாக ஐக்கிய நாடுகள் சபை அறிவித்துள்ளது.
வறட்சிப் பாதிப்புக்குள்ளான மக்களுக்கு விநியோகம் செய்வதற்காக 4 தண்ணீர் பவுசர்களை யுனிசெப் அமைப்புவழங்கியுள்ளது. இதனை வழங்கும் நிகழ்வில் யுனிசெப்பின் இலங்கைக்கான பிரதிநிதி டிம் சுட்டொன் தெரிவித்ததாவது:
வறட்சியால் மக்களது வாழ்வாதாரம் முற்றிலும் இல்லாதொழிக்கப்படுகின்றது. உணவு, விவசாயம் என்று பல்வேறு வகையிலும் பாதிப்பு ஏற்படுவதன் காரணமாகவே அதிகமான மக்கள் பாதிக்கப்படுகின்றனர். வறட்சியால் குழந்தைகள் பாதிக்கப்படக்கூடிய தாக்கத்தைகுறைக்கும்வழிவகைகளை நாம்அதிகமாக சிந்திக்க வேண்டும். ஐக்கிய நாடுகள் சபையின் துணை நிறுவனங்களின் மூலம் தேவையான அனைத்து உதவிகளையும் வழங்கத் தயாராகவுள்ளோம் என்றார். (5.31)

## தவறான முடிவா? கொலையா?

### தபால் நிலைய பொறுப்பதிகாரி உயிரிழப்பில் பலத்த சந்தேகம்

கொழும்பு, ஓக. 31
உபதபால் நிலையத்தில் பரவிய தீ காரணமாக உயிரிழந்தாகத் தெரிவிக்கப்பட்ட தபால் நிலையப் பொறுப்பதிகாரியின் சாவில் பலத்த சந்தேகம் இருப்பதாக எல்பிட்டிய பொலிஸார் தெரிவித்தனர்.
தபால் நிலையப் பொறுப்பதிகாரியான காஞ்சனமாலாவின் (வயது-49) உடற்கூற்றுப் பரிசோதனை நேற்று நடைபெற்றது. அவரது உடலில் விசம் பரவியிருந்தமை கண்டறியப்பட்டுள்ளது. தீக்கிரையான தபாலகத்திலிருந்து விசப் போத்தலும் பொலிஸாரால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. மண்ணெண்ணை இல்லாத குப்பி விளக்கும் அங்கிருந்து கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. விசம் அருந்திய பின்னர், குப்பி விளக்கின் ஊடாக தீயை ஏற்படுத்தி அவர் தவறான முடிவு எடுத்தாரா என்ற கோணத்திலும் விசாரணை முன்னெடுக்கப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.
பிரதேச மக்கள் இது கொலையாக இருக்கக் கூடும் என்று சந்தேகம் வெளியிட்டுள்ளனர். தபாலகத்தின் பிரதான வாயிலில் இரு பூட்டுக்கள் உடைக்கப்பட்டிருந்ததாகவும், தபாலகலாச்சி திறந்த நிலையில் இருந்ததாகவும் பொது மக்கள் கூறியுள்ளனர். (5,31)

## எட்கா இரண்டாம் கட்டப் பேச்சு ஒக்ரோபரில் டில்லியில் நடக்கும்

கொழும்பு, ஓக. 31
இந்தியாவுடனான எட்கா ஒப்பந்தம் தொடர்பான இரண்டாம் கட்டப் பேச்சு ஒக்ரோபர் மாதம் புதுடில்லியில் இடம்பெறவுள்ளது.
எட்கா ஒப்பந்தத்தில் இலங்கை மற்றும் இந்தியாவுக்கு இடையிலான சேவை மற்றும் பொருள்கள் பரிமாற்றம் தொடர்பில் கலந்துரையாடப்பட்டிருந்தது. தொழில்நுட்ப மற்றும் வர்த்தகம் தொடர்பில் இரண்டாம் தரப்பு பேச்சின் போது கலந்துரையாடப்படவுள்ளது.
எட்கா ஒப்பந்தம் தொடர்பில் முழுமையான இருதரப்பு இணக்கப்பாடுகள் இதுவரையிலும் எட்டப்படவில்லை. முதலாம் தரப்பு பேச்சின்போது மேற்கொள்ளப்பட்ட தீர்மானங்களை விட அதிகமான பரப்புகளில் இரண்டாம் கட்டப் பேச்சு நடைபெறவுள்ளது. சுகாதாரம், கல்வி, போக்குவரத்து, வர்த்தகம் ஆகிய துறைகளில் இந்திய இலங்கை இருதரப்பு பரிமாற்றங்களை விருத்தி செய்யவும் இதற்கான அனைத்து அமைச்சு மட்ட செயற்படுத்தல்களும் இதன்போது ஆராயப்படவுள்ளன.
தொழில்நுட்ப, தகவல் பரிமாற்றல் தொடர்பான பேச்சுக்களில் சமரசம் காணப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ள நிலையில் அடுத்தகட்ட நகர்வுக்குச் செல்வதற்கு இந்தப் பேச்சுப் பெரிதும் தாக்கம் செலுத்தும் எனவும் அறிவிக்கப்பட்டது.
எட்கா ஒப்பந்தத்தின் மூலம் இரு நாடுகளின் இறைமையின்மீது நேரடியான தாக்கம் செலுத்தம் என்று முதற்கட்ட பேச்சுக்களின் முடிவில் பல தரப்பினர்களாலும் விமர்சிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (5.31)

## 16,000 கருத்தடை மாத்திரைகள் இந்தியரிடம் சிக்கியது


கொழும்பு, ஓக. 31
சட்டவிரோதமாக நாட்டுக்குள் கொண்டு வரப்பட்ட 16 ஆயிரத்து 930 கருத்தடை மாத்திரைகளுடன் இந்தியக் குடிமகன் கட்டுநாயக்க பன்னாட்டு வானூர்தி நிலையத்தின் சுங்கப்பிரிவினரால் நேற்று முன்தினம் இரவு கைது செய்யப்பட்டுள்ளார்.
32 வயதுடைய சந்தேகநபர் கிரீன் சனல் ஊடாக சோதனைகள் இன்றி செல்ல முற்பட்டதாகவும் இதன்போது அவரின் நடத்தையில் சந்தேகம் கொண்டு சோதனை மேற்கொண்டதில் கருக்கலைப்பு மாத்திரைகள் மீட்கப்பட்டுள்ளது.
சுங்கப் பிரிவினர் முன்னெடுத்த விசாரணைகளில், கொழும்பு, கோட்டை, மருதானை பகுதிகளில் உள்ள மருந்தகங்கள் ஊடாக கருக்கலைப்பு மாத்திரைகளை விற்பனை செய்ய திட்டமிட்டிருந்தமை கண்டறியப்பட்டுள்ளது.
23 லட்சத்து 13 ஆயிரத்து 503 ரூபாய் பெறுமதியான இந்தக் கருத்தடை மாத்திரைகள் அரசுடமையாக்கப்பட்டுள்ளது. சந்தேகநபர் இரண்டு லட்சம் ரூபாய் தண்டத்துடன் விடுவிக்கப்பட்டர். (5.31.33)

## பொதுப் போக்குவரத்தில் பயணிக்கும் 90 வீத பெண்களுக்குத் தொல்லைகள்

### ஐக்கிய நாடுகள் சபை அறிக்கை

கொழும்பு, ஓக. 31
இலங்கையில் பொதுப் போக்குவரத்துச் சேவைகளான தொடருந்திலும், பேருந்திலும் பயணம் செய்யும் பெண்களில் 90 சதவீதமானோர் துன்புறுத்தல்களுக்கு உள்ளாகின்றனர். இவ்வாறு ஐ.நா. அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. இதனால் புதிய தொழில்நுட்பக் கருவிகளின் உதவியுடன் பாதிப்புக்குள்ளாகும் பெண்களைப் பாதுகாக்கும் திட்டத்தை முன்னெடுக்கத் தீர்மானித்துள்ளதாக வீதிப்பாதுகாப்புக்கான தேசிய சபை தெரிவித்துள்ளது.
வீதிப் பாதுகாப்பு அதிகார சபையின் தலைவர் பேராசிரியர் சிசிர கோதாகொட இது தொடர்பில் தெரிவித்ததாவது:
நெருக்கடிக்கு உள்ளாகும் தொகையில் 4 சதவீதமானவர்களுக்கு மாத்திரமே பொலிஸாரால் பாதுகாப்பு வழங்க முடிகின்றது. பெண்களுக்கு இவ்வாறான நெருக்கடிகளை கொடுப்பவர்களுக்கு தண்டனை வழங்கப்படும் என்பது பற்றிய தெளிவின்மையும் இது வலுவடையக் காரணமாகும்.
தற்போது சில பேருந்துகளில் மறைகாணி (சிசிரிவி) பொருத்தப்பட்டுள்ளது. பெண்களின் முறைபாடுகளை ஏற்பதற்கு பெண் பொலிஸாரை சேவையில் அமர்த்தவுள்ளோம். இவற்றைத் தவிர மேலதிக செயற்பாடுகளாக இனிவரும் நாள்களில் சிறப்பு ரோந்து நடவடிக்கைகளையும் முன்னெடுத்து பெண்களுக்கு நெருக்கடி கொடுப்பவர்களை மடக்கிப்பிடிக்கவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது - என்றார். (5,31)

## கண்ணீர் அஞ்சலி



25.08.2017 அன்று இறைவனடி சேர்ந்த எமது பாடசாலையின் முன்னாள் அதிபர்

**திரு. சின்னையா இராஜநாயகம்**

அவர்களின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திப்பதோடு, அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினரக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**பழைய மாணவர் சங்கம்**
**வேலணை மத்திய கல்லூரி**

## 27 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 07 . 02 . 1947



மறைவு 29 . 08 . 1990

**திருமதி இராஜேஸ்வரி கதிரவேலு**

*திதி: நவமி (30.08.2017)*

எம் குடும்ப பாச விளக்காய் ஒரு கூட்டுக்கிளியாக
எம்மோடு வாழ்ந்து எம்மையெல்லாம் தவிக்கவிட்டு
விண்ணுலகு புகுந்த உங்களை நாம் எண்ணாத
நாளில்லையம்மா

## நினைவுகளில்......

**3ஆம் ஆண்டு**

தோற்றம் 16.04.1931



மறைவு 31.01.2014

சுப்பிரமணியம் இராசரத்தினம்

திதி: பிரதமை

**2ஆம் ஆண்டு**

தோற்றம் 15.10.1940



மறைவு 25.08.2015

இராசரத்தினம் தங்கரத்தினம்

திதி: ஆவணி மூலம்


பாரினில் பிறந்தவர் எவரும் இங்கு நிலைப்பதில்லை
ஆனால் எம் நினைவுகளில் என்றும் நீரே முதல்
வரிசையில் நிலையாக...... அந்த சாயியுடன் சேர்ந்து
என்றென்றும் எம்முடன் இருப்பீர்கள் என்ற
நம்பிக்கையில் நாங்கள் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம்....

G.P.S.றோட்,
கல்வியன்காடு, யாழ்.

என்றும் உங்கள் நினைவுகளுடன்
குடும்பத்தினர்.

ஓம் விராட் விஸ்வப் பிரமனே நமஹ

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
**முத்தையா நாகராசா (பத்தர்)**

தோற்றம் 28.04.1937

மறைவு 11.09.2016

திதி: தசமி (31.08.2017)

நேசத்துடனும் அன்புப் பாசத்துடனும்
ஒரே கூட்டுக் கிளியாக எமை வளர்த்து ஆளாக்கி
நேர் வழியில் வாழவைத் எம் குடும்ப சூரியன்
எம் அன்புத் தெய்வத்தை எம் உள்ளங்களில் இருத்தி
எந்நாளும் வணங்குகின்றோம்

பொற் தொழிலாளர் வீதி,
சங்கத்தானை,
சாவகச்சேரி.

மனைவி - சந்திரலேகா (ராணி)
பிள்ளைகள் மற்றும் குடும்பத்தினர்

## மரண அறிவித்தல்

### திருமதி பராசத்தி நாகரட்ணம்



கொக்குவில் மேற்கு, கொக்குவிலைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பராசத்தி நாகரட்ணம் (29.08.2017) செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற நாகரட்ணம் அவர்களின் அன்பு மனைவியும் காலஞ் சென்றவர்களான சுப்பிரமணியம் சோதிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும் தெய்வேந்திரன் (கனடா) அவர்களின் அன்புத்தாயும் ஜீவா (கனடா) வின் அன்புமாமியும் கனடாவில் வசிக்கும் தாரணி, கிஷான், ஜனகன், ஜனந்தன் ஆகியோரின் அன்புப்பேர்த்தியும் காலஞ் சென்ற திருஞானசம்பந்தர், பசுபதி ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்ற மகேஸ்வரி மற்றும் வில்வராணி ஆகியோரின் மைத்துனியும் சிவானந்தன், சிவநேசன் - ஷீலா (கனடா) காலஞ்சென்ற சிவநாதன் மற்றும் சிவதாசன், சிவசக்தி- இளம்பிறையன் ,சிவமலர் - முருகதாஸ், சிவபாலன் - சுதா (கனடா), பாலகுமரன் - பாலினி, பாலரஞ்சன் - ஜெயந்தி, பாலமுரளீதரன் - காலஞ்சென்ற காயத்திரி, பாலமுகுந்தன் - சசிகலா ஆகியோரின் அன்புமாமியும் கவின் (கனடா), தேவன் (கனடா), Tyler (கனடா) ஆகியோரின பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (31.08.2017) வியாழக்கிழமை மு.ப. 10 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**கொக்குவில் மேற்கு,
கொக்குவில்.**

**தகவல்: தெய்வேந்திரன் (மகன்),
திருஞானசம்பந்தர் குடும்பம்,
பசுபதி குடும்பம்.**

# புலமை பரிசில் பரீட்சையை நிறுத்த அரசு உத்தேசம்

## கல்வி அமைச்சர் தெரிவிப்பு

கொழும்பு, ஓக. 31

தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையை நிறுத்துவதற்கான உத்தேசத் திட்டம் அரசிடம் உள்ளது. எனினும் தற்போதைக்கு அது உடனடியாகச் சாத்தியமாகாது. இவ்வாறு கல்வி அமைச்சர் அகில விராஜ் காரியவசம் தெரிவித்தார்.



கல்வி அமைச்சில் நேற்று நடைபெற்ற பத்திரிகையாளர் சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

தெற்காசியாவில் 13 ஆண்டு கட்டாயக் கல்வியை நாம் மாத்திரமே நடைமுறைப்படுத்தியுள்ளோம். ஒக்ரோபர் மாதம் 45 பாடசாலைகளில் கட்டாயக் கல்வியை ஆரம்பிக்கவுள்ளோம்.

2 லட்சத்து 36 ஆயிரத்து 819 சிறுவர்கள் கல்வியைத் தொடராமல் உள்ளனர். 77 ஆயிரம் பேர் கல்வியின் மீது ஆர்வம் அற்றவர்களாக உள்ளனர். 19 ஆயிரத்து 213 பேர் சிறப்புத் தேவையுடையவர்களாக உள்ளனர். 14 ஆயிரத்து 922 பேர் பணவசதியற்றவர்களான உள்ளனர். சிறப்புத் தேவையுடையவர்களுக்காக கருவிகளை வழங்கவுள்ளோம்.

பணவசதிகள் அற்ற 14 ஆயிரத்து 922 சிறுவர்களுக்கு நிதிஉதவி வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு அடுத்த ஆண்டுக்கான வரவு-செலவுத்திட்டம் தயாரிப்பின் போது யோசனை வழங்கவுள்ளேன்.

தரம் 5 புலமை பரிசில் பரீட்சையை நிறுத்துவதற்கான உத்தேசம் அரசிடம் உள்ளது. தற்போதைக்கு அது சாத்தியமாகாது. அரசு சற்றுப் பலமானதன் பின்னர் அது குறித்து நடவகை எடுப்போம் - என்றார். (5,31)



# எவருக்கும் எங்களில் அக்கறை இல்லை

## கிழக்குப் பல்கலைக் கழக மாணவர்கள் கொந்தளிப்பு

மட்டக்களப்பு, ஓக. 31

போராட்டம் தொடங்கி மூன்று மாதங்கள் நெருங்குகின்றபோதும் உயர் கல்வி அமைச்சர், கிழக்கு மாகாண ஆளுநர், பல்கலைக்கழகத் துணைவேந்தர் உள்பட எவருமே எங்களைக் கணக்கெடுக்கவில்லை. இதனால் தான் நாம் பாதயாத்திரைப் மேற்கொள்ள வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டோம். இவ்வாறு கிழக்குப் பல்கலைக்கழக மாணவர்கள் தெரிவித்தனர்.

வந்தாறுமூலை கிழக்குப் பல்கலைக்கழக தலைமை வளாகத்திலிருந்து நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை ஆரம்பமான பாதயாத்திரை ஏறாவூர் நகர சபை வரை சென்று பரப்புரையுடன் முடிவுற்றது.

'இறுதி இரத்தத் துளி சிந்தும்வரை போராடுவோம்' எனும் வாசகத்தைப் பதித்துக் கொண்டு கிழக்குப் பல்கலைக் கழக மாணவர்கள் நுழைவாயிலில் கறுப்புக் கொடி கட்டி, பந்தல் அமைத்து 5 அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து கடந்த ஜூன் மாதம் 7ஆம் திகதி ஆரம்பித்த சத்தியாக்கிரகப் போராட்டம் 86 நாள்களைக் கடந்துள்ளது.

கிழக்குப் பல்கலைக் கழகத்தில் பட்டப்படிப்பைச் சரியான கால அளவுக்குள் நிறைவு செய், பல்கலைக்கழக வளாகத்தில் பொருத்தப்பட்டுள்ள சிசிரீவி கமராக்களை உடனடியாக அகற்று, மகாபொல புலமைப் பரிசில் பிரச்சினையை உடனே நிவர்த்தி செய், விடுதிப் பிரச்சினையை உடனடியாக நிவர்த்தி செய், அசாதாரணமான வகுப்புத் தடையை நீக்கு என்பன உள்ளிட்ட கோரிக்கைகளை முன்வைத்தே இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. (5,46)

## மரண அறிவித்தல்

### எலியாஸ் அருள்நாதன்

**(சின்னையா) ( கவிதாலயா இசைக்குழு உரிமையாளர் )**



| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 10.09.1944 | 30.08.2017 |

சுழிபுரத்தைப் பிறப்பிடமாகவும், வசிப்பிட மாகவும் கொண்ட எலியாஸ் அருள்நாதன் 30.08.2017 புதன்கிழமை காலமானார்.

அன்னார் லூர்த்துமேரியின் அன்புக்கணவரும் வசீகரன், ரஜீவன் ஆகியோரின் அன்புத்தந்தையும் காலஞ்சென்றவர்களான லூர்த்தம்மா பாக்கியநாதன் மற்றும் சின்னமலர், ஜெகநாதன் ஆகியோரின் சகோதரரும் கொன்சலா, தாரணி, தேவதாஸ், அமிர்தநாதன், பவானி, வதனி, நந்தா, ரஞ்சினி, சுபாஷினி ஆகியோரின் மாமனாரும் மேரிஎலிசபெத், தெலஸ்போர், பெனடிக்ற், குயின்மேரி ஆகியோரின் மைத்துனரும் ஜூலியன், சாந்தி ஆகியோரின் சித்தப்பாவும் ரொசானி, சந்தோஷ், ரக்ஷனா ஆகியோரின் அன்புப்பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (31.08.2017) வியாழக்கிழமை நண்பகல் 12 மணியளவில் பூதவுடல் அவரது சுழிபுரம் இல்லத்திலிருந்து எடுத்துச்செல்லப்பட்டு திருவடிநிலை கத்தோலிக்க சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**கவிதாலயா வீதி, சுழிபுரம்.
021 790 1419**

**தகவல்
குடும்பத்தினர்**

## மரண அறிவித்தல்

### இம்மனுவல் சிம்மறோஸ்



| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 04.10.1925 | 27.08.2017 |

குருநகரைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட இம்மனுவல் சிம்மறோஸ் 27.08.2017 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இம்மனுவலின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான செபமாலை - மரிகிருதா தம்பதியரின் பாசமிகு புதல்வியும் காலஞ்சென்றவர்களான சவிரியான் - செபமாலை ஆனாஸ் தம்பதியரின் அன்பு மருமகளும் மெரிற்றாவின் பாசமிகு சகோதரியும் இராஜேஸ்வரி, ராணி (கனடா), துரைமணி, செபஸ்ரியாம்பிள்ளை (ஓய்வு பெற்ற உதவி பணிப்பாளர், கடற்றொழில் பயிற்சி கல்லூரி), கிறகோரி, அன்ரன் (கனடா), கீதா, லதா ஆகியோரின் அன்புத் தாயும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (31.08.2017) வியாழக்கிழமை பி.ப 3.00 மணிக்கு இல. 7/3, தண்ணீர்தாங் வீதி, 4ஆம் குறுக்குத்தெரு, குருநகரில் உள்ள அவரின் இல்லத்திலிருந்து எடுத்துச்செல்லப்பட்டு புனித மரியன்னை பேராலயத்தில் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**இல.7/3, தண்ணீர்தாங்கி வீதி,
4ஆம் குறுக்குத்தெரு, குருநகர்,
யாழ்ப்பாணம்.**

**தகவல்
பிள்ளைகள், பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.**

## மரண அறிவித்தல்

### ஜெயசாந்தி டினேஸ்

**(யா/சென்ஜோன்ஸ் கல்லூரி 2019 உ.த வர்த்தக பிரிவு மாணவனும், கொக்குவில் இந்துக்கல்லூரியின் பழைய மாணவனும்)**



உரும்பிராயை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட ஜெயசாந்தி டினேஸ் (28.08.2017) திங்கட்கிழமை அகாலமரணமடைந்துவிட்டார்.

அன்னார் அளவெட்டி வடக்கு, தவளக்கிரிமுத்துமாரி அம்மன் கோயிலடியைச் சேர்ந்த காலஞ்சென்ற ஜெயசாந்தி மற்றும் ரோகினி தம்பதியரின் ஏகபுத்திரனும் காலஞ்சென்றவர்களான கதிரமலை, சிவக்கொழுந்து மற்றும் சிவலிங்கம் (ஓய்வு பெற்ற தொழிநுட்ப அலுவலர் (மின்சாரம்) யாழ்.மாநகரசபை), சோதிப்பிள்ளை ஆகியோரின் பாசமிகு பேரனும் ஜெயக்குமார் - பாக்கியலட்சுமி, ஜெயதாஸ் - புஷ்பராணி, சுதாகரன் - ரஜனி ஆகியோரின் பெறாமகனும் சிவகரன் - செல்லக்குமாரி, சிவசங்கர் - நில்மினி, கருணாகரன், ஆனந்தன் ஆகியோரின் மருமகனும் காலஞ்சென்ற கீர்த்திகன் மற்றும் ஆர்த்தன்,ஆரபி, அபிசன், வனிதா, விமலா, கோஷிலன், தேசி ஆகியோரின் ஒன்றுவிட்ட சகோதரரும் சாரங்கா, நிகாஷ், தனுஷ், அனுஸ்கா ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.


அன்னாரின் இறுதிச்சடங்குகள் இன்று (31.08.2017) வியாழக்கிழமை மு.ப. 10 மணிக்கு பலாலி வீதி உரும்பிராய் தெற்கு (ஒஸ்கா லேன் அருகில்) உள்ள அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் உரும்பிராய் வேம்பன் மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**பலாலி வீதி,
உரும்பிராய் தெற்கு, உரும்பிராய்.**

**தகவல்:
குடும்பத்தினர்.**

# டெங்குத் தொற்றுச் சாவு 360ஆக உயர்வு

கொழும்பு, ஒக. 31
ஆண்டின் இதுவரையான காலப்பகுதியில் டெங்குக் காய்ச்சல் காரணமாக உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 360 ஆக அதிகரித்



துள்ளது. அத்துடன் ஒரு லட்சத்து 45 ஆயிரம் டெங்கு நோயாளர்கள் இனம் காணப்பட்டுள்ளனர். இவ்வாறு சுகாதார அமைச்சின் தேசிய டெங்கு ஒழிப்புப் பிரிவின் சிறப்பு மருத்துவ நிபுணர் பிரசீலா சமரவீர தெரிவித்தார்.

டெங்கு ஒழிப்பிற்காக ஏற்கனவே சுகாதார அமைச்சால் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ள நிலையில் மீண்டும் ஒரு சிறப்புக் குழுவை நியமிப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. மேல் மாகாணம், குருநாகல் மாவட்டம், புத்தளம் மற்றும் யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களில் முன்னெடுக்கப்பட்டு வரும் சிறப்புச் செயற்றிட்டம் இன்றுடன் நிறைவடையவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (5)

## இ.தொ.காவில் மாற்றங்கள்

கொழும்பு, ஒக. 31
இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் புதிய தலைவர், செயலாளர், நிர்வாகிகளைத் தெரிவு செய்ய கட்சியின் தேசிய சபை எதிர்வரும் நவம்பர் மாதம் 20ஆம் திகதி கொழும்பில் அமைந்துள்ள தலைமையகத்தில் கூடவுள்ளது என்று அறியமுடிகின்றது.

இ.தொ.காவின் தேசிய சபை நேற்றுமுன்தினம் கூடி கட்சியின் அனைத்துக் கட்டமைப்புகளையும் களைத்துள்ளது. நிர்வாகத்தின் பல துறையிலும் மாற்றங்களை மேற்கொள்ளவே நவம்பர் 20ஆம் திகதி கட்சியின் தேசிய சபை கூடவுள்ளது. நவம்பர் மாதம் 20ஆம் திகதி கூடும் தேசிய சபையில் ஆறுமுகன் தொண்டமானின் மகன் ஜீவன் குமாரவேல் தொண்டமானுக்கு உப தலைவர் பதவி வழங்கப்படவுள்ளது எனவும், கட்சியின் சில உயர் பதவிகளிலும் மாற்றங்கள் இடம்பெறக் கூடும் எனவும் அறியமுடிகின்றது. (5)


## பெயர் மாற்றம்

கரணவாய் மேற்கு, கரவெட்டி என்னும் முகவரியை வசிப்பிடமாகக் கொண்ட
**கனகரத்தினம் ஜெகயூரதன்**
ஆகிய நான் இன்று முதல் எனது பெயரை
**கனகரத்தினம் ஜெயகாந்தன்**
எனப் பெயர் மாற்றம் செய்வதோடுஇனிவரும் காலங்களில் சகல ஆவணங்களிலும் எனது புதிய பெயரையே பயன்படுத்துவேனென்று இத்தால் இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசுக்கும் மக்களுக்கும் அறியத்தருகின்றேன்.
**கனகரத்தினம் ஜெயகாந்தன்**

## car தேவை

நல்ல நிலையிலுள்ள
Morris Minor Car
விலைக்குத் தேவை.
தொடர்பு :- 077 837 0196

## வீடு வாடகைக்கு உண்டு

யாழ்ப்பாணம் ஈச்சமோட்டை வீதியில் சகல வசதிகளுடன் கூடிய வீடு வாடகைக்கு உண்டு. அரச உத்தியோகத்தர்விரும்பத்தக்கது.
தொடர்பு :- 077 711 1041

## வேலையாள் தேவை

யாழ் நகரில் இயங்கும் வியாபார நிலையத்துக்கு வேலைக்கு ஆள் தேவை. யாழ் நகரில் உள்ளவர்கள் விரும்பத்தக்கது.
தொடர்பு:-
077 729 0300

## பாராட்டி வாழ்த்துகின்றோம்




கொழும்பு பல்கலைககழகத்தில் சட்டத்துறை யில் கல்வி பயின்று எமது பிரதேசத்தில் **முதலாவது சட்டமாணிச் சிறப்புப் பட்டத்தை** பெற்று எமது கிராமத் திற்கு பெருமை சேர்த்துள்ள பளை இத்தாவில் முருகேசு - அன்னலட்சுமி தம்பதியினரின் கனிஷ்ட புதல்வி
**செல்வி கோபிகா முருகேசு**
[LLB.HONS]
அவர்கள் கடந்த 02.08.2017 ஆம் திகதி கொழும்பு பண்டாரநாயக்கா நினைவு பன்னாட்டு மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற பட்டமளிப்பு விழாவில் சட்டமாணி சிறப்புப் பட்டம் பெற்றமை யையிட்டு மனதாரப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

**பளை இத்தாவில்**

வாழ்த்துவோர்
நிர்வாகிகளும் அங்கத்தவர்களும்
(சரஸ்வதி சனசமூக நிலையம்)

# WALK IN INTERVIEW

எமது நிறுவனத்தின் பின்வரும் பதவி வெற்றிடங்கள் உடனடியாக நிரப்பப்படவுள்ளன.

- **SECTION MANAGERS - 2Female**
- **GRAPHIC DESIGNERS - 1 Female**
- **MARKETING EXECUTIVE - 2 MALE**

வயதெல்லை 18 -23
முன்னனுபவம் அவசியம் இல்லை கவர்ச்சிகரமான வேதனம் வழங்கப்படும்
தகைமையுடையோர் சுயவிவரக்கோவையுடன் 01.09.2017 (வெள்ளி) 02.09.2017 (சனி) முற்பகல் 10.30 மணிக்கு நேரில்வரவும்.

**WINSTAR JOB BANK**
**106, தபாற் பெட்டிச் சந்தி, பலாலி வீதி, திருநெல்வேலி.**
**021 320 2789**

## மணிவிழா நாயகியைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்




திருமதி
**மிருநாளினி சச்சிதானந்தசிவம்**
(விஞ்ஞான ஆசிரியை - S.L.T.S-I)

**சேவை விவரம்:**

| | | |
|---|---|---|
| கிளி/ இந்துக் கல்லூரி | - 17.02.1994 | - 31.3.1997 |
| யா/பலாலி ஆசிரியர் பயிற்சிக்கல்லூரி | - 01.04.1997 | - 06.01.1999 |
| யா/ மல்லாகம் ம.வி. | - 07.01.1999 | - 27.01.2003 |
| கிளி/ இந்துக் கல்லூரி | - 28.01.2003 | - 03.04.2007 |
| கிளி/புனித பற்றிமா | - 04.04.2007 | - 09.01.2011 |
| யா/கட்டுவன்புலம் ம.வி. | - 10.01.2011 | - 31.08.2017 |

Best Wishes
**மணிவிழா நாளில் மனதார வாழ்த்துகின்றோம்**
**பாடசாலைச் சமூகம்**
**யா/கட்டுவன்புலம் மகாவித்தியாலயம்**
**தெல்லிப்பழை.**

## சென்ஜோன் அம்புலன்ஸ் சேவைக்கு ஆட்சேர்ப்பு

யாழ்.மாவட்ட சென்ஜோன் அம்புலன்ஸ் இல் கீழ்குறிப்பிட்ட சேவைகளுக்கு ஆட்சேர்ப்பு

1. **அம்புலன்ஸ்சாரதி** ( Aதர சாரதி அனுமதிப்பத்திரத்துடன் 05 வருடங்களுக்கு குறையாத அனுபவம் அவசியம)
2. எழுதுவினைஞர் (கணினி அனுபவம் அவசியம்)
3. நிர்வாக உத்தியோகத்தர் (ஆண்கள்)
4. **ஆண், பெண்** நோயாளர் பராமரிப்புத்தொண்டர்கள் (ஆண் தொண்டர்களிற்கு நாள் ஒன்றிற்கு 1300/- ஊக்குவிப்புக் கொடுப்பன வாக வழங்கப்படுகின்றது.)

தகுதியானோர் உரிய சான்றிதழ்களுடன் எதிர்வரும் ஞாயிற்றுக் கிழமை 03.09.2017 அன்று 3.00 மணிக்கு **இல.161 முதலாம் குறுக் குத்தெரு யாழ்ப்பாணம்** எனும் முகவரியில் அமைந்துள்ள சென்ஜோன் அம்புலன்ஸ் யாழ். மாவட்ட தலைமை அலுவலகத்திற்கு சமுகம் தரவும்.

**மேலதிக விவரங்களுக்கு அவசர அம்புலன்ஸ் சேவை**
**தொ.பேசி.இலக்கம்: 021 321 4444**

**செ.செல்வறஞ்சன்**
**மாவட்ட ஆணையாளர்**
**சென்ஜோன் அம்புலன்ஸ், யாழ். மாவட்டம்.**

சிவமயம்

## சந்நிதியான் ஆச்சிரம சுவாமிகளுக்கு பட்டமளிப்பு விழா



தமிழ்நாடு, மத்திய பல்கலைக்கழகம் வழங்கியுள்ள கௌரவ " டாக்டர் " பட்டம் வழங்கும் விழா

**இடம் : சந்நிதியான் ஆச்சிரமம்**
**காலம் : 01.09.2017 வெள்ளிக்கிழமை**
**நேரம் : 9.00 மணி**

**நிகழ்ச்சி நிரல்**

* பஞ்சபுராணம் ஓதுதல்
* ஆசியுரை
நல்லை ஆதீன முதல்வர்
ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள்
* வரவேற்புரை
திரு செ. பரமேஸ்வரன் (அதிபர்)
* அறிமுகவுரை
திருமதி சசிலேகா ஜெயராஜன் (ஆசிரியை)
* தலைமையுரை
திரு நா.யோகராஜா (பேராசிரியர்) (பணிப்பாளர். தொழில்நுட்பக் கல்விப் பயிற்சித் திணைக்களம். தலைமைச் செயலகம். கொழும்பு)
* சிறப்புரையும் விருது வழங்கலும்
பேராசிரியர் இரட்ணம் விக்னேஸ்வரன்
(துணை வேந்தர். யாழ்.பல்கலைக்கழகம்)
பேராசிரியர் கந்தையா தேவராசா
(முகாமைத்துவ பீடம். யாழ்.பல்கலைக்கழகம்)
* ஏற்புரை
ஆச்சிரம சுவாமிகள்
* நன்றியுரை
இரா.செல்வவடிவேல் (ஆசிரியர்)

குறிப்பு: செல்வச்சந்நிதியில் நடைபெறும் விசேட பூசை வழிபாடுகளுடன் விருந்தினர் அனைவரும் ஆச்சிரமத்திற்கு அழைத்து வரப்படுவர்.

" அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம் "

**செல்வச்சந்நிதி,**
**தொண்டைமானாறு.**

**சந்நிதியான் ஆச்சிரம அன்பர்கள்.**

## இராசம்மா திருமண மண்டபம்

யாழ் நல்லூரில் அதிநவீன வசதிகளுடன்
**இராசம்மா திருமண மண்டபம்**
கோயில் வீதி நல்லூரில் மங்களகரமாக இயங்கி வருகின்றது.
சகல மதத்தினருக்கும் தங்களின் கலாசார முறையில் வைபவங்களை நடத்தக்கூடிய வசதிகளுடன் அண்ணளவாக 1000 பேர்வரை வசதியாக அமரக்கூடிய இடவசதி கொண்டது
இப்பொழுதே உங்கள் ஓடர்களைப் பதிவுசெய்து கொள்ளுங்கள்

T.P.: 021 221 9420 /077 979 9708
076 397 7675

*rasammareceptionhall.com,*

# ராஜபக்சாக்களின் 'பைல்'களை தூசு தட்டத் தயாராகிறது அரசு

## சட்ட மா அதிபர் திணைக்களத்திடம் சிறப்பு அறிக்கை கோருகிறார் புதிய நீதி அமைச்சர்

கொழும்பு, ஓக. 31

துரித விசாரணைகளின்றி நீண்டகாலமாக தேங்கிக் கிடக்கும் ராஜபக்சாக்களின் விசாரணைக் கோவைகள் தொடர்பில் தமக்கு சிறப்பு அறிக்கையொன்றை விரைவில் சமர்ப்பிக்குமாறு புதிய நீதி அமைச்சர் தலதா அத்துகோரள சட்டமா அதிபர் திணைக்களத்திடம் கோரிக்கை விடுத்துள்ளார் என்று அறியமுடிகின்றது.



விசாரணைக் கோவைகளில் முன்வைக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் குறித்து ஆராய்வதற்கும், இவற்றுக்கு எதிராக ஏன் சட்ட ஏற்பாடுகள் மந்தகதியில் இடம்பெறுகின்றன என்பதை அறிந்துகொள்வதற்காகவுமே நீதி அமைச்சர் சிறப்பு அறிக்கையை கோரியுள்ளார் என்று உயர்மட்ட அதிகாரியொரு வர் சுட்டிக்காட்டினார்.

இந்த அறிக்கையை அடிப்படையாகக்கொண்டு சட்ட ஆலோசனைகளைப் பெற்றுக்கொண்ட பின்னரே அடுத்தக்கட்ட நடவடிக்கைகளில் அவர் களமிறங்கவுள்ளார் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்சவுக்கும் அவரது குடும்பத்தினருக்கும் எதிரான வழக்கு விசாரணைகளின்போது நீதி அமைச்சின்கீழ் இயங்கும் சட்டமா அதிபர் திணைக்களம் மந்தகதியில் செயற்பட்டுவருகின்றது என்று ஆளுங்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களாலேயே குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டுவருகின்றது.

இதன் பின்னணியில் முன்னாள் நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்சவே செயற்பட்டார் என்றும், அவரே ராஜபக்சாக்களுக்கு எதிரான விசாரணைகளை இழுத்தடித்து வருகின்றார் என்றும் ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார அண்மையில் நாடாளுமன்றத்தில் குற்றஞ்சாட்டியிருந்தார்.

உரிய ஆதாரங்கள் சாட்சியங்கள் இல்லாததன் காரணமாகவே வழக்குத் தொடுக்க முடியாதுள்ளது என்றும், நீதித்துறையின் செயற்பட்டால் தான் தலையிடவில்லை என்றும் முன்னாள் நீதி அமைச்சர் விளக்கமளித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

சர்ச்சைக்குரிய அவன்காட் விவகாரம், ஊவாவின் முன்னாள் முதலமைச்சரால் செய்யப்பட்டதாக கூறப்படும் குற்றச்சாட்டுகள், முதல் பெண்மணி சிரந்தி ராஜபக்சவுக்கு எதிராக தொடுக்கப்பட்டுள்ள வழக்குகள் உட்பட மேலும் சில விடயங்கள் தொடர்பான கோவைகளே தூசுதட்டப்படவுள்ளன.

விசாரணைகளை துரிதப்படுத்துமாறு சட்டமா அதிபர் திணைக்களத்துக்கு பணிப்புரை விடுத்தால் அது அழுத்தமாகவே கருதப்படும். அது கூட்டரசு கோட்பாட்டுக்கு முரணாக அமையும். எனவேதான், விசாரணைகளின் தன்மை முன்னேற்றம் பற்றி அறிவதற்காக நீதி அமைச்சர் அறிக்கை கோரியுள்ளார்.

தனது அமைச்சின்கீழ் செயற்படும் திணைக்களத்தின் வினைத்திறன் பற்றி ஆராய்வதற்காக சம்பந்தப்பட்ட அமைச்சருக்கு அறிக்கை கோருவதற்குரிய அதிகாரம் இருக்கின்றது. இதன் அடிப்படையிலேயே தலதா கோரிக்கை விடுத்துள்ளார்.

நீதி அமைச்சராக நியமனம் பெற்றுள்ள தலதா அத்துக்கோரள இன்று தனது கடமைகளைப் பொறுப்பேற்கவுள்ளார். இதற்கான நிகழ்வு முற்பகல் 9 மணிக்கு நீதி அமைச்சில் நடைபெறவுள்ளது. (5)

# 2025ஆம் ஆண்டிலேயே கடன் இல்லாத நாடு உருவாகும்

## தலைமை அமைச்சர் ரணில் புதுக்கதை

கொழும்பு, ஓக. 31

2020ஆம் ஆண்டளவில் பொருளாதாரத்தில் பெரிய மாற்றம் ஏற்படும். 2025ஆம் ஆண்டில் கடன் இல்லாத நாட்டை உருவாக்குவோம். இவ்வாறு தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.



கொழும்பு மாவட்டத்தில் ஆயிரத்து 100 குடும்பங்களுக்கு வீட்டுக் கடன் உதவி வழங்கும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாம் ஆட்சிப் பீடமேறும் போது சுற்று வட்டம் பூராகவும் கடன் சுமை காணப்பட்டது. கடன் சுமையை தீர்க்க முடியாத காரணத்தினாலேயே முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்ச இரண்டு ஆண்டுகளுக்கு முன்பே தேர்தலை நடத்தினார். எமது அரசாலும் கடன் செலுத்த முடியாது என்றே எம்மை பார்த்து கூறினர். நாம் இரு வருடத்தில் கடன் செலுத்துவதற்கான அனைத்து ஏற்பாடுகளை செய்து விட்டோம்.

அம்பாந்தோட்டை துறைமுகத்தை சீனா நிறுவனத்துடன் கைகோர்த்து அரச தனியார் கூட்டு பங்காண்மை மூலமாக முன்னேற்றவுள்ளோம். இதன் ஊடாக கடன் சுமையை மேலும் குறைக்க முடிந்தது.

இவ்வளவு கடன் சுமைக்கு மத்தியிலும் பெற்றோல், சமயல் எரிவாயு உள்பட அத்தியாவசிய பொருள்களின் விலைகளை குறைத்து, வருமானத்தை அதிகரித்தோம். அரச ஊழியர்களின் சம்பளத்தை அதிகரித்தோம். இரு வருடத்தில் இரண்டரை இலட்சம் தொழில்வாய்ப்புகளை உருவாக்கியுள்ளோம். பொருளாதாரத்தை மேலும் பலப்படுத்தியுள்ளோம்.

நாம் இந்தியாவுடன் நல்ல நட்பை வைத்து கொண்டுள்ளேம். எந்தவொரு பிரச்சினையும் இல்லை. சீனாவுடனும் ஜப்பானுடனும் அமெரிக்காவுடனும் ரஷ;யாவுடனும் எந்தவொரு பிரச்சினையும் இல்லை.

ஜப்பானின் நிதி உதவியுடன் கண்டி நகரத்தை அபிவிருத்தி செய்யவுள்ளோம். அதிவேக வீதி, மேல் மாகாண மாநகர வேலைத்திட்டம், சுற்றுலா துறை உள்ளிட்ட அனைத்து துறையையும் நாம் வளர்ச்சிக்கு உட்படுத்தவுள்ளோம். திருகோணமலை, மாத்தறை, அம்பாந்தோட்டை உள்ளிட்ட அனைத்து பகுதிகளை அபிவிருத்தி செய்யவுள்ளோம். வடக்கு, மலையகம், கிராமிய பகுதிகளில் வீடமைப்பு திட்டங்களை ஆரம்பிக்கவுள்ளோம்.

2020ஆம் ஆண்டளவில் பொருளாதாரத்தில் பெரிய மாற்றம் செய்யப்படும். 2025ஆம் ஆண்டில் நாட்டின் முழுமையான கடன் சுமையை நாம் இல்லாமல் செய்வோம் – என்றார். (5-31)

### ஏ.எல். பரீட்சையில் ஆள் மாறாட்டம்

கொழும்பு, ஓக. 31

கல்விப் பொதுத்தராதர உயர் தரப் பரீட்சையில் ஆள்மாறாட்டம் செய்த குற்றச்சாட்டில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

அம்பாறை மாவட்டத்திலேயே இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் நடைபெற்றுள்ளது.

கணக்கியல் பரீட்சைகக்காவே மாணவர் ஒருவர் ஆள்மாறாட்டம் செய்துள்ளார். பரீட்சை மேற்பார்வையாளரால் பொலிஸாருக்கு தெரியப்படுத்தப்பட்டதை அடுத்து, ஆள்மாறாட்டம் செய்ய வந்த 32 வயதான சந்தேகநபர் கைது செய்யப்பட்டார்.

அம்பாறை நீதிவான் நீதிமன்றத்தில் முற்படுத்த பொலிஸார் நடவடிக்கை மேற்கொண்டுள்ளனர். (5)

### ஐ.நாவில் செப். 19 இல் மைத்திரிபால உரை

அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன எதிர்வரும் 19ஆம் திகதி ஐ.நா. பொதுச் சபைக் கூட்டத் தொடரில் உரையாற்றவுள்ளார்.

ஐ.நா. பொதுச்சபையின் 72ஆவது கூட்டத்தொடர் எதிர்வரும் 12ஆம் திகதி நியூயோர்க்கிலுள்ள ஐ.நா. தலைமையகத்தில் ஆரம்பமாகவுள்ளது. உலக நாடுகளின் தலைவர்கள் கலந்து கொள்ளவுள்ளதுடன் 19ஆம் திகதியே உரைகள் இடம் பெறவுள்ளன. (5)


### விடுமுறையில் மாற்றமில்லை

கொழும்பு, ஓக. 31

முஸ்லிம்களின் ஹஜ் பெருநாள் கொண்டாடப்படும் திகதியில் மாற்றம் ஏற்பட்டாலும் அதனை முன்னிட்டு நாளை முதலாம் திகதி வழங்கப்பட்ட விடுமுறை நீக்கம் செய்யப்பட மாட்டாது என்று உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு தெரிவித்துள்ளது.

ஹஜ் பெருநாளை எதிர்வரும் 2 ஆம் திகதி கொண்டாடுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதனை முன்னிட்டு வழங்கப்பட்ட விடுமுறை ரத்து செய்யப்பட மாட்டாது எனவும், செப்ரெம்பர் 2 ஆம் திகதி சனிக்கிழமை என்பதால் அன்றைய தினத்தில் மேலதிக விடுமுறை தேவையில்லை எனவும் அமைச்சின் செயலாளர் நீல் டி அல்விஸ்சுட்டிக்காட்டியுள்ளார். (5)



# இலங்கை வான்பரப்பில் இந்திய வானூர்தி

கொழும்பு, ஓக. 31

இந்தியக் கடற்படையின் நீண்டதூர கண்காணிப்பு வானூர்தி இலங்கை எல்லைக்குள் நுழைந்து தேடுதல்களை நடத்தியதாக இந்தியக் கடற்படை தகவல் வெளியிட்டுள்ளது.

கேரளாவின் கொல்லம் கடற்பகுதியில் கடந்த சனிக்கிழமை இந்திய மீன்பிடிப் படகை மோதிவிட்டு கப்பல் தப்பிச் சென்றிருந்தது. தென்திசையில் தப்பிச் சென்ற அந்தக் கப்பல் ஹொங்கொங்கில் பதிவு செய்யப்பட்ட கப்பலாக இருக்கலாம் என்று இந்தியக் கடற்படை வட்டாரங்கள் தெரிவித்தன.

கொச்சியில் இருந்து 400 கடல் மைல் தொலைவில் என்பதால், நீண்டதூர கண்காணிப்பு வானூர்தி தேடுதலுக்காக அனுப்பப்பட்டது.

இலங்கை வான்பரப்பில் நுழைந்து தேடுதல்கள் நடத்தப்பட்டன. இதற்காக இலங்கை அதிகாரிகளிடம் அனுமதி பெறப்பட்டது. என்றும் இந்திய கடற்படை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (5)

# மகிந்த முடியுமென்றால் ஆட்சி அமைக்கட்டும்

## லக்ஸ்மன் கிரியெல்லவின் சவால் இது

கொழும்பு, ஓக. 31

மகிந்த அணியினர் மீது விரைவில் சட்டநடவடிக்கை எடுக்கப்படும். அவர்கள் எப்படி ஆட்சி அமைக்கப் போகின்றார்கள் என்பதையும் பார்ப்போம். முடிந்தால் அவர்கள் ஆட்சி அமைத்துக் காட்டட்டும். இவ்வாறு அமைச்சர் லக்ஸ்மன் கிரியெல்ல தெரிவித்தார்.

சனநாயகத்தை மீறும் வகையில் நாடாளுமன்றத்தில் நடந்து கொள்வதும் நாட்டில் தவறான கருத்துக்களை பரப்பியும் மகிந்த தரப்பினர் நடந்து கொள்கின்றனர்.

அரசில் பலருக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டுவந்து அதன் மூலம் அரசை வீழ்த்தலாம் என்று இவர்கள் நினைப்பது முட்டாள்தனமாகும். எத்தனை பிரேரணைகளை கொண்டு வந்தாலும் இவர்களின் முயற்சிகளை நாம் தோற்கடிப்போம்.

2020ஆம் ஆண்டு வரையில் கூட்டு அரசு பலமாக முன்னெடுக்கப்படும். எந்த முயற்சிகளின் மூலமாவும் கூட்டு அரசை அசைக்க முடியாது. அதையும் சொல்லிக் கொள்ள விரும்புகின்றோம். அதன் பின்னர் ஐக்கிய தேசியக் கட்சியின் கூட்டு அரசை அமைப்பதா அல்லது கூட்டனி அமைப்பதா என்பது குறித்து சிந்திக்க முடியும்.

தேர்தல் குறித்து மகிந்த அணியினர் கருத்துக்களை தெரிவித்த போதிலும் கடந்த இரண்டு பிரதான தேர்தல்களில் மக்களால் நிராகரிக்கப்பட்ட நபர்கள் இவர்கள். உள்ளூராட்சி சபைத் தேர்தலிலும் எமக்குச் சவால் விடு கின்றனர். ஐக்கிய தேசியக் கட்சியின் பலம் என்னவென்பது இதிலும் வெளிப்படுத்தப்படும். மாகாண சபைத் தேர்தல் நடத்தினாலும் அதிலும் நாம் பெரும்பான்மை பலத்துடன் வெற்றி பெறுவோம். எவ்வாறு மகிந்த தரப்பினர் மீண்டும் ஆட்சியை அமைகின்றனர் என்பதை நாம் பார்க்கின்றோம் - என்றார். (5.31)

# அரசை வீழ்த்துங்கள் பார்க்கலாம் !

## மகிந்த அணிக்கு சவால் விடுக்கிறார் அசாத் சாலி

கொழும்பு, ஓக. 31

அடுத்த வெசாக்கினுள் அரசை வீழ்த்தினால் மொட்டை அடித்துக் கொள்வேன். மகிந்த ராஜபக்ச முடியுமானால் இந்தச் சவாலை பகிரங்கமாக ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று தேசிய ஐக்கிய முன்னணியின் தலைவர் அசாத் சாலி தெரிவித்தார்.

அதிகாரத்தைப் பகிர்ந்து ஐக்கியப்படுத்தும் இயக்கம் கொழும்பில் நேற்று நடத்திய செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

அரசை வீழ்த்தி ஆட்சியைக் கைப்பற்றுவதாக நாடாளுமன்ற உறுப்பினர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்து வருகின்றார். அடுத்த வெசாக் தினத்துக்கு முன்னர் அரசை வீழ்த்துவதாக மகிந்த ராஜபக்ச தெரிவித்துள்ளார். அரசின் ஆட்சிக் காலம் முடிவடைவதற்கு முன்னர் ஒருபோதும் அரசை வீழ்த்த முடியாது. அதற்கு மகிந்த ராஜபக்ச தெரிவித்திருப்பதுபோல் அடுத்த வெசாக் தினத்துக்கு முன்னர் அரசை வீழ்த்தினால் நான் மொட்டை அடித்துக்கொள்வேன். மகிந்த ராஜபக்ச முடியுமானால் இந்தச் சவாலை பகிரங்கமாக ஏற்றுக்கொள்ளட்டும். மகிந்த ராஜபக்ச மற்றும் அவருடன் இருப்பவர்கள் தங்களின் ஆதரவாளர்களை தக்கவைத்துக் கொள்ளவே இவ்வாறான பொய்ப் பரப்புரைகளைத் தெரிவித்து வருகின்றனர். (5.31)

# சம்பந்தன் – நஸீர் மந்திராலோசனை!

அரசமைப்பின் 20 ஆவது திருத்தச் சட்டவரைவு தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் எதிர்கட்சித் தலைவருமான இரா.சம்பந்தனும் கிழக்கு மாகாண முதலமைச்சர் ஹாபீஸ் நஸீர் அஹமட்டும் நேற்று முன்தினம் மந்திராலோசனை நடத்தியுள்ளனர்.

கிழக்கு மாகாண சபையானது சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆகிய இரு கட்சிகளின் ஆட்சிக்குட்பட்டது. 20ஆவது திருத்தச் சட்டவரைவு கிழக்கு மாகாண சபையில் நேற்று முன்தினம் விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு நிறைவேற்றப்படும் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனால், காலையில் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனைத் தொலைபேசியில் தொடர்பு கொண்ட கிழக்கு முதல்வர் ஹாபீஸ் நஸீர் அஹமட் சட்டவரைவு தொடர்பில் பேச்சு நடத்தியுள்ளார்.

அதன் பின்னர் கிழக்கு மாகாண சபையின் கட்சித் தலைவர்கள் கூட்டம் முதல்வர் தலைமையில் நடைபெற்றது. இதன்போது 20ஆவது திருத்தச் சட்டவரைவு எதிர்வரும் 7ஆம் திகதியே சபையில் விவாதத்துக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு வாக்கெடுப்புக்கு விடப்படும் எனத் தீர்மானிக்கப்பட்டது.

மாகாண சபைகளைக் கலைக்கும் அதிகாரத்தை நாடாளுமன்றத்துக்கு வழங்கும் வகையில் சகல மாகாண சபைகளுக்கும் ஒரே நாளில் தேர்தலை நடத்துவதற்கு வழிவகுக்கும் 20ஆவது திருத்தச் சட்டவரைவு குறித்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நிலைப்பாட்டைக் கிழக்கு மாகாண முதலமைச்சருக்குத் தொலைபேசியில் நடைபெற்ற உரையாடலில் தெளிவுபடுத்தினேன் என்று கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தெரிவித்தார்.

20ஆவது திருத்தச் சட்டவரைவு குறித்து வடக்கு முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன் தங்களுடன் பேசியுள்ளாரா என்று சம்பந்தனிடம் வினவியபோது, இதுவரைக்கும் அவர் (விக்னேஸ்வரன்) என்னுடன் பேசவில்லை, என்று பதிலளித்தார். (5)

# 20இக்கு மேற்குலகம் போர்க்கொடி இராஜதந்திர நெருக்கடிக்குள் அரசு

## தேர்தலை உடன் நடத்துமாறு அழுத்தம்

கொழும்பு, ஓக. 31

மாகாண சபைகளுக்குரிய தேர்தல்களை ஒத்திவைக்கும் நோக்கில் அரசு முன்னெடுத்துவரும் காய்நகர்த்தல்களுக்கு மேற்குலக நாடுகள் கடும் எதிர்ப்பை வெளியிட்டுள்ளன என்று இராஜதந்திர வட்டாரங்களிலிருந்து அறியமுடிகின்றது.

கொழும்பிலுள்ள தமது தூதுவர்கள் ஊடாகவே இலங்கை அரசிடம் அதிருப்தியை வெளியிட்டுள்ளன.

மாகாண சபைகளைக் கலைக்கும் அதிகாரத்தை நாடாளுமன்றத்துக்கு வழங்கும் வகையிலும் அனைத்து மாகாண சபைகளுக்கும் ஒரே நாளில் தேர்தல் நடத்தும் நோக்கிலும் 20ஆவது அரசமைப்புத் திருத்தச் சட்டவரைபை அரசு நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்துள்ளது.

ஊவா மாகாண சபையின் பதவிக்காலம் 2019ஆம் ஆண்டே நிறைவடைகின்றது. இந்தச் சட்டவரைவு நிறைவேறிய பின்னர் ஊவா மாகாணத்தின் ஆயுள் முடிவடையும் வரை மாகாணசபைத் தேர்தலை ஒத்திவைப்பதே அரசின் நோக்கமாக இருக்கின்றது என்று எதிர்க்கட்சிகளும், சிவில் அமைப்புகளும் சுட்டிக்காட்டி வருகின்றன.

> “இலங்கையில் சனநாயக ஆட்சிக்காக குரல் கொடுத்துவரும் மேற்குலக நாடுகள் இவ்வாறான சந்தர்ப்பத்தில் மௌனம் காத்தால் அதன் உண்மை நோக்கம் மீது சந்தேகம் ஏற்படும்.

இவ்வாறானதொரு பின்புலத்தில் சிவில் அமைப்புகளுக்கும், வெளிநாட்டு தூதுவர்களுக்கும் இடையிலான சந்திப்பொன்று கொழும்பில் நடைபெற்றது. இதன்போது எடுக்கப்பட்ட முடிவின் பிரகாரமே மேற்குலக நாடுகளின் தூதுவர்கள் தமது அதிருப்தியை வெளியிட்டுள்ளனர்.

சனநாயக கட்டமைப்பில் தேர்தல் முக்கிய இடத்தை வகிக்கின்றது. அது குறிப்பிட்டதொரு தினத்தில் நடைபெறவேண்டும். இலங்கையில் சனநாயக ஆட்சிக்காகக் குரல் கொடுத்துவரும் மேற்குலக நாடுகள் இவ்வாறான சந்தர்ப்பத்தில் மௌனம் காத்தால் அதன் உண்மை நோக்கம் மீது சந்தேகம் ஏற்படும்.

மகிந்த ஆட்சியின் போது தேர்தல்களை உடன் நடத்துமாறு வலியுறுத்திவந்த இந்த நாடுகள் தற்போது பின்வாங்கினால் பக்கச்சார்பான அயலுறவுக் கொள்கை என்ற விமர்சனத்துக்கும் உள்ளாக வேண்டிவரும். இவை உள்ளிட்ட காரணிகளைக் கருத்தில் கொண்டே அதிருப்தி வெளியிடப்பட்டுள்ளது என்று அறிய முடிகின்றது.

இவ்வாறானதொரு பின்னணியிலேயே அரசு 20ஆவது திருத்தச் சட்டவரைவில் மாற்றங்களை முன்வைக்க இணங்கியிருக்கக் கூடும் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன. (5)

# இந்தியப் பெருங்கடல் செயலமர்வு இன்று

## ஓரங்கட்டப்படுகின்றதா சீனா ?

கொழும்பு, ஓக. 31

இந்தியப் பெருங்கடல் செயலமர்வு 2017 கொழும்பில் இன்று ஆரம்பமாகவுள்ளது.

இரண்டு நாள்கள் நடைபெறும் இந்தச் செயலமர்வில் பங்கேற்க இந்திய அயலுறவுத்துறை அமைச்சர் சுஸ்மா சுவராஜ் தலைமையிலான உயர்மட்டக் குழு கொழும்பு வந்துள்ளது.

சுமார் 35 நாடுகள் பங்கேற்கும் இந்தச் செயலமர்வு அலரிமாளிகையில் இடம்பெறவுள்ளது.

இந்திய பெருங்கடல் பிராந்தியத்தில் அமைதி, முன்னேற்றம், செழிப்பு என்ற தொனிப்பொருளில், புதுடில்லியைத் தளமாகக் கொண்ட இந்தியப் பவுண்டேசன் அமைப்பு இதனை ஏற்பாடு செய்துள்ளது.

அழைப்பு பேச்சாளர்களின் பட்டியலில் சீன பிரதிநிதிகள் எவரும் இடம்பெறவில்லை. இதுகுறித்துக் கருத்து வெளியிட்டுள்ள அமைச்சர் சாகல ரத்நாயக்க, கொழும்பில் உள்ள சீனத் தூதுவர் சீனாவின் பிரதிநிதியாகப் பங்கேற்பார்.

பல்வேறு சீன அமைப்புகளும் இதில் கலந்துகொள்கின்றன என்று குறிப்பிட்டார். (5)

# புதையல் தோண்டிய ராணுவத்தினர் சிக்கினர்

திருகோணமலை ஹொரவப்பொத்தானை தலபத்குளம காட்டுப் பகுதியில் புதையல் தோண்டிய குற்றச்சாட்டில் இராணுவச் சிப்பாய் உள்ளிட்ட ஆறு பேர் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டுள்ளனர். ஹொரவப்பொத்தானைப் பொலிஸ் நிலையத்துக்குக் கிடைத்த இரகசியத் தகவலுக்கு அமைவாகவே இவர்கள் சுற்றிவளைக்கப்பட்டு கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்களில் ஓய்வுபெற்ற முன்னாள் இராணுவ சார்ஜனும், இராணுவச் சிப்பாயும் உள்ளடங்குகின்றனர்.

புதையல் தோண்டுவதற்குக் கொண்டு சென்ற இரண்டு மோட்டார் சைக்கிள், மின் பிறப்பாக்கி, கல் உடைக்கப் பயன்படுத்தும் இயந்திரம், பூசைக்கு பயன்படுத்தும் பொருள்கள் ஆகியவை கைப்பற்றப்பட்டுள்ளன. (5)

## மத்தல வானூர்தி நிலைய விவகாரத்தில்

# இந்தியாவுக்கு கட்டுப்பாடுகள் விதிப்பதில் இலங்கை கவனம்

கொழும்பு, ஓக. 3

மத்தல வானூர்தி நிலையத்தை இந்திய நிறுவனத்துக்குக் குத்தகைக்கு வழங்குவதற்கு கொள்கை முடிவு எடுக்கப்பட்டுள்ளதை அடுத்து, அதனை எவ்வாறு சிறந்த முறையில் அபிவிருத்தி செய்யலாம் என்பது தொடர்பாக அரசு இந்தியாவுடன் தொடர்பு கொண்டுள்ளது.

இதற்காக உப குழுவொன்று அமைக்கப்பட்டுள்ளதாக அமைச்சரவை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. இது தொடர்பாக பல்வேறு யோசனைகள் முன்வைக்கப்பட்டுள்ள போதிலும், இன்னமும் இறுதி இணக்கப்பாடு எட்டப்படவில்லை.

வானூர்தி நிலையத்துடன் இணைந்ததாக, வானூர்திப் பயிற்சிப் பாடசாலை, வானூர்திப் பராமரிப்பு மையம் என்பனவற்றை அமைப்பது குறித்த யோசனைகளும் இதில் அடங்கியுள்ளன.

மத்தல வானூர்தி நிலையத்தை வர்த்தக சேவைகள் தவிர்ந்த ஏனைய தேவைகளுக்காக பயன்படுத்துவதற்குக் கட்டுப்பாடு விதிப்பதற்கான சாத்தியப்பாடுகள் குறித்தும், அரசு ஆலோசித்து வருகின்றது. (5)

# பட்ஜெட்டில் இம்முறை சலுகைகள் கிடையாது

## எதிர்வுகூறுகின்றது மகிந்த அணி

கொழும்பு, ஓக. 31

முன்னாள் நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்க முன்னெடுத்த செயற்பாடுகளின் பிரதிபலனையே, அடுத்த ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் எதிர்பார்க்க முடியும். நிவாரணங்கள், சலுகைகள் எதுவுமற்றதாகவே வரவு - செலவுத் திட்டம் அமையும். இவ்வாறு மகிந்த அணி தெரிவித்துள்ளது.

கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற பத்திரிகையாளர் சந்திப்பில் மகிந்த அணி நாடாளுமன்ற உறுப்பினர் பந்துல குணவர்த்தன தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

முன்னாள் நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்க பதவியைப் பொறுப்பேற்பதற்கு முன்னர் நாட்டில் இருந்த பொருளாதார நிலை, அவர் பதவிக்கு வந்த பின்னர் சீர்குலைந்தது. அந்தப் பாதிப்புத் தொடர்பில் பன்னாட்டு நாணய நிதியம் தலையிட்டு உடன்படிக்கை கைச்சாத்திட்டுள்ளது.

அந்த உடன்படிக்கை மூலம் இணக்கப்பாட்டுக்கு வந்துள்ள விடயங்களை நடைமுறைப்படுத்த வேண்டிய தேவை உள்ளது. அதனை நடைமுறைப்படுத்த முனையும்போது வரவு செலவுத் திட்டத்தினூடாக மக்களுக்கு சலுகை வழங்குவதில் நெருக்கடியுள்ளது. எவர் நிதியமைச்சர் பதவி வகிக்கின்றபோதும் முன்னாள் அமைச்சர் ரவி கருணாநாயக்க நாணய நிதியத்துடன் செய்துகொண்டுள்ள உடன்படிக்கைக்கு புறம்பாகச் சென்று வரவு செலவுத் திட்டத்தை தயார் செய்ய முடியாது.

அரசு நிறைவேற்றுவதற்கு எதிர்பார்த்துள்ள இறைவரிச் சட்டவரைவினால் நாட்டு மக்கள் பல்வேறு அசௌகரியங்களை எதிர்கொள்ள வேண்டி வரும். மக்கள் தற்போதைக்கு அனுபவிக்கும் சலுகைகள் சிலவற்றை இழக்க வேண்டி நேரிடும்- என்றார். (5-31)



# தீ விபத்தில் சாம்பரானது இராணுவத்தின் வாகனம்

கொழும்பு, ஓக. 31

தெற்கு அதிவேக நெடுஞ்சாலையில், இராணுவ உயரதிகாரிகள் பயணம் செய்த வாகனம் திடீரெனத் தீப்பிடித்து எரிந்து நாசமானது. கொட்டாவ வெளியேற்றப் பகுதியில் இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் காலை இடம்பெற்றது.

மட்டக்களப்பு கல்லடி இராணுவ முகாமில் இருந்து, பனாகொட இராணுவத் தளத்துக்குச் சென்று கொண்டிருந்த வாகனத்திலேயே தீ விபத்து ஏற்பட்டது.

இதில் மூன்று இராணுவ அதிகாரிகள் இருந்தனர். தீப்பிடித்ததும், அவர்கள் வாகனத்தில் இருந்து குதித்து வெளியேறியதால், காயங்களின்றி உயிர் தப்பியதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

தீவிபத்து ஏற்பட்டமைக்கான காரணம் தெரியவில்லை. இதுகுறித்த இராணுவ மற்றும் பொலிஸ் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. (5)

# காணாமற்போனோர் விவகாரத்தில் நாடு கடந்த தமிழீழ அரசு கரிசனை

கொழும்பு, ஓக. 31

காணாமல் ஆக்கப்பட்டோருக்கான பன்னாட்டு நாளையொட்டி நாடு கடந்த தமிழீழ அரசு இரண்டு செயற்பாடுகளை ஆரம்பித்துள்ளதாக, அந்த அரசின் தலைமை அமைச்சர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

இலங்கை அரச படைகளினாலும் அதன் கட்டமைப்புகளினாலும் காணாமல் ஆக்கப்பட்டோருக்கான தனித்த இணையத்தளம் ஒன்றினை நாடு கடந்த தமிழீழ அரசு அறிமுகப்படுத்தவுள்ளது. இதேவேளை பன்னாட்டு மனித உரிமைகள் அமைப்பொன்றுடன் இணைந்து மனித உரிமை அமைப்புகள், சமூக அமைப்புகள், செயற்பாட்டாளர்களை நோக்கிய உலகளாவிய ரீதியிலான கையெழுத்து இயக்கம் ஒன்றினையும் தொடங்குகவுள்ளது. (5)

# 2020இல் ஜே.வி.பி ஆட்சி

கொழும்பு, ஓக. 31

ரணில் மைத்திரி கூட்டரசு மீது மக்கள் நம்பிக்கை இழந்துவிட்டார்கள். மகிந்த ஆட்சியும் இனி வரப்போவதில்லை. 2020ஆம் ஆண்டு மக்கள் விடுதலை முன்னணி (ஜே.வி.பி) ஆட்சி அமைக்கத் தயார். இவ்வாறு அந்தக் கட்சியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான அனுரகுமார திசநாயக்க தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

மகிந்தவை மக்கள் வெறுத்தமையினால், மைத்திரி ரணில் கூட்டரசுக்கு வாக்களித்தனர். அவர்களது செயற்பாட்டிலும் மக்கள் நம்பிக்கை இழந்துவிட்டனர். பெரிய குற்றவாளிகளை இரண்டு ஆண்டு காலத்தில் கூட்டு அரசு கண்டுகொள்ளவில்லை. நாம் மாத்திரமே 2 ஆயிரம் முறைப்பாடுகளை ஆணைக்குழுவுக்குச் செய்துள்ளோம். அரசின் தலையீட்டால் அவற்றின் மீது நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

இந்த அரசைத் தொடர அனுமதிக்க முடியாது. 2020ஆம் ஆண்டு மக்கள் விடுதலை முன்னணியின் ஆட்சியை உருவாக்க மக்கள் ஒன்றிணைய வேண்டும் - என்றார். (5,31)



கும்பாபிஷேகம்
31.08.2017

இலங்கை – யாழ்ப்பாணம் – காரை

# திருவருள்மிகு தன்னை சித்தி

## ஆவர்த்தனப் பிரதிஷ்டா

# மஹா கும்பாபிஷேக திருக்குடமுழு

### ஆசிச் செய்தி



ஈழத் திருநாட்டின் சிரசென விளங்கும் யாழ்ப்பாணத்தைச் சூழ்ந்து விளங்கும் காரைநகர் என விளங்கும் புண்ணிய பூமியில் கல்வியாளர்கள், விவசாயிகள், வர்த்தகர்கள் எனவும் பக்தர்கள், சித்தர்கள், பௌராணிகள்கள் எனும் ஆத்மீகவாதிகளையும் கொண்ட களபூமி எனும் கிராமத்தில் "தன்னை" எனப்படும் குறிச்சியில் தானே விரும்பிக் கோணில் கொண்டு வீற்றிருந்து அடியவர்களுக்கு அருள்பாலித்துக் கொண்டிருக்கும் தன்னை சித்தி விநாயகருக்கு இன்று கும்பாபிஷேகம் நடைபெறுவது அவனருளே. நாட்டின் எந்தப் பகுதியிலிருந்தாலும் காரைநகரைப் பிறப்பிடமாகக் கொண்டவர்கள் அனைவரும் வருகை தந்து இந்த் கும்பாபிஷேக நிகழ்வில் கலந்து கொள்வது சிறப்பம்சமாகும். இந்த விழாவில் கலந்து கொள்பவர்கள் மட்டுமல்லாது அனைத்து மக்களும் வையத்துள் வாழ்வாங்கு வாழ விநாயகப் பெருமானின் அருள் கிட்ட வேண்டுமெனப் பிரார்த்திப்பதோடு ஆசி கூறி அமைகின்றேன்.

**ஆதீனகுரு முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சார்ய சுவாமிகள் - நல்லை ஆதீனம்.**

### ஆசிச் செய்தி



**தேடி வருவோர்ங்கு கோடிபலன் கொடுக்கும் சித்தி விநாயகர்**

தான் இருக்க வேண்டிய இடத்தை தானே தெரிவு செய்து வந்தமர்ந்தவர் தான் தன்னை விநாயகர். பதினெட்டாம் நூற்றாண்டுக்கு முன்னர் இந்தியாவிலிருந்து இருபடகில் வந்த பிராமணர்களுடன் இப் பிள்ளையாரும் வருகைதந்தார். காற்றால் படகுகள் திசைமாற இப்போது இருக்கும் இடத்தில் இருந்து சிறிது தூரத்தில் கரை ஒதுங்கியவர்தான் எம்மையாளும் இந்த தன்னை சித்திவிநாயகர். தான் கரை ஒதுங்கி இருக்கும் இடத்தை அந்தணர் ஒருவருக்கு அறிவித்து அயலவர்களின் உதவியுடன் எடுத்து வந்தபோது தான் இருக்க உகந்த இடம் இதுதான் என்று அசைய மறுத்து இவ்விடத்திலேயே அமர்ந்து திருவருள் பாலிக்கத் திருவுளம் கொண்ட பெருமான். அப்பேர்ப்பட்ட பெருமானின் கும்பாபிஷேகக் குட முழுக்குப் பெருஞ்சாந்தி விழா நடைபெறுவதையிட்டு பெருமகிழ்வடைகின்றேன். நூறாண்டுக்கு மேலாக புனருத்தாரணம காணாமல் சிதல தலமடைந்து பூசை புனஸ்காரங்களுடன் மட்டும் இப்பெருமானின் அருளாட்சி நடைபெற்றுவந்தது. பல தடைவைகள் பலபேர் முயற்சித்தபோதும் சித்தி விநாயகரின் திருவுள்ளமோ என்னமோ முயற்சி கைகூடவில்லை. இப்போது அடியார்களது பெருமுயற்சியினாலும், உதவியினாலும் அடியேனின் தலைமையில் இப்பெரும் பணியை நிறைவுற திருவுளம் கொண்ட இறைவனின் கருணையை நினைத்து மனம் நெக்குகின்றது.

அனைத்து அடியார்களும் இப்பெரு விழாவிற் கலந்து சித்தி விநாயகப் பெருமானைத் தரிசித்து அவரின் பேரருளிற் திளைப்பார்களாக.

**சங்கரப்பிள்ளை, அறங்காவலர்.**

### தமிழருவி த. சிவகுமாரன் அவர்களின் வாழ்த்துச் செய்தி



"என்னை நினைந்து அடிமை கொண்டு
என் இடர் கெடுத்துத்
தன்னை நினையைத் தருகின்றான் -புன்னை
விரசுமகிழ் சோலை வியன் நாரையூர் முக்கன்
அரசு மகிழ் அத்தி முகத்தான்

நம்பியாண்டார் நம்பி

கோழைபடாத மேழிச்செல்வரும் குறைவுபடாத கல்விச் செல்வரும் நிறைந்து பொலியும் காரைநகரில் களபூமி, தன்னைப் பகுதியில் அருளாட்சி புரிந்து வரும் ஆடரைச் சித்தி விநாயகருக்கு இன்று கும்பாபிடேகம் இந்த குடமுழுக்கு பெருவிழா என்பது முதன் முறை இடம் பெறும் பொழுது 'பிரதிட்டை' வகையிலும் பின் பன்னிரண்டாண்டுகளுக்கு ஒரு முறை இடம் பெறும் பொழுது 'பிராயச்சித்தம்' வகைக்குள்ளும் அடங்கும் அதனால் கும்பாபிடேகங்கள் அனைத்துமே சிறப்பானவை.

'பெருங்சாந்தி' காணாதே மோதியோ பூம்பாவாய் என சம்மந்தப் பெருமான் குடமுழக்கின் பெருமையை வலியுறுத்துகிறார். அவ் வகையில் இன்று 'தன்னை ' நினைவார்க்கு சித்தியையும் புத்தியையும் அதன் மூலம் 'இலட்சத்தையும் ' 'இலாபத்தையும்' தரவல்ல விநாயகனுக்கு இடம் பெறும் கும்பாபிஷேகப் பெருவிழாவில் அனைவரும் சேர்ந்து கலந்து பார்த்து பரவசித்துப் பக்தராக வழிபட்டும் பயன்பெறுவோமாக

'வேழமுகத்து விநாயகனைத் தொழ வாழ்வு மிகுந்து வரும்

**தமிழருவி த. சிவதாரன்**

### வணக்கப்பா

**தலம்: சித்திவிநாயகர்** **இடம்: தன்னை**

தன்னனன தன்ன தான- தனதான
நந்தமது துன்ப மோடி நன்மையவை நண்ணு மாறு
நன்கருளை நின்று வார - வருநாதா
நம்பிவரு மன்ப ராரி னுள்ளமுள கொண்டு வாழ
நங்கணெனு முன்ப தாதி - தருதேவே
செந்திருவ தென்றும் பாரில் கொண்டுலவு மின்ப வாழ்வை
செம்மையொடு இங்கு காணு மருளீவோய்
செங்கதிரெ முந்து காலை வந்துபணி கின்ற காலை
செந்தொடைகொ ணர்ந்து நானும் - பணியேனோ?
பந்தமற இங்கு சேரு பங்கயப தந்தொழாது
பந்தவினை கொண்டு ஆடி - திரிவேனோ?
பண்டைவினை வெந்து நீறு நன்பனுவல் தந்து ஈறில்
பஞ்சினடி வந்து வாழ பெறுவேனோ?
சந்ததமு முந்தன் தாளை சந்நிதிமுனின்று தாழர்
சந்ததியொ டென்றும் வாழ - அருள்வோனே
தஞ்சமத டைந்த காரை தன்னையிலிருந்து நாளும்
தண்ணருள்வ ழங்கி ஆளு - பெருமானே.

**புலவர்**
**தெய்வத்தமிழ்கவியர்**
**இராசையா - குகதாசன்**

ஆலய

பதினெட்டாம் நூற்றாண்டுக்கு முன்னர் தென்னிந்தியாவில் இராமேஸ்வரத்துக்கு அருகில் கணபதி திட்டு என்றொரு சிறு கிராமம் இருந்தது. அங்கே வாழ்ந்து வந்த பிராமணக்குடும்பத்தினர் சிலர் இரண்டு வள்ளங்களில் இலங்கைக்கு வர புறப்பட்டனர். மற்ற வள்ளத்தில் விநாயகப்பெருமான் சிலை இருந்தது வரும் போது கடலில் ஏற்பட்ட கொந்களிப்பினால் வள்ளங்கள் திசைமாறின. பிராமணக் குடும்பத்தினர் இருந்த வள்ளம் பொன்னாலைக்கும் மாதகலுக்கும் இடையே உள்ள திருவடி நிலை என்னும் கடற்கரையை அடைந்தது. அனைவரும் வள்ளத்தில் இருந்து இறங்கி பற்றைக் காடுகளுக்கு ஊடாகச்சென்று சங்கானை சண்டிலிப்பாய் என்னும் ஊர்களைக் கடந்து உடுவில் என்ற இடத்தை அடைந்தனர். அங்கே ஓர் அரசமர நிழலில் ஸ்ரீமீனாட்சி சுந்த ரேஸ்வரர் கோயில இருந்தது அவ்விடத்தில் அவர்கள் தங்கி அயலவர் களின் உதவியுடன் வாழ்ந்து வந்தனர். தமது குல தெய்வமான விநா யகப் பெருமான் சிலையை இழந்தமை அவர்களது மனத்தை தாக்கிக் கொண்டிருந்தது.

ஒருநாள் அதிகாலையில் பிராமணர் ஒருவர் திடீரென எழுந்து அயலவர்களை அழைத்து விநாயகப்பெருமான் சிலை காரைதீவு கிழக்குக் கடற்கரையில் தங்கியிருப்பதாக தாம் கண்ட கனவைப்பற்றித் தெரிவித் தார். உடனே பிராமணர் இருவர் அயலவர்களின் உதவியுடன் அந்தக் கடற்கரையை அடைந்து பலத்த தேடுதலின் பின்னர் சிலையைக் கண்டு பேரானந்தத்துடன் சிலையை தூக்கிக் கொண்டு சிறிய தூரம் சென்றதும் தொடர்ந்து அதனைக் கொண்டு செல்ல முடியாத ஒரு நிலை அவர்களுக்கு ஏற்பட்டு விட்டது. எனவே அவர்கள் அந்த இடத்தில் குடிசைக்கோயில் ஒன்றை அமைத்து விநாயகர் சிலலயை ஸ்தாபித்து வேண்டிய கிரியைகளைச் செய்தனர். பூசை நடைபெற்று வந்தது. அற்புதங்கள் பல நிகழ்ந்தன. இதனை அறிந்த மக்
சிறந்த மானாமுதலி வம்சத்தினர் நிலத்தை
னர். முதலியார் வம்சத்தினர். இக்குடிசைக்
மண்டபம், மகாமண்டபம் என்றவாறு ஆக
னர். இக்கோ யில் தான் தன்னை சித்தி விநா
சிறப்பாக நடைபெறுவதற்காகத் தங்களுக்கு
யிலுக்கு உடமையாக்கியதுடன் அந்தணர்
தனர். ஆலயத் தில் உள்ள விநாயகர் விக்கி
ப்பீடத்துடன் ஒரே கல்லில் செதுக்கப்பட்டது.
பகுதிக்கு கீழே பீடக்கல்லில் ஒரு துவாரம் உ
செய்யும் பால், இளநீர் முதலிய அபிஷேகத்
வந்து பீடத்துடன் முற்பகுதியால் வெளியேறு

பதினெட்டாம் நூற்றாண்டில் தமிழ் நாட்டி
தமிழ் வித்தகராக விளங்கிய முருகேசையர்
காலப்பகுதியில் விநாயகப்பெருமான் கருணை
செய்யுள்கள் பாடினார். இவ் அந்தாதி பூர்த்த
ஆண்டு பிறந்த முரு கேசருடைய மகன் கார்த்
ப்பட்டு பூர்த்தி செய்யப்படாதிருந்த தன்னை ய
புலமையை வெளிப்படுத்தினார். கங்காதர
என்னும் பட்டம் சூட்டப்பட்டது. அப்போது இ
இவரது பெயர் கார்த்திகேசுப்புலவர் என வ
ஆலய அர்ச்சகராக இருந்த வேதாகம மு

**கும்பாபிஷேகம் - 31.08.2017 (வியாழக்கிழமை)**
**முகூர்த்தம்**
**காலை 7.37 முதல் 9.00 மணிவரை**

**தன்னையமக அந்தாதியின் 33 ஆவது பாடல்**

பரிசம்பு காணத்தென் னற்களித் தோற்கருள் பாலிக்குமு
பரிசம்பு காதலன் மெய்யன்பினோடு பணியிலினிப்
பரிசம்பு காமற் கதி கொடுப்பான் பருத்துத் தளைத்துப்
பரிசம்பு கராகி றேங்கிடந் தன்னைப் பழம் பொருளே

**33 ஆவது பாடலின் பொழிப்பு**

பெருத்து வளர்ந்த நாவல் மரமும் அகில் மரமும் நிறைந்து வழியும் தன்னையம்பதியில் வீற்றிருந்தருள் புராதனர் குதிரைகள் நரிகளாக பார்க்க அரிமர்த்தன பாண்டியனுக்கு உதவிய சிவபிரானின் திருப்புதல்வர் உண்மை அன்புடன் தொழுதால் இனிமேல் பிறவித் துன்பத்துள் பிறந்திறந்து வருந்தாமல் மோட்ச சாம்பிராச்சியததை அருளுவார்.

**விநாயகப்பெருமான் அடியார்களே!**

சிவபூமி என விளங்கும் இலங்கைமணித் திருநாட்டின் வடபால் சிகரமாய் விளக்கும் யாழ்ப்பாண நன்நகரின் மேற்குத் திசையில் சைவமும், சீலமும், நன்நெறியும், தமிழும் தழைத்தோங்கும் காரை மாநகரில் வரலாற்று சிறப்பும் தொன்மை மிக்க விளை களமாகத் திகழும் களபூமி கிராமத்தில் தன்னையம்பதியில் வீற்றிருக்கும் சித்திவிநாயகர் ஆலயம் கருங்கற்களால் மூலஸ்தானம், அர்த்த மண்டபம், மகா மண்டபம், தரிசன மண்டபம், தம்ப மண்டபம், சந்தான கோபாலர் ஆலயம், முழுமையாக அமைக்கப்பட்ட ஆலயம். சிற்ப வேலைகளாலும், வர்ண வேலைகளாலும், அழகூட்டி புதுப்பொலிவு கண்டு புதிதாக சந்தான கோபாலர், வைரவர், சண்டேஸ்வரர், வசந்த மண்டபம், நாகதம்பிரான் புதிதாக விநாயகர் எழுந்தருளி விக்கிரகம் சுவாமிகளுக்கும் மூலஸ்தான திரிதள விமானம் மற்றும் ஏனைய விமானங்களுக்கும் புதிதாக அமைக்கப்பட்ட மணிக் கோபுரத்திற்கும் நிகழும் மங்கலந் தரும் ஏவிளம்பி வருஷம் தட்சிணயனமும், வருஷருதுவும் ஆவணித்திங்கள் 15 ஆம் நாள் (31.08.2017) வியாழக்கிழமை காலை 07.37 மணிமுதல் 9.
லக்கினமும் தசமித் திதியும் ஆவணிமூல நட்சத்திரமும் சித்த
வேளையில் மஹா கும்பாபிஷேகப் பெருவிழா நடைபெற விந
துள்ளார். மீளா அடியவர்கள் ஆசார சீலர்களாக மஹா கும்பா
கொண்டு விநாயகரின் அருள்பெற்று சகல செல்வயோகமிக்க பெ

**கிரியா கால விவரம்**

**ஆவணித்திங்கள் 15 ஆம் நாள் (31.08.2017) வியாழக்**
**மணிமுதல்**

விநாயகர் வழிபாடு. யாக பூஜை ஹோமம். அக்கினி சம்யோஜ
சம்யோஜ நம் ஜய ஹோம பூஜை சமர்ப்பணம், தீபாராதனை
பாராணயனம், கீதவாத்தி யாஞ்சலி சமர்ப்பணம், நடனாஞ்ச
பஹிர்பலி, யாத்திரதானம், சர்வமங்கல வாத்தியங்கள் ஒலிக்க
தான கும்பங்கள் உத்தாபனம், வீதி பிரதக்ஷணம்.

**காலை 6.30 மணிமுதல் தூபிகள் அபிஷேகம், காலை 7.**
**மணிவரையுள்ள கன்னி இலக்கின சுபவேளையில் மஹா**


வேத பூஜை திருக்கதவம் திறத்தல், சர்வமங்கலதச தரிசனம், எ
உபசார பூஜை, கும்பாபிஷேக பல சமர்ப்பணம், எஜமான் அபி
பூஜை, மகாபிஷேகம், விஷேட பூஜை, அர்ச்சனை, அருட்பிரசா
பூஜை (அன்னதானம்) வழங்கல்.

மாலை 6.00 மணிமுதல்

விஷேட பூஜை, விஷேட கூட்டுப் பிரார்த்தனை 8.00 மணிக்கு
தொடர்ந்து விநாயகப்பெருமான் திருவீதியுலாவருதல்.

குறிப்பு: கிரியை காலங்களில் அடியவர்கள் ஆசார சீலர்களாக
பூஜைக்கு அபிஷேகத்திற்கு பூ, பூமாலை, பால், தயிர், இளநீர், பு
கொடுத்து விநாயகப்பெருமானின் அருளைப் பெற்றுய்யுமாறு கே
கும்பாபிஷேகத்தைத் தொடர்ந்து மண்டலாபிஷேக
தல

### வாழ்த்துச் செய்தி



இந்துசமுத்திரத்தின் முத்தென திகழும் எழில் மிகுந்த இலங்கை திருநாட்டின் சிரசாக விளங்குவது யாழ்ப்பாணம் அச்சிரசின் நெற்றித்திலகமாக விளங்குவது காரைநகர் சித்தர்கள். பக்தர்கள் நிறைந்து வாழ்ந்த இப் புண்ணிய பதியில் பண்டயகாலம் முதல் வீரரும் வேளாளரும் சிறந்து விளங்கிய களபூமிப் பதியில் தன்னை எனும் குறிச்சி வரலாற்றுச் சிறப்பு மிக்க தாகும் இங்கே குடிகொண்டு எழுந்தருளி அருள்பாலித்து வருபவர் ஸ்ரீ சித்தி விநாயகர் இப்பெருமானுக்கு இன்று மகாகும்பாபிடேகம் இடம்பெறுவது மிகவும் மகிழ்ச்சிக்குரியதொன்றாகும்.

தன்னை நாடிவருவோருக்கு சித்தி தரும் வேழமுகத்து விநாயகனால் தன்னைப் பதி மட்டுமல்லாது களபூமியும் காரைநகரும் நன்மை பெற்று விளங்குவது கண்கூடு எல்லா நன்மைகளையும் இவர் ஒருவரிடமே பெறலாம் என்பதனால் சித்தி விநாயகருக்கு பெருமைகள் அதிகம் செல்வம் தரும்போது செல்வ கணபதியாக வீரம் தரும் போது வீரகணபதியாக விளங்குகின்றார். சித்தி விநாயகர் அத்தகைய பெருமானுக்கு இன்றைய தினம் நல்ல பொழுதில் சிறந்த சிவாச்சாரியார்கள் ஒன்றிணைந்து கும்பாபிஷேகம் நடத்தி வைக்கிறார்கள். அதனைக் காண்பதும் பக்தி பூர்வமாக வழிபடுவதும் அடியார்களுக்கு கிடைக்கும் ஆனந்த அனுபவமாகும். எனவே தன்னை ஸ்ரீ சித்தி விநாயகரின் கும்பாபிஷேகம் கண்டு நாமனைவரும் நன்மைகள் பெற்றுய்யவேண்டி அனைவரையும் அழைத்து நிற்கின்றோம்.

" சித்தி விநாயகன் சீர் கருணை பெற்றுவிட்டால்
முத்தி நலம் கூடும். முடிவில்லா வினைகள் ஓடுமே"

**முருகேசு குணரட்ணம், ஆலய அறங்காவலர்.**

### வாழ்த்துச் செய்



பக்தி ஆசார சீலர்களாக வாழும் பூமியாம் கா
அருளும் ஆதிகால தன்னை சித்தி விநா
திருக் கோயிலின் மகா கும்பாபிஷேக விழா
கூடியுள்ளது. இந்த விநாயக பெருமானுடைய
கும் எங்கள் நாட்டுக்கும் எங்கெல்லாம் பரந்து
அனைத்து சுபீட்சமும் அருள் ஆசியும் கிடைக்க வேண்டுகின்
**சு.மனோகரன்,**

**S.V.Murugesu**
No.154, Hospital Road, Jaffna.
021 222 8899

**S.V.M Pvt Ltd.**
122, Dam Street,
Colombo -12

க.
31



முகூர்த்தம்
காலை 7.37 முதல்
9.00 மணிவரை

# ரைநகர் – களபூமி – தன்னையம்பதி
# தி விநாயகர் தேவஸ்தானம்
## ர அஷ்டபந்தன நவகுண்ட பகஷ
# ழுக்கு பெருஞ்சாந்திப் பெருவிழா

## ய வரலாறு

ந்த மக்கள் ஒன்று சேர்ந்த னர். இரு மரபுஞ் த்தை வழங் கிய கனஉடையார் வம்சத்தி- ஷைசக் கோயிலை கர்ப்பக்கிரகம், அர்த்த ஆகமமுறைப்படி ஆலயத்தை அமைத்த- விநாயகர் கோயிலாகும். நித்திய பூசைகள், ளுக்கு சொந்தமான நெற்காணிகளை கோ ணர் பெருமக்களுக்கு ஆதரவு நல்கி வந்- ஷிக்கிரகம் அற்புதமானது. ஒன்றரை அடி- டது. இந்த விக்கிரகம் அதன் தொப்புழ் ரம் உண்டு. விக்கிரகத்துக்கு அபிஷேகம் ஷேகத்திரவியங்கள் அத்துவாரம் வழியாக பெறுவது அற்புதமான நிகழ்ச்சியாகும்.

நாட்டிலிருந்து காரைநகருக்கு வந்த முத் சையர் இக்கோயி லில் பூசை செய்து வந்த ருணை யால் தன்னை யமக அந்தாதி 70 பூர்த்தி செய்யாமல் இருந்தது. 1810 ஆம் கார்த்திகேசு ஐயர் தம் தந்தையரால் பாட- னை யமக அந்தாதியைப்பூத்தி செய்து தமது காதர சாஸ்திரியாரால் இவருக்கு "புலவர்" து இவருக்கு வயது 18 அன்று தொடக்கம் ன வழங்கப்பட்டது. அண்மைக் காலத்தில் முறைப்படி பூசை செய்து எல்லோரதும் பெருமதிப்பைப் பெற்ற ஆசாரசீலர் சிவத்திரு குமாரசுவாமிக்குருக்கள் ஆவார். குருக்களின் பாரியாராகிய ஜீவரட்சணியம்மா சைவ அனுஷ்டானம் உள்ளவர். வயதான காலத்திலும் கோயில் தொண்டு செய்து வந்தவர். வழிபாட்டுக்கு வரும் அடியார்களைத் தாயன்போடு உபசரித்து அனுப்பும் பெருமனம் உள்ளவர். குருக்களின் தம்பதியரின் பிள்ளைகளும் பேரப்பிள்ளைகளும் அனைத்து செல்வங்களையும் பெற்று மிகச் சிறப்பாக வாழ்ந்து வருகிறார்கள். தன்னைப் பதிவாழ் மக்களும் விநாயகப்பெருமான் அடியார்களும் குருக்கள் தம்பதியினரை என்றும் நினைவில் வைத்திருப்பார்கள்.

அந்தாதி முற்றுப் பெற்றும் நீண்ட காலமாக ஏட்டுச்சுவடியாகவே இருந்தது. இதனை உரையுடன் வெளியிட வேண்டுமென்று கார்த்தி கேசுப்புலவர் அவர களின் வம்ச மரபு வழித்தோன்றலும் வந்த அகில இலங்கைச் சைவகுருமார் சபைத் தலைவராக இருந்து பெரும் பணிய ாற்றியவரும் ஈழத்து சிதம்பர தேவஸ்தான பிரதம குருவாக இருந்த வருமான வேதாகம கிரியாபூஷணம் சிவத் திரு ச.கணபதீஸ்வரக்குருக்கள் அவர்களின் புதல்வரான ஆழ்ந்த அகன்ற தமிழ் புலமை படைத்தவரும் தமிழ் பண்டிதருமான கலாநிதி சிவத்திரு வைத்தீஸ்வரக் குருக்கள் அவர்கள் விழைந்தார்கள். உரை எழுதுவதற்கும் பேரறிஞரும் பெரும் புலவரும் பலநூல்களின் ஆசிரியருமான பண்டிதமணி க.மயில்வாகனனார் ஒப்புதலையும் பெற்று உதவியாளர்கள் பேருதவி புரிந்த குருக்கள் அவர்களி னாலும் விநாயகர் ஆதரித்து வந்த மரபு வழித்தோன்ற பெருந்தவத்தினால் பிறந்த 2004 ஆம் ஆண்டு சி.த்பிராசா அவர்கள் இந்நூலினை வெளியிட்டுள்ளார். விநாயகப் பெருமானை வாழ்த்தி வணங்குகின்றோம்.

தல் 9.00 மணிவரை வரும் கன்னி சித்த யோகமும் கூடிய சுபபுண்ணிய விநாயகப்பெருமான் அருள்பாலித் கும்பாபிஷேக கிரியைகளில் கலந்து க்க பெருவாழ்வைப் பெறுவீர்களாக.

**யாழக்கிழமை அதிகாலை 4.30**

யோஜத மகா பூர்ணாகுதி. அக் கினி நனை, வேதஸ்தோத்திர திருமுறை னாஞ்சலி சமர்ப்பணம், அந்தர்பலி, ஒலிக்க வேதபாரா யணம்சகிதம் பிர

**லை 7.37 மணிமுதல் 9.00**
**மஹா கும்பாபிஷேகம்**

னம், எஜமான் அபிஷேகம், ஆசார்ய அபிஷேகம், ஆசார்ய உபசார பிரசாதம் வழங்கல், மகேசுர

ணிக்கு வசந்தமண்டப பூஜை

களாக ஆலயத்திற்கு வருகை தந்து நீர், முதலிய சிவத்திரவியங்களைக் மாறு கேட்டுக்கொள்ளுகின்றோம். பிஷேகம் நடைபெறும்.

**தன்னை களபூமி காரைநகர்.**

## செய்தி

காரையம்பதியிலே பதி கொண்டு விநாயகர் திருக்கோயில் இந்த விழா இன்று நடைபெற திருவருள் டைய விழாவின் ஊடாக எங்களுக் பரந்து வாழும் எம் உறவுகளுக்கும் டுகின்றோம்.

**கரன், திருப்பணி தொண்டர் சபை.**



**எல்லாரும் இன்புற்றிருக்க நினைப்பதுவே**
**யல்லாமல் வேறொன்றுமறியேன் பராபரமே -தாயுமானவர்**

ஓங்காரமே சிருஷ்டியின் முதற்பொருள் ஓங்காரத்திலிருந்தே அனைத்தும் உற்ப விக்கின்றன மூலாதார மூர்த்தியாகிய விநாயகப் பெருமான் ஓங்கார வடிவான வரே. ஓம் என்பது எல்லாவற்றையும் படைத்து, காத்து, அழிக்கவல்லது. மனதால் நினைத்தாலே ஓடி வந்து அருளும் முதன்மை கடவுள் விநாயகராவார் தன்னை வணங்குபவர்களுக்கும் மனத்தூய்மையையும், மங்களத்தையும் உண்டுபண்ணி, "திருவருள் மிகு தன்னை சித்திவிநாயகர்" நமக்கு ஆற்றலையும், அறிவையும், ஞானத்தையும் தருவார். விநாயகர் சிவபெருமானின் மூத்தபிள்ளை சிவகணங்களின் அதிபதியாக பரம் பொரு ளால் நியமிக்கப்பட்டவர். பார்வதிதேவி தன் சர்வ அங்கங்களிலுமுள்ள சந்தனம், குங்குமம், வாச னைத் திரவியங்களை வழித்தெடுத்து அதற்கு உருகொடுத்து பிராணனை ஊட்டினார். அவரே விநாயகர் தன் தந்தைக்கு தனது தலையையே காணிக்கையாக கொடுத்த கடவுளாவர். ஆதலால் தந்தையிடமிருந்து தனக்கு யானை முகத்தைப் பெற்றார்.

பக்தர்களின் கோரிக்கைகளை முழுமையாகக் கேட்டு அருள் அகன்ற காதுகள் கொண்டவர். பெருத்த வயறு உடையவர் (லம்போதரர்) இவ்வயிறு எல்லா அனுபவங்களையும் சீரணித்துக்கொண்டு பொறுமையாக இருக்க வேண்டும் என்பதை நமக்கு உணர்த்துகிறது. விநாயகரின் சிறிய நேர் பார்வை எதையும் நாம் நுணுக்கமாக பார்க்கவேண்டும் என்பதனையும், பெரிய நாசி நல்ல விஷயங்கள் எங்கிருந் தாலும் அதைத்தேடி நுகரவேண்டும் என்பதையும், சிறிய வாய் பேச்சை குறைக்க வேண்டும் என்பதையும் குறிக்கின்றது. விநாயகருக்கு ஏகதந்தன் என்பது அத்வைத பாவத்தைக் குறிக்கிறது. விநாயகரின் நாபி பிரம்ம சொரூபமாகும். முகமானது விஷ்ணு சொரூபமாகும். இடப்பாகம் சக்தி சொரூபமாகும். வலப்பாகம் சூரிய சொரூபமாகும். முக்கண்கள் சிவ சொரூபமாகும். பூசையில் முதல் வணக்கம் விநாயகருக்குத்தான் இது எமக்கு மட்டுமல்ல தேவர்களுக்கும் முழுமுதல் தெய்வம் திரிபுரம் எரித்த சிவபெருமானுக்கும் ஆகும்.

காரைநகர், களபூமி தன்னையம்பதி சித்திவிநாயகப்பெருமான், திருக்குட முழுக்கு பெருஞ்சாந்தி, பெரு விழாவான, சுபபுண்ணிய வேளையில், நாமும் "எதிர்த்து வந்து போர்புரிந்த மதம்கொண்ட கஜமுகாசுர னைக் கொன்றவரும், வலிய தமது தந்தத்தை ஓடித்து மகாமேருமலையில் பாரதத்தை எழுதியவரும், பசுமை தங்கிய மாலைகளைச் சூட்டி, வலிமைகொண்ட இராவணன், அன்புடன் பணிந்து வழிபட்ட சிவலிங்கத்தைப் பூமியின் கண் வைத்தவரும், தனக்கு மேல் நாயகன் இல்லாதவரும், மூன்று கண்களை உடைய மேலானவரும்" ஆகிய கணேசப்பெருமானை வழிபடும் அடியவர் இடர் நீக்கும் கணபதியை அவன் நாமம் கசிந்து உருகி ஓதி வணங்கி பேரானந்தமான பேரருள் பெற்று உய்வோமாக

**க.கு.க. சிவபாலன் (KKK)**

**பாதுகாவலர், காரைநகர் ஈழத்துச் சிதம்பரம் மாணிக்கவாசகர் மடாலயம்.**

## பிரதிஷ்டா பிரதமகுருவின் ஆசிச் செய்தி



எமது காரைநகரில் பல நூறு வருடங்கள் பழமையும் கார்த்தி கேயப்புலவரால் தன்னை அந்தாதி புகழ்பாக்கள் பாடப்பட்டதுமான தொன்மையும் சிறப்பும் உடைய களபூமி தன்னையம்பதியில் வீற் றிருக்கும் சித்தி விநாயகப் பெருமானுக்கு எம்பெருமானின் திருவருளி னால் அன்பு நிறைந்த உள்ளூர், வெளியூர் அடியார்களின் பெரும் நிதியுதவியுடன் புதிதாக கருங்கற்களால் மூலஸ்தானம் முதல் மகாமண்டபம் வரை அமைக்கப்பட்டு ஏனைய மண்டபங்களுடன் பரிவாரமூர்த்திகளான சந்தானகோபாலர், வைரவர், நாகதம்பிரான், சண்டேஸ்வரர் முதலானவர்களுக்கும் புதிய ஆலயங்களுடன் வசந்த மண்டபம், மணிக்கோபுரமும் அமைக்கப்பட்டு இன்று கும்பாபிஷேகம் நடை பெறுவது மிகவும் மகிழ்ச்சிதருகின்றது. இவ்விழா சிறப்பாக நடைபெறவும் இத்திருக் குடமுழுக்கு விழாவை அடியவர்கள் கண்டு தரிசித்து விநாயகப் பெருமானின் திருவருளி னை பெற்று சகல செல்வயோகமிக்க பெருவாழ்வு வாழ எம்பெருமானை பிரார்த்தித்து நல்லாசிகள் கூறுகின்றோம்.

"லோகா சமஸ்த்தா சுகினோ பவந்து"

**சிவஸ்ரீ.கு.சண்முகராஜகுருக்கள்**
**(சத்தியோயாத சிவாச்சாரியார், கிரியாதத்துவ நிதி, பிரதமகுரு ஷதேவஸ்தானம், பயிரிக்கூடல் சுப்பிரமணிய சுவாமி கோயில்)**

## தேவஸ்தான குருவின் ஆசிச்செய்தி



சைவமும், தமிழும் தழைத்தோங்கும் காரைநகரின் உதயன் உதிக் கின்ற திசையில் அமைந்துள்ள கனபூமி தன்னையம் பதியில் வீற்றிருக் கும் விநாயகப்பெருமானுக்கு. அன்பு நிறைந்த அடியார்களின் பெரும் நிதியுதவியுடன் அழகிய புதிய ஆலயம் எம்பெருமானின் தீரா அருளி னால் புதுப்பொலிவுடன் அமைக்கப்பட்டு 150 வருடங்களி ன் பின்பு மகாகும்பாபிஷேக நிகழ்வு இன்று நடைபெறுவது மகிழ்ச்சி தருகின்றது அவன் அருளால் அவன் தாழ் வணங்கி என்கின்ற மணிவாசகப் பெருமானின் வாக்கிற்கு அமைய அடியார்கள் யாவரும் இன் நிகழ்வில் கலந்துகொண்டு விநாயகப்பெருமா னின் தீராஅருளைப் பெற்று சகல செல்வங்களும் பெறுவதுடன் சௌபாக்கியமாக வாழ எம்பெருமானைப் பிரார்த்தனை செய்து நல்லாசியும் கூறுகின்றோம்.

" லோகாசமஸ்த்தாசுகினோபந்து "

**பிரம்மஸ்ரீ.கு.சரவணபவானந்தசர்மா**
**(பிரதம குரு. திக்கரை முருக மூர்த்தி கோயில், களபூமி)**

## செஞ்சொற்செல்வரின் ஆசிச்செய்தி



"வேளமுகத்தானைத் தொழுதால் வாழ்வு மிகுந்து வரும்" காரைநகர் களபூமி தன்னை சித்திவிநாயகர் ஆலய மகாகும்பாவிஷே கம் குறித்து வாழ்த்துவதில் ஆனந்தமடைகிறேன். கடவுள் பக்தி நிறைந்த காரைநகர் மக்கள் தமது மூதாதையர் பேணிக்காத்த திருக்கோயில்களை காலத்துக்குக் காலம் புனருத்தாரணம் செய்து காப்பதில் அதிக அக்கறை காட்டுவது போற்றுதலுக்குரிய விடயமாகும். அவ் வகையில் சித்திரவிநாயகர் திருக்கோயிலை அற்புதமாக்கி அழகுறத் திருப்பணிகளை நிறைவேற்றியிருப்பது அறிந்து மிகவும் ஆனந்த மடைகிறேன். திருக்கோயில்களில் பூஜை வழிபாடுகள் சிறப்பாக நடைபெற்றால் ஊர் செழிக்கும் நாடு விடியும் எனவே கோயில்களை நேசித்தல் தலையாய பணியாகும் திருப் பணிக்காக உழைத்த அனைவரையும் இதயபூர்வமாக வாழ்த்தி விநாயகப் பெருமானின் கும்பாபிஷேகத்தோடு எம் மண்ணில் அறம் நிலைக்கப் பிரார்த்தித்து அமைகிறேன்.

**கலாநிதி ஆறு திருமுருகன், தலைவர், ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம், தெல்லிப்பழை.**

## வாழ்த்துச் செய்தி



காரைநகர் களபூமி தன்னைச் சித்தி விநாயகர் கோயில் குடமுழுக்கு விழா நடைபெறுகிறது இந்தப் பெருவிழாவின் ஊடாக விநாயகப் பெருமானு டைய அருளாசி கிடைக்க வேண்டுகின்றோம். தொடர்ந்தும் இந்த விழாவில் பங்குபற்றி எம்பெருமானுடைய இஷ்ட சித்திகளைப் பெறுவ தற்கு விழாவில் பங்கேற்றுமாறு வேண்டுகின்றோம்.

**த.தேவராசா, கும்பாபிஷேக திருப்பணிச்சபை.**

## பொருளாளரின் வாழ்த்துச் செய்தி



எங்கள் பூர்வீக மண்ணில் உதயமான ஆதிகால திருக்கோ யில் தன்னை சித்தி விநாயகர் ஆலயம் இந்த மகாகும்பாபி ஷேக விழாவை காணும் நாம் பேரானந்தம் அடைகின்றோம். அத்துடன் அனைத்து மக்களுக்கும் இந்த அருள் கடாட்சம் கிடைக்க வேண்டுகின்றோம்.

**பொருளாளர்.**

## வாழ்த்துச் செய்தி



காரைநகர் களபூமி தன்னை சித்தி விநாயகர் எமது பரம்பரை பரம்பரை யாக நாங்கள் வணங்கி வரும் திருக்கோயில் இவ் விழாவில் திருப் பணி யில் பங்குபற்றுவதையிட்டு ஆனந்தமடைவதுடன் இந்த அருள் ஆசி சகலருக்கும் கிடைக்க வேண்டுகின்றோம்.

**திருமதி ந.புவனேஸ்வரி, திருப்பணி தொண்டர் சபை.**

விளம்பர அனுசரணை

க.கு.கந்தையாப்பிள்ளை
அன் சன்ஸ்
318, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்

சரவணாஸ் றேடர்ஸ்
இல.03, நவீன சந்தை வெளிப்புறம்,
ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
021 222 2742

S.M.T. Developer Pvt Ltd
No.80 Kasthuriar Road, Jaffna.
077 751 2648

ஐங்கரன் ஸ்ரோர்ஸ்
354, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

கந்தன் களஞ்சியம்
63, கண்டிறோட்
கிளிநொச்சி

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

# குற்றவியல் சட்டம் விரைவில் வேண்டும்

பலவந்தமாகக்காணாமல்ஆக்கப்பட்டோருக்கானதினம்உலக நாடுகள் எங்கும் நேற்று கடைபிடிக்கப்பட்டது. வருடாந்தம் ஆவணி மாதம் 30 ஆம் திகதியை பலவந்தமாகக் காணாமல் ஆக்கப்பட்டோருக்கானஉலகதினமாகக்கடைப்பிடிக்கிறார்கள். மனிதர்களைப் பலவந்தமாகக் காணாமல் ஆக்குதல் ஒரு குற்றம், மோதல் களங்களில் இதனை ஓர் ஆயுதமாகப் பயன்படுத்தக்கூடாது என்கிற விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கத்துடன்தான் இந்தத் தினம் கடைப்பிடிக்கப்படுகிறது.

இலங்கையின் வேறு எந்தப் பகுதிகளை விடவும் தமிழர்களின் தாயகமான வடக்கு, கிழக்கில்தான் இந்தத் தினத்தின் பெறுமதி தற்போது அதிகம் உணரப்பட்டிருக்கிறது. ஒவ்வொரு காலகட்டங்களிலும் இலங்கையின் ஒவ்வொரு பகுதிகளில் மோதல்கள் நிகழ்ந்தபோதும் பலர் பலவந்தமாகக் காணாமல் ஆக்கப்பட்டிருக்கிறார்கள். மோதலில் ஈடுபட்ட எல்லாத் தரப்புகளுமே இதனை ஒரு கருவியாகப் பயன்படுத்தி வந்திருக்கின்றன.

குறிப்பாக தமக்கு எதிரான கருத்துக்களைக் கொண்டிருக்கக்கூடியவர்களின் குரல்களை ஒடுக்குவதற்கான சக்தி மிக்க கருவியாக பலவந்தமாகக் காணாமல் ஆக்கப்படுதல் பயன்படுத்தப்பட்டு வந்திருக்கிறது. ஜே.வி.பி. கிளர்ச்சியின் போதும் சரி, ஈழப்போர்களின் 3 கட்டங்களிலும் சரி காணாமல் ஆக்கப்படுதல் தாராளமாகவே இடம்பெற்றது.

அதிலும் கொழும்பு அரசு சார் படைகள் பலவந்தமாகக் காணாமல் போகச் செய்தலை ஓர் ஆயுதமாகவே தமிழர்களுக்கு எதிராகப் பயன்படுத்தி வந்தன. அதற்கு மிகச்சிறந்த வெளிப்படையான உதாரணம் செம்மணிப் புதைகுழிகள். இன்று அனேகமாக மறக்கப்பட்டுவிட்ட செம்மணிப் புதைகுழிகளில் புதைக்கப்பட்டார்கள் என்று அஞ்சப்படும் 600க்கும் மேற்பட்ட தமிழ் இளைஞர்கள் இளம்பெண்கள் இவ்வாறு பலவந்தமாகக் காணாமல் ஆக்கப்பட்டவர்களே!

அவர்கள் அனைவரும் கொல்லப்பட்டு செம்மணி வெளிக்குள் புதைக்கப்பட்டார்கள் என்று பாலியல் வன்புணர்வுக் குற்றத்தில் தூக்குத் தண்டனை பெற்ற இராணுவச் சிப்பாய் சொன்னதன் பின்னரும், அவர் அடையாளம் காட்டியதன் அடிப்படையில் அந்தப் பகுதியில் இருந்து 15 சடலங்கள் மீட்கப்பட்டதன் பின்னரும் பலவந்தமாகக் காணாமல் ஆக்கப்பட்ட அந்த 600 இளைஞர்கள் இளம்பெண்களின் கதி குறித்து எந்த முடிவும் இதுவரை இல்லை.

பலவந்தமாகக் காணாமல் ஆக்கப்படுதல் இலங்கையில் ஒரு குற்றம் இல்லை என்பதால், செம்மணியைத் தொடர்ந்து வன்னியிலும் அதே ஆயுதம் மிக உக்கிரமாகப் பயன்படுத்தப்பட்டு ஆயிரக்கணக்கானவர்கள் காணாமல் ஆக்கப்பட்டார்கள். இராணுவத்தினரிடம் பகிரங்கமாக ஒப்படைக்கப்பட்டவர்களும் காணாமல் ஆக்கப்பட்டுள்ளார்கள்; சரணடைந்தவர்களும் காணாமல் ஆக்கப்பட்டுள்ளார்கள். அவர்களுக்கு என்ன நடந்தது என்று அறிய அவர்களின் உறவினர்கள் 6 மாதங்களாக வீதியில் கிடந்து போராடுகிறார்கள். ஆனால், அவர்களின் போராட்டத்துக்குத் தன்னை நல்லாட்சி அரசு எனப் பகிரங்கமாக அறிவித்துக் கொண்ட இந்தக் கூட்டு அரசிடம் இருந்து எந்தப் பதிலும் இல்லை.

பலவந்தமாகக் காணாமல் ஆக்கப்படுதலை குற்றம் என்று அறிவிப்பதற்கான சட்டத்தைக் கொண்டு வருவது குறித்து இப்போது ஆராயப்பட்டு வருகின்றது. ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபை மற்றும் மேற்குலக நாடுகளின் அழுத்தங்களைத் தொடர்ந்தே இந்த விடயம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. நீண்ட காலமாக இதற்கான அழுத்தம் கொடுக்கப்பட்டு வருகின்றபோதும் கொழும்பு அரசு இந்த விடயத்தில் மந்தமாகவே செயற்பட்டு வருகின்றது.

எனினும் விரைவில் அந்தச் சட்டம் கொண்டுவரப்படும் என்று எதிர்பார்க்கப்படும் நிலையில், அது பின்னோக்கியும் பாயக்கூடிய சட்டமாக இருக்கவேண்டும். கடந்த காலங்களில் பலவந்தமாகப் பலரைக் காணாமல் போகச் செய்தவர்கள் மீது இந்தச் சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்கப்படுவதை உறுதிப்படுத்துவதாக அந்தச் சட்டம் இருக்கவேண்டும்.

அப்போதுதான் பலவந்தமாகக் காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கு நீதி கிடைக்கும். அவர்களது உறவினர்களுக்கும் மனச்சாந்தி கிடைக்கும். கிட்டத்தட்ட ஒரு லட்சம் வரையான குடும்ப உறுப்பினர்கள் நீதியை எதிர்பார்த்துக் காத்திருக்கிறார்கள் என்கிறது பன்னாட்டு மன்னிப்புச் சபை. ''நீதி மட்டுமே காயங்களைக் குணப்படுத்தவல்லது'' என்று கடந்த பங்குனி மாதம்தான் விடுத்த அறிக்கையில் மன்னிப்புச் சபை தெரிவித்துள்ளது. அது முற்றிலும் உண்மை. பலவந்தமாகக் காணாமல் ஆக்கப்பட்டவர்கள் விடயத்தில் உண்மையான நீதியைப் பெறவேண்டும் என்றால் பின்னோக்கிப் பாயக்கூடிய விதத்தில் பலவந்தமாகக் காணாமல் ஆக்கப்படுதலை குற்றமாக்கும் சட்டத்தை கொழும்பு விரைவில் கொண்டுவரவேண்டும். உலக நாடுகளும் பன்னாட்டு அமைப்புகளும் அதற்காக கொழும்பு மீது அதிக அழுத்தங்களைக் கொடுக்கவேண்டும்.



# ஈழத்தமிழரின் தேவை உறுதியான தலைமை

சேரலாதன்

சில ஆண்டுகளுக்கு முன்னர் ஈழத்தமிழர்கள், தமது தலைவர் என்று எவரையாவது குறிப்பிட்டால் அது விடுதலைப் புலிகளின் தலைவர் வே. பிரபாகரனையே குறிப்பதாக அமைந்திருந்தது. அந்த அளவுக்கு ஒட்டுமொத்தத் தமிழர்களாலும் ஏற்றுக்கொள்ளப்பட்டதொரு தலைவராக அவர் காணப்பட்டார். தமிழர் பிரச்சினை தொடர்பாக இடம்பெற்ற அனைத்துப் பேச்சுக்களிலும் பிரபாகரனால் நியமிக்கப்பட்டவர்களே பங்குபற்றினார்கள். புலிகளின் தலைமைக்கு அந்த அளவுக்கு அன்று மதிப்பு வழங்கப்பட்டது. பிரபாகரன் தமது இளவயதிலேயே புலிகள் இயக்கத்தின் தலைமைப்பொறுப்பை ஏற்றுக் கொண்டவர். மிக நீண்ட காலமாக வேறு எவராலும் அசைக்க முடியாத நிலையில் அந்தப் பதவியில் அமர்ந்திருந்தவர். அவரது நேர்மையும் கொள்கைப் பற்றுறுதியும், இனத்தின் மீது கொண்ட வாஞ்சையும் உலகத் தலைவர்களில் ஒருவராக அவரை அடையாளம்காட்டின.

### தமிழர்களது தலைமைத்துவத்துக்கு உதாரணம் பிரபாகரன்

பிரபாகரனுக்குப் பிறகு உறுதியானதொரு தலைமை ஈழத்தமிழர்களுக்கு வாய்க்கவில்லை என்பதை ஒப்புக்கொண்டேயாக வேண்டும். உலகத்தலைவர்களின் வரலாற்றை நாம் புரட்டிப் பார்த்தால் அவர்கள் தமது திறமையாலும் உழைப்பாலும் தலைமைப் பதவியை எட்டிப் பிடித்தவர்களாகவே காணப்படுகின்றனர்.

ஓர் இனத்தின் தலைமைத்துவம் என்பது வெறுமனே அரசியலை மட்டும் மையமாகக் கொண்டதல்ல. ஆனால் காலமாற்றத்தின் காரணமாக அரசியல் தலைவர்களே மக்கள் தலைவர்களாக மாறியுள்ளனர்.

இந்த வகையில் தான் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் வாழ்கின்ற தமிழர்களின் தலைவராக இரா. சம்பந்தன் விளங்குகின்றார். இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி, ரெலோ, புளொட், ஈ.பி.ஆர்.எல்.எவ் ஆகிய நான்குகட்சிகளின் இணைப்பில் உருவாக்கப்பட்டதுதான் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு. கூட்டமைப்பின் தலைவர் என்ற வகையில் சம்பந்தன் தமிழர் தலைவராகக் கருதப்படுகின்றார்.

தற்போது ஒரு பிரிவினர் சம்பந்தனின் தலைமைக்கு எதிராகக் குரல் கொடுத்து வருகின்றனர். சம்பந்தன் ஒரு பலவீனமான தலைவராகவே இவர்களால் சித்தரிக்கப்படுகின்றார். இதே வேளை கூட்டமைப்பில் உள்ள ஒருசிலரும் சம்பந்தனைத் தரக்குறைவாக விமர்சித்து வருகின்றனர். இத்தகையவர்கள் இன்னமும் கூட்டமைப்பில் ஒட்டிக் கொண்டிருப்பது நியாயமானதல்ல. அண்மைய நாள்களாகவே ஈழத்தமிழர்கள் மத்தியில் மாற்றுத்தலைமை என்ற பேச்சு அடிபட்டுவருகின்றது. ஆனால் அதற்குத் தகுதியான ஒருவர் இன்னமும் கண்டுபிடிக்கப்படவில்லை. ஆனால் ஏதோவொரு வேகத்தில் ஒரு சிலர் சி.வி. விக்னேஸ்வரனின் பக்கம் தமது சுட்டுவிரலை நீட்டுகின்றனர். தற்போதைய சூழ்நிலையில் தலைமைப்பொறுப்பை ஏற்றுக் கொள்ளக்கூடிய தகுதி விக்னேஸ்வரனுக்கு உண்டா? என்பதை நினைத்துப் பார்ப்பதற்கு இவர்கள் மறந்து விட்டனர். தற்போது தமிழர்கள் இருக்கின்ற சூழ்நிலையில் இளமையும், நல்ல உடல் நலமும் அனைவரையும், அணைத்துச் செல்லக்கூடிய மனப்பாங்கும் உள்ள ஒருவரே தேவைப்படுகின்றார்.



### தலைக்குனிவை ஏற்படுத்தும் வடமாகாண சபையின் செயற்பாடுகள்

தற்போது வடக்கு மாகாணசபையில் இடம்பெற்று வருகின்ற சம்பவங்கள் தமிழர்களுக்குத் தலைக்குனிவை ஏற்படுத்தக் கூடியவை. கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் முதலமைச்சர் பதவியில் சி.வி. விக்னேஸ்வரனை அமர்த்தியது முதலாவது தவறு. அவரைக் கட்டுப்படுத்தாது தன்னிச்சையாகச் செயற்படுவதற்கு அனுமதித்தமை இரண்டாவது தவறு. மாகாணசபையில் முதலமைச்சருக்கு எதிரான நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வரப்பட்ட போது உடனடியாக அதில் தலையிடாது ஒதுங்கிநின்றமை மூன்றாவது தவறு. இதன் பின்னர் வடக்கு முதலமைச்சர் தமது எண்ணம் போன்று செயற்பட அனுமதித்தமை நான்காவது தவறு. உடனடியாகத் தீர்க்க வேண்டிய பிரச்சினைகளைக் கிடப்பில் போட்டுவிட்டு அமைதியாக இருப்பது ஐந்தாவது தவறு. இவ்வாறு தவறுகளை அடுக்கிக் கொண்டே போகலாம். தந்தை செல்வா போன்ற தன்னலமற்ற தலைவர்களைக் காண்பது அரிது. அவர், தாம் சார்ந்த இனத்துக்காகவே வாழ்ந்தார். சொத்துக்கள் யாவற்றையும் இழந்தார். ஈழத்தமிழர்கள் உள்ளவரை செல்வாவின் நாமம் வாழும்.

### பொழுதுபோக்க அரசியலில் ஈடுபடுவது போன்ற போக்கில் ஒரு சிலர்

ஒரு சிலர் பொழுதைப் போக்குவதற்காகவே அரசியலில் ஈடுபட்டு வருகின்றனர். தம்மைத் தலைவர்களாக உருவாக்கிக் கொள்வதற்கும் இவர்கள் துடிக்கின்றனர். மக்கள் மத்தியில் குழப்பங்களை ஏற்படுத்தி அதில் இலாபம் சம்பாதிப்பது தான் இவர்களின் நோக்கமாகும். இவர்கள் தம்மை மனதில் கொண்டுதான் மாற்றுத் தலைமை தொடர்பாகவும் கதைக்கின்றனர். ஆனால் மக்கள் இவர்கள் தொடர்பாக நன்கு அறிந்து கொண்டதால் இவர்களது எண்ணம் ஒரு போதுமே நிறைவேறப் போவதில்லை.

தலைவர்களாக மதிக்கப்பட்டவர்கள் ஏதோ ஒரு வகையில் தியாகம் செய்தவர்களாகவே காணப்படுவார்கள். ஒருவரது தியாகம் தான் அவரது தலைமைத்துவப் பண்புகளை வெளிக்காட்டி நிற்கின்றது. இவர்களில் சிலர் தாம் சார்ந்த மக்களுக்காகத் தமது உயிரையே தியாகம் செய்திருக்கின்றனர்.

இனத்துக்காக உழைக்கும் தலைவர்கள் தான் இன்று ஈழத் தமிழர்களுக்கும் தேவைப்படுகின்றனர். அவர்களை இன்னல்களிலிருந்து மீட்டெடுக்கத் தக்க உறுதியான தலைமை தான் இன்றைய தேவையாகும்.

மதம் வேறு அரசியல் வேறு என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும். மதத்தைப்போதிப்பவர்கள் அரசியலைப்போதிப்பதற்குக்கிளம்பிவிடக் கூடாது. இது குழப்பங்களையே ஏற்படுத்தும். மக்களும் குழம்பிப்போய் விடுவார்கள். இலங்கையில் அரசியலையும், மதத்தையும் கலந்து பயன்படுத்தும் கலாசாரம் உடனடியாகக் கைவிடப்பட வேண்டும்

இந்துமதி

# அரசியலில் மதம் கலப்பதால் மக்களுக்கே கேடு

யாழ்ப்பாண கத்தோலிக்கத் திருச்சபைஒரு தலைப்பட்சமாக தமிழ் அரசுக் கட்சிக்கு எதிராகச் செயற்படுவதாகஅந்தக்கட்சியின்செயலாளர் குற்றம் சுமத்தியுள்ளார். இதையொரு பாரதூரமான விடயமாகவே கருத வேண்டியுள்ளது. வடக்குமாகாணசபையில் குழப்பங்கள் நிலவிவரும் நிலையில், கத்தோலிக்க மதகுருமார்கள் சிலர் ஒரு தரப்புக்கு ஆதரவாகநடந்துகொள்வதை யாழ். ஆயர் தொடர்ந்தும் அனுமதித்தால் திருச்சபை மீது மக்கள் தவறான எண்ணம் கொள்வதற்கே அது வழி வகுத்துவிடும்.

இலங்கையின் அரசியலை ஒருகணம் சீர்தூக்கிப் பார்த்தால் பௌத்த மா பீடங்களின் செல்வாக்கு அங்கு நிலை கொண்டிருப்பதை இலகுவாகப்புரிந்து கொள்ள முடியும். மக்களும் பௌத்த மத பீடங்கள் மீது அதீத நம்பிக்கை கொண்டவர்களாகக்காணப்படுவதால் அரசியல்வாதிகள் அதற்கு மாறாக நடந்து கொள்வதில்லை.

இலங்கை ஒரு சிங்கள. பௌத்த நாடு என்ற தோற்றப்பாடு பெரும்பான்மையின மக்களால் உருவாக்கப்பட்டுள்ளது. சிறுபான்மை இனத்தவர்கள் எந்தச்சலுகையையும்பெறுவதற்குஅருகதையில்லாதவர்கள் என்றும் இவர்கள் நினைக்கின்றனர். இதுவே இனப்பிரச்சினைதோன்றியதற்கான முதன்மைக் காரணமாகும்.

இனப்பிரச்சினைக்கானதீர்வுகள்எட்டப்படவிருந்த சந்தர்ப்பங்களில் கடைசி நேரத்தில் பௌத்தகுருமார் அதில் தலையிட்டுக் குழப்பியதும் உண்டு. பண்டா-செல்வாஒப்பந்தம்கிழித்தெறியப்படு வதற்கு பௌத்த குருமாரும் காரணமாக இருந்துள்ளனர். அன்று அவர்கள் அதில் தலையிடாது விட்டிருந்தால் இன்று அமைதியானதொருசூழல்இந்தநாட்டில்நிலவியிருக்கும்.

### அடாவடித்தனம் புரிகின்றனர் ஒரு சில பௌத்ததேரர்கள்

பொதுபலசேனா அமைப்பின் பொதுச் செயலாளரான ஞானசாரதேரர் எவராலும் கட்டுப்படுத்த முடியாத சக்தியாக வலம் வந்து கொண்டிருக்கின்றார். அமைச்சுஅலுவலகங்களுக்குள்அனுமதியின்றிநுழையும்இவர்அங்குஅடாவடித்தனங்களில்ஈடுபட்டுவருகின்றார். அண்மையில்அமைச்சர்மனோகணேசனின் அலுவலகத்தினுள் நுழைந்த இவர் அமைச்சருடன் காரசாரமான வாக்குவாதத்திலும் ஈடுபட்டார். இவர் முஸ்லிம்களின் பள்ளிவாசல் ஒன்று தாக்கப்பட்டதில்தொடர்புடையவரெனக் கூறிப்பொலிஸாரால்தேடப்பட்டும் வந்தார். இது தொடர் பாகச் சில நாள்கள்பரபரப்புக்காணப்பட்டபோதிலும் பின்னர் அது அடங்கிப்போய்விட்டது.


புதிய அரசமைப்பின் உருவாக்கம் தொடர்பாக சிறுபான்மையின மக்கள் மிகுந்த ஆவலுடன்காத்திருந்தனர். இதுநிறைவேற்றப்பட்டால்தமது பிரச்சினைகளுக்குத்தீர்வு கிடைக்குமெனவும்இவர்கள்நம்பினர். ஆனால் அதற்கும் மண் அள்ளிப் போடும் வகையில் பௌத்த மத பீடங்கள் நடந்து கொண்டன. புதிய அரசமைப்பின் உருவாக்கம் அல்லது அரசமைப்புத் திருத்தம் ஆகியவற்றை மேற்கொண்டால் கடுமையான விளைவுகளைச் சந்திக்க நேருமென அரசுக்குக் கடுமையான எச்சரிக்கையை அவை விடுத்தன. இதற்கு அரசு அஞ்சியதாகத் தெரியவருகின்றது. இதன் காரணமாக அரசமைப்பின்உருவாக்கத்தில்பெரும் பின்னடைவு ஏற்பட்டுள்ளது.

### இந்தியாவிலும் தீவிர மதவாதப் போக்கு

எமது அண்டைநாடான இந்தியாவிலும் மதவாதிகள் அரசியலை ஆட்டிப் படைத்துவருகின்றனர். தற்போதுமத்தியில் ஆட்சிபுரிகின்ற பாரதீய ஜனதாக் கட்சி இந்து மதத்தின் அடிப்படைவாதிகளைக்கொண்டது. இந்தியாவின்மொத்தச் சனத் தொகையில் சுமார் எண்பது வீதமானவர்கள் இந்துக்கள் என்பது குறிப்பிடத்தக்கது. இந்தநிலையில்இந்துத்துவ அமைப்புக்களின் விருப்பங்களை நிறைவேற்றி வைக்க வேண்டிய மிகப்பெரியபொறுப்புஅரசுக்குஉள்ளது. இந்தியாவில் கணிசமான அளவில் முஸ்லிம்களும்வாழ்ந்துவருகின்றனர். அந்நியர் ஆட்சியின்போது இந்துக்களுக்கும், முஸ்லிம்களுக்குமிடையே அடிக்கடி கலவரங்கள் இடம்பெற்று வந்தன. இதில் இரண்டுதரப்புகளிலும் பெருமளவு உயிர்ச் சேதங்கள் ஏற்பட்டன. இதன் காரணமாகவே முஸ்லிம்களுக்கென பாகிஸ்தான் என்ற தனி நாடு உருவானது. ஆனால் இன்று இந்தியாவும், பாகிஸ்தானும்பரமவைரிகளாக மாறிவிட்டன. இந்த இரண்டு நாடுகளும் ஒன்றையொன்று தாக்கி அழிப்பதற்குஏதுவாகஅணுவாயுதங்களைத் தயாரித்துத் தயார் நிலையில் வைத்துள்ளன. காஷ்மீர் தொடர்பான பிணக்கு பெரும் மோதலாகவெடித்துவிடக்கூடியஏதுநிலையை உருவாக்கியுள்ளது. இந்திய மத்திய அரசுஇந்துமதப்பிரிவினரைத்திருப்திப்படுத்தும் வகையில் செயற்படுவதாக முஸ்லிம்மக்கள்குறைகூறுகின்றஅதே வேளை இந்துத்துவ கடும் கோட்பாட்டாளர்கள் தம்மை அரசு கைவிட்டுள்ளதாகப்புலம்புகின்றனர். இந்திய மத்திய அரசு இந்த இரண்டு சாராரையும் திருப்திப்படுத்த முடியாத நிலையில் திணறி வருகின்றது.

### மியன்மாரிலும் கொடுமைக்கு உள்ளாகும் முஸ்லிம்கள்

மியன்மார்நாட்டிலும்மதரீதியானபூசல்களுக்குக் குறைவில்லை. அங்கு பெரும்பான்மை இனத்தவராக வாழ்கின்ற பௌத்தர்கள் சிறபான்மை யினரான றொகின்கய முஸ்லிம் மக்களைக் கொடுமைப்படுத்தி வருகின்றனர் எனக் கூறப்படுகின்றது. மியன்மார் அரசும் இதற்குஆதரவளிப்பதாகவும்கூறப்படுகின்றது. இவ்வாறு அரசுகள் குறிப்பிட்டதொரு மதப் பிரிவினருக்கு ஆதரவு வழங்கினால் அத்தகைய நாடெதனிலும்அமைதியைஎதிர்பார்க்கமுடியாது. மதம் வேறு அரசியல் வேறு என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும். மதத்தைப் போதிப்பவர்கள் அரசியலைப் போதிப்பதற்குக் கிளம்பிவிடக் கூடாது. இது குழப்பங்களையே ஏற்படுத்தும். மக்களும்குழம்பிப்போய்விடுவார்கள். இலங்கையில் அரசியலையும், மதத்தையும் கலந்துபயன்படுத்தும் கலாசாரம் உடனடியாகக் கைவிடப்பட வேண்டும். மதகுருமார்கள்தேவையற்றவகையில்அரசியலில்மூக்கைநுழைக்கின்ற பழக்கத்தையும் தவிர்த்துக் கொள்ள வேண்டும் ஆண்டவனின் சிறப்பைப் போதிக்கின்ற வாயால் சாக்கடை என வர்ணிக்கப்படும் அரசியலைப் பேசுவதே பாவமானது. இதை உணர்ந்து கொண்டால் பிரச்சினைகள் எழுவதற்கானசாத்தியம்இல்லாமற்போய்விடும்.



பொதுபலசேனா அமைப்பின் பொதுச்செயலாளரான ஞானசாரதேரர் எவராலும் கட்டுப்படுத்த முடியாத சக்தியாக வலம் வந்து கொண்டிருக்கின்றார்.


## ஆசிரியருக்கான கடிதம்

### கேடானவற்றின் பாவனையை தவிர்ப்பது அவசியம்

பொலித்தீனுக்குப் பதிலீடு என்னவெனப் போராட்டத்தில் குதித்துள்ளனர் சில வியாபாரிகள். பொலித்தீன் பாவனைக்கு வருவதற்கு முன்னர், அதனது இடத்தை நிரப்பிய மாற்றுப் பொருள்கள் என்ன என்பதனைச் சிந்தையில் கொண்டால், அதற்கான விடை கிடைக்கும். மலிந்த விலையில் கிடைக்கின்றது என்பதற்காக ஒவ்வாத ஒன்றைப் பயன்படுத்தலாமோ? உணவு வகைகளைப் பொதி செய்வதற்கும் 'லஞ் சீற்' பாவனைக்கு வரும் முன்னர் எவற்றைப் பயன்னடுத்தினோம். வாழை இலைகளும், தாமரையிலைகளும் ஏனைய இலைகளும் எங்கு சென்று ஒழிந்துகொண்டன. பைகளுக்கு பதிலாக உமல்களும், ஓலைப் பைகளும் பயன்படுத்துவது ஒரு நாகரிகமாக வரவேண்டும். அதன் மூலம் நாம் சூழலிலும் எதிர்கால சமூகத்திலும் கரிசனை கொண்டவர்கள் என்பதனை வெளிப்படுத்த வேண்டும். அரசு முன்வைத்த காலைப் பின் வைக்காது, பொலித்தீன் மற்றும் பிளாஸ்ரிக் மீதான தடை குறித்து உறுதியாக நின்று அரசில்வாதிகள் தாம் நாட்டை நேசிப்பதை வெளிப்படுத்த வேண்டும். நாளைய தலைமுறைகளுக்கு தேட்டங்களைத் தேடப் புறப்பட்டு இயற்கை விரோதச் செயற்பாடுகளில் ஈடுபட முடியாது. சூழலை மாசுபடுத்தி, பணத்தையும் தங்கத்தையும் தமது எதிர்கால சந்ததிக்கு சிலர் சேர்த்து வைத்துவிட்டுச் செல்லலாம். ஆயினும் அவற்றை உண்டு எமது பசியைப் போக்கிக் கொள்ள முடியாது. இயற்கை அன்னை தரும் உணவுகளையே உண்ண முடியும். காற்றையே சுவாசிக்க முடியும். நீரையே பருக முடியும் என்பதனை ஒவ்வொருவரும் கருத்தில் கொள்ள வேண்டும்.

இயற்கை நேசன்




தகவல் மூலம் : இலங்கை மத்திய வங்கி, இலங்கை சுங்கம்

# அபிவிருத்தி முகவர் நிறுவனம் அமைப்பது குறித்து அரசு தீர்மானம்

## முதலீடு மற்றும் ஏற்றுமதி இறக்குமதி குறித்து நடவடிக்கை

தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சு

தேசிய கொள்கை உள்ளிட்ட பல விடயங்களைக் கையாள்வதற்கு ஏதுவாக கொள்கை அபிவிருத்தி அலுவலகம் ஒன்றை ஆரம்பிக்க அரசு உத்தேசித்துள்ளது.

தேசிய கொள்கை சட்டமூலத்தை உருவாக்கி அமைச்சரவை மற்றும் நாடாளுமன்றுக்கு அதனைச் சமர்ப்பித்து அனுமதியைப் பெற்றுக்கொள்ளவும், கொள்கை அபிவிருத்தி அலுவலகம் ஊடாக தயாரிக்கப்பட்டு நாடாளுமன்றத்தில் அனுமதி தரப்படும் கொள்கைகளை நடைமுறைப்படுத்தவும் அபிவிருத்தி முகவர் நிறுவனம் அதிகாரத்தைக் கொண்டிருக்கும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முதலீடு, ஏற்றுமதி, இறக்குமதி, தொழில்வாய்ப்புக்கள், நிதி நடவடிக்கைகள் மற்றும் அடிப்படை வசதிகளை மேம்படுத்தல் உள்ளிட்ட பல விடயங்கள் தொடர்பில் இந்த நிறுவனம் அதிகாரங்களைக் கொண்டிருக்கும்.

அத்துடன் வலயமட்ட அபிவிருத்திக்குத் தனியான சபை ஒன்றை உருவாக்கவும் இந்தச் சட்டமூலத்தின் ஊடாக யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது. தெற்கு, வடமேல், மத்திய வடக்கு மற்றும் கிழக்கு அபிவிருத்தி சபைகளும் இதன் மூலம் உருவாக்கப்படவுள்ளன.

இவைதவிர அமைச்சரினால் நியமிக்கப்படும் தலைவர் அல்லது உறுப்பினரைக் கொண்ட இந்தச் சபையானது அபிவிருத்தி பிரதிநிதி வெளிப்படுத்தும் தீர்மான அடிப்படையில் வலய முதலீடுகள் உள்ளிட்ட பல விடயங்களை மூன்று வருடங்களுக்கு திட்டமிடவும், நடைமுறைப்படுத்தவும் தீர்மானங்களை மேற்கொண்டுள்ளது.

இந்த வலயத்தை தீர்மானிக்கும் அதிகாரம் அபிவிருத்தி பிரதிநிதிகள் நிறுவனத்திடம் காணப்படுவதுடன் அங்கு முதலீடு செய்வதற்கு இறக்குமதியாளர்களின் சான்றிதழ்களையும் பெற்றுக்கொள்ள வேண்டும். ஏற்றுமதி இறக்குமதி தொடர்பில் பூரண அதிகாரம் கொண்ட பன்னாட்டு வர்த்தகம் தொடர்பிலான முகவர் நிறுவனம் அமைப்பது குறித்தும் யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது. (ஒ)

# உற்பத்தி விலைச் சுட்டெண்களின் மாதாந்த அசைவு 1.6 வீதமாக அதிகரிப்பு

## ஜூன் மாத வெளிப்பாடாகப் பதிவு

நடப்பாண்டின் ஜூன் மாத காலப்பகுதிக்கான அனைத்துப் பொருளாதார நடவடிக்கைகளுக்கான உற்பத்தி விலைச் சுட்டெண் 128.0 ஆக காணப்படுகிறது.

மூன்று முதன்மை பொருளாதார நடவடிக்கை குறிகாட்டிகளான 'விவசாயம்', 'உற்பத்தி' மற்றும் 'மின்சாரம் மற்றும் நீர் வழங்கல்' என்பனவற்றின் விலைச் சுட்டெண்கள் முறையே 170.0, 110.2 மற்றும் 86.7 ஆக பதிவாகியுள்ளன. அனைத்துப் பொருளாதார நடவடிக்கைகளுக்கான குறியீட்டின் வளர்ச்சி விகிதத்தை நோக்குகையில் நடப்பாண்டின் ஜூன் மாத காலப்பகுதியில் 19.6 சதவீதமாக அமைந்திருக்கும் அதேவேளை "விவசாயம்", "உற்பத்தி" மற்றும் "மின்சாரம் மற்றும் நீர் வழங்கல்" குறிகாட்டிகள் முறையே 39.1, 7.0 மற்றும் 2.7 விகித வளர்ச்சியை வெளிக்காட்டியுள்ளன.

அனைத்துப் பொருளாதார நடவடிக்கைகளுக்கான மே மாதத்தில் இருந்து ஜூன் மாத காலப்பகுதிக்கான உற்பத்தி விலைச் சுட்டெண்கள் 1.6 சதவீதமாக அதிகரித்துள்ளது. அதேவேளை "விவசாயம்", "உற்பத்தி" மற்றும் "மின்சாரம் மற்றும் நீர் வழங்கல்" குறிகாட்டிகள் நேர்மறை வளர்ச்சி விகிதங்களை பதிவு செய்துள்ளன. அவை முறையே 3.5 சதவீதம், 0.6 சதவீதம் மற்றும் 0.2 சதவிகிதமாக அமைந்துள்ளன. (ஒ)

# ஜூன் மாத காலப்பகுதிக்கான ஏற்றுமதி இறக்குமதி செயலாற்றுகை மாதிரி

நடப்பாண்டின் ஜூன் மாத காலப்பகுதி வரையான ஏற்றுமதி மற்றும் இறக்குமதி செலாற்றுகைகள் பின்வருமாறு அமைந்துள்ள தகவலை மத்திய வங்கியின் பொருளாதார ஆய்வு மையம் வெளிப்படுத்தியுள்ளது. இதனை வெளியார்ந்த ஆய்வு அறிக்கையிடலாக மத்திய வங்கி தந்துள்ளது.

ஜூன் மாத ஏற்றுமதி வருமானம் 987 மில்லியன் அமெரிக்க டொலர்களாக அமைந்துள்ளன. 9.6 சதவீத வருடாந்த வளர்ச்சியாகவும் பதிவாகியுள்ளது. தொழிற்றுறை ஏற்றுமதி 77.1 வீதமாகவும், விவசாய ஏற்று மதி 20.6 சதவீத வளர்ச்சியாகவும் காணப்படுகின்றன. (ஒ)

# தேசிய கணக்காய்வு சேவைகளில் இடையூறு

## புதிய கணக்காய்வுச் சட்டமூலம் சமர்ப்பிக்கப்படாமையே காரணம் எனச் சுட்டிக்காட்டு

Auditor General's Department

புதிய கணக்காய்வு சட்டமூலம் சமர்ப்பிக்கப்படாமையால் தேசிய கணக்காய்வு செயலகம் மற்றும் தேசிய கணக்காய்வு சேவைகளை அமைத்துக்கொள்ள முடியாது போயுள்ளது என்ற தகவலை தேசிய கணக்காய்வு சங்கம் சுட்டிக் காட்டியுள்ளது.

இதன் காரணமாக கணக்காய்வாளர்களுக்கு தங்களது செயற்பாடுகளை முன்னெடுக்க முடியாது போயுள்ளது.

இது குறித்துக் கருத்துரைத்துள்ள தேசிய கணக்காய்வு சங்கத்தின் தலைவர் கே.என்.எஸ்.குமாரசிங்க,

"கணக்காய்வு ஆணைக்குழு காணப்பட்டாலும் கணக்காய்வு ஆணைக்குழு சம்பளம் வழங்காத நிறுவனமாகக் காணப்படுகிறது. பயனுறுதியற்ற ஆணைக்குழுவாக செயற்படுகின்றமை அதிகாரிகளின் தவறல்ல. கடந்த காலத்தில் கணக்காய்வுச் சட்டமூலம் நிறைவேற்றப்படாடையினால் ஒரு எழுத்தைக்கூட எழுத முடியாத நிறுவனமாக மாற்றங்கண்டுள்ளது. உண்மையில் கணக்காய்வுச் சட்டமூலத்தின் அங்கீகாரம் இன்மையே இதற்குக் காரணம். இலங்கை வரலாற்றில் அதிக தடவைகள் திருத்தத்துக்கு உட்பட்ட சட்டமூலமாக அதாவது 23 தடவைகள் திருத்தப்பட்ட சட்டமூலமாக கணக்காய்வுச் சட்டமூலம் அமைந்துள்ளது. ஆனாலும் சட்டமூலம் நாடாளுமன்றில் நிறைவேற்றப்படாமைக்கான காரணங்களை ஆராய வேண்டியுள்ளது. நாட்டின் சொத்துக்களையும் பொது மக்களின் சொத்துக்களையும் பாதுகாக்க வேண்டிய தேவை உள்ள போதும் மக்கள் பிரதிநிதிகள் அக்கறையின்மையோடு இருக்கின்றனர். இந்த நிலை தொடரக்கூடாது." - என்றார்.

மேலும், புதிய கணக்காய்வு சட்டமூலம் 2015 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 20 ஆம் திகதி அமைச்சரவையில் முன்வைக்கப்பட்டதுடன் அதற்கான அனுமதியும் கிடைத்தது. சட்டமூலத்தை சாதாரண சட்டமூலமாக நாடாளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கும், சட்டமூலத்தை வர்த்தமானியில் பிரசுரிப்பதற்குமான பொறுப்பு தலைமை அமைச்சரின் செயலாளருக்கு வழங்கப்பட்டது.

தொடர்ந்து கணக்காய்வு சட்டமூலம் தொடர்பிலான விடயங்களை ஆராய்வதற்கு கடந்த 2016 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 26 ஆம் திகதி அமைச்சர் சரத் அமுனுகமவின் தலைமையிலான அமைச்சரவை உப குழு நியமிக்கப்பட்டது. கடந்த ஓகஸ்ட் மாதம் 9 ஆம் திகதி சட்டமூலத்தின் சீர்திருத்தம் குறித்த நடவடிக்கைகளுக்காக 23 பேர் கொண்ட அமைச்சரவை முன்வைக்கப்பட்டதுடன், சட்டமூலம் அரசமைப்புக்கு ஏற்புடையது என உறுதிப்படுத்தப்பட்டு சட்ட மாஅதிபரின் அனுமதி கிடைக்கப்பெற்றது.

எனினும் கணக்காய்வு சட்டமூலம் தொடர்பில் மேலும் அவதானங்களை மேற்கொள்வதற்கு அமைச்சர் சரத் அமுனுகமவின் தலைமையில் கடந்த 15 ஆம் திகதி மீண்டும் அமைச்சரவை உப குழு நியமிக்கப்பட்டமை போன்ற விடயங்கள் குறித்து நோக்கத்தக்கவை. (ஒ)

> புதிய கணக்காய்வு சட்டமூலம் 2015 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 20 ஆம் திகதி அமைச்சரவையில் முன்வைக்கப்பட்டதுடன் அதற்கான அனுமதியும் கிடைத்தது. சட்டமூலத்தை சாதாரண சட்டமூலமாக நாடாளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கும், சட்டமூலத்தை வர்த்தமானியில் பிரசுரிப்பதற்குமான பொறுப்பு தலைமை அமைச்சரின் செயலாளருக்கு வழங்கப்பட்டது.


CSE COLOMBO STOCK EXCHANGE

கொழும்பு பங்குப்பரிவர்த்தனை - 147-2/3, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம் - 212221455

30/8/2017
www.cse.lk

பங்குச் சந்தைத் தகவல்கள்

| | | | |
|---|---|---|---|
| ASPI | -8.53 | 6,390.26 | 6,398.79 |
| S&P SL20 | -2.14 | 3,683.96 | 3,686.10 |
| வியாபாரப் புரள்வு | | 592,041,220 | 1,592,607,740 |
| உள்நாடு கொள்வனவு | | 270,398,560 | 1,113,117,310 |
| விற்பனை | | 359,865,152 | 618,111,040 |
| வெளிநாடு கொள்வனவு | | 321,642,656 | 479,490,368 |
| விற்பனை | | 232,176,064 | 974,496,640 |




| கம்பனி | குறியீடு | இறுதிவிலை | பங்குகள் | புரள்வு (Rs) |
|---|---|---|---|---|
| ஜோன் கீல்ஸ் கோல்டிங்ஸ் | JKH.N | 165 | 1,367,708 | 221,228,726 |
| கொமர்சியல் வங்கி | COMB.N | 136.6 | 742,319 | 101,896,855 |
| சம்பத் வங்கி | SAMP.N | 300.3 | 181,962 | 54,588,883 |
| சேவ்ரோன் லுப்றிகன்ஸ் | LLUB.N | 129.7 | 369,338 | 47,987,759 |
| டெக்ஸ்பேட் பெர்ஷி | TJL.N | 41 | 547,613 | 22,402,095 |
| அலையன்ஸ் பைனான்ஸ் | ALLI.N | 65 | 320,012 | 20,804,468 |
| சிற்றிசன் டெவலப்மென்ட் பைனான்ஸ் | CDB.N | 65 | 252,401 | 16,404,478 |
| லங்கா ஓரிக்ஸ் லீசிங் | LOLC.N | 121 | 96,135 | 11,539,156 |
| HNB அஷுரன்ஸ் | HASU.N | 68 | 164,928 | 11,215,125 |
| டோக்கியோ சிமெண்ட் | TKYO.N | 72 | 134,874 | 9,712,446 |

அறிவித்தல்கள்

பங்குலாபம்
கொழும்பு போர்ட் லாண்ட் (CFLB)- Rs. 0.15

சந்தைக் குறிகாட்டிகள்.

| | |
|---|---|
| கம்பனிகள் | 295 |
| பரிமாற்றத்தில் | 225 |
| விலை உழைப்பு | 10.4 |
| புத்தகப்பெறுமதி | 1.4 |
| பங்குலாப விளைவு | 3.1 |



## வடகொரியாவின் சோதனையால் ரஷ்யா கடும் அதிருப்தி

மொஸ்கோ, ஓக. 31
ஜப்பானின் வான் பரப்புக்கு மேலாக வடகொரியா ஏவுகணைச் சோதனையை நடத்தியிருந்த நிலையில், இந்தச் சம்பத்துக்கு கடும் அதிருப்தி தெரிவித்தது ரஷ்யா.

வடகொரியாவில் இருந்து ஏற்றுமதி செய்யப்படும் நிலக்கரி, இரும்பு, கடலுணவு ஆகியன முடக்கப்பட்டுள்ளன. எனினும் எதிர்ப்புக்கள் எதையும் கண்டுகொள்ளாமல் வடகொரியா தொடர்ந்து பல ஏவுகணைச் சோதனைகளை நடத்தி வருகிறது. நேற்றுமுன்தினம் காலை ஜப்பானுக்கு மேலாக ஒரு ஏவுகணைச் சோதனையை நடத்தியது. இது பெரும் அதிர்வலைகளைத் தோற்றுவித்துள்ளது. அமெரிக்கா, தென்கொரியா, ஜப்பான், ஐக்கிய நாடுகள் சபை ஆகியன கடும் கண்டனம் தெரிவித்துள்ளன. இந்த நிலையில் வடகொரியாவின் சோதனைக்கு ரஷ்யா கடும் அதிருப்தி தெரிவித்தது. "கொரியத் தீபகற்பப் பகுதியில் பதற்றம் அதிகரித்து வருவதை காணும் நிலையில், இதுதொடர்பாக நாங்கள் மிகுந்த கவலை அடைந்துள்ளோம்'' என்று ரஷ்யாவின் அயலுறவுத்துறை அமைச்சர் செர்கெய் ரியாப்கோவ் தெரிவித்தார். (ம)

## ஏவுகணைச் சோதனைகள் தொடர்ந்து நடைபெறட்டும்

*கிம் ஜோங் உன் உத்தரவு*



வடகொரியா, ஜப்பானின் எல்லைக்கு மேலாக நேற்றுமுன்தினம் ஏவுகணைச் சோதனையொன்றை மேற்கொண்டு உலக நாடுகளைப் பரபரப்பாக்கியுள்ள நிலையில் இது போன்ற சோதனைகளை தொடர்ந்து நடத்தும்படி உத்தரவிட்டார் வடகொரிய அதிபர் கிம் ஜோங் உன்.

இந்தச் சோதனைக்கு முதல் நாடாக ஜப்பான் தனது கண்டனத்தைத் தெரிவித்தது. ஏனைய நாடுகளும் தத்தமது கண்டனங்களைத் தெரிவித்துள்ளன. ஐக்கிய நாடுகள் சபையின் தலையீட்டைக் கோரியுள்ளது ஜப்பான். இந்த விவகாரம் தொடர்பில் ஐக்கிய நாடுகள் சபை விரைவில் ஒன்றுகூடி மேலும் பல பொருளாதாரத் தடைகளை விதிக்கும் என்று எதிர்பார்க்கப்படும் நிலையில், ஏவுகணைச் சோதனைகள் தொடர்ந்து நடைபெறட்டும் என்று வடகொரிய இராணுவத்துக்கு உத்தரவிட்டுள்ளார் கிம் ஜோங் உன்.


"அமெரிக்காவுக்குச் சொந்தமான குவாம் தீவைத் தாக்குவதற்கு முன்னதாக, அதிகப்படியான ஏவுகணைகள் பசுபிக் பெருங்கடலில் பாயவேண்டும்" என்று கிம் ஜோங் உன் தெரிவித்தார் என்று வடகொரியா ஊடகங்கள் செய்தி வெளியிட்டன. (ம)

## லெபனான் எல்லையில் ஐ.எஸ். தப்பியோட்டம்



டமஸ்கஸ், ஓக. 31
லெபனான் எல்லையில் இருந்து பின்வாங்கிய ஐ.எஸ்.ஐ.எஸ். ஆயுததாரிகள் சிரியாவுக்குள் தப்பிச் சென்றுள்ளனர் என்று பன்னாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டன.

சிரியா மற்றும் லெபனான் எல்லையில் உள்ள மலைப் பகுதியை ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பு தனது கட்டுப்பாட்டில் வைத்திருந்தது. இந்தப் பகுதியில் வசித்த மக்களையும் அந்த அமைப்பு மனிதக் கேடயங்களாகப் பயன்படுத்தியது. மலைப்பகுதிகளையும், மக்களையும் மீட்பதற்கான போரை கடும்முனைப்பில் முன்னெடுத்தது லெபனான் அரசு. குர்தீஷ் படையும் லெபனான் அரசுக்கு உதவியது. கடந்த ஒரு மாதத்துக்கு முன்னர் ஆரம்பிக்கப்பட்ட இந்தப் போரில் லெபனான் சொல்லிக்கொள்ளும்படியான வெற்றியைப் பெற்றது. தாக்குதல்களால் அங்குள்ள மக்கள் பெரும் நெருக்கடியைச் சந்தித்த நிலையில் மக்களை மீட்பதற்காக தனது தாக்குதல்களை தற்காலிகமாக நிறுத்தியது லெபனான். இந்த வாய்ப்பைப் படுத்திய ஐ.எஸ்.ஐ.எஸ். ஆயுததாரிகள் சிரியாவுக்குள் தப்பிச் சென்றுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)



## அமெரிக்காவுடன் உறவினை துண்டிக்கிறது பாகிஸ்தான்

இஸ்லாமபாத், ஓக. 31
பாகிஸ்தான், தீவிரவாதிகளின் புகலிட்மாக உள்ளது என்று ட்ரம்ப் கருத்துத் தெரிவித்திருந்த நிலையில் அமெரிக்காவுடனான உறவை தற்காலிகமாக முறித்துக் கொள்வதாக பாகிஸ்தான் அறிவித்தது.

அமெரிக்க அதிபர் ட்ரம்ப் ஆசியாவுக்கான புதிய கொள்கையை அண்மையில் வெளியிட்டார். தெற்காசியா தொடர்பில் அவர் கருத்துத் தெரிவிக்கையில், ஆப்கானிஸ்தானில் தாக்குதல்களை நடத்திவரும் தலிபான், ஹக்கானி உள்ளிட்ட பெருவாரியான தீவிரவாத அமைப்புக்களுக்கு பாகிஸ்தான் துணை போகிறது என்று குற்றம்சாட்டினார். தீவிரவாதிகளின் புகலிடமாக பாகிஸ்தான் திகழ்கிறது. தேவைப்பட்டால் பாகிஸ்தானில் புகுந்து வான்வழித் தாக்குதல்களை நடத்துவோம் எனவும் தெரிவித்திருந்தார் இந்தக் கருத்துக்களுக்கு பாகிஸ்தான் கடும் கண்டனம் தெரிவித்தது. பாகிஸ்தானுக்கு ஆதரவாக சீனா கருத்துப் பகிர்ந்தது. இந்தப் பின்னணியில் அமெரிக்காவுடனான உறவை தற்காலிகமாக முறித்துக் கொள்ள பாகிஸ்தான் முடிவெடுத்துள்ளது என்று பன்னாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டன. (ம)



கடும் புயல், அதைத் தொடர்ந்துபெய்த கனமழை என்பவற்றால் அமெரிக்காவின் டெக்சாஸ் மாநிலம் மிகையாகப் பாதிக்கப்பட்டுள்ள நிலையில், குறித்த மாநிலத்தை நேற்றுப் பார்வையிட்டார் அமெரிக்க அதிபர் ட்ரம்ப். (ம)

## பூட்டான் வரவேற்பு

டோக்லாம் விவகாரத்துக்கு முடிவு காணப்பட்டதுக்கு பூட்டான் வரவேற்புத் தெரிவித்துள்ளது. இந்தியா – சீனா – பூட்டான் ஆகிய நாடுகளின் எல்லைகள் சந்திக்கும் இடம் டோக்லாம். இந்தப் பகுதி தமக்கு மட்டுமே சொந்தம் என்று இந்தியா, சீனா இரு நாடுகளும் சொந்தம் கொண்டாடின. இந்த விவகாரத்தால் ஏற்பட்ட முறுகல் நிலைகளைத் தொடர்ந்து குறித்த பகுதியில் இரு தரப்பும் இராணுவத்தைக் குவித்தன. தற்போது இரு நாடுகளும் தமது படைகளைத் திரும்பப் பெற்றுக்கொள்ளத் திட்டமிட்டுள்ளன. இதற்கு பூட்டான் வரவேற்புத் தெரிவித்தது. (ம)

## அணுவாயுதச் சோதனைக்கு வேண்டும் நிரந்தரத் தடை

*குத்தேரஸ் வலியுறுத்தல்*

அணு ஆயுதச் சோதனை சட்டப்பூர்வமாகத்தடைசெய்யப்பட வேண்டும் என்று ஐ.நா. பொதுச்செயலாளர் அந்தோனியோ குத்தேரஸ் குறிப்பிட்டார்.

ஆண்டுதோறும் ஓகஸ்ட் 29ஆம் திகதி ஆணுவாயுத சோதனை எதிர்ப்புத் தினமாக கடைப்பிடிக்கப்படுகிறது. இந்தத் தினத்தை முன்னிட்டு நேற்றுமுன்தினம் வெளியிட்ட அறிக்கையிலேயே குத்தேரஸ் இவ்வாறு குறிப்பிட்டார்.

"கடந்த 70 ஆண்டுகளில் உலகம் முழுவதும் இரண்டாயிரத்துக்கும் மேற்பட்ட அணு ஆயுத சோதனைகள் நடத்தப்பட்டுள்ளன. இதன் காரணமாக அணு ஆயுத சோதனை நடத்தப்பட்ட பகுதிகளில் வாழும் மக்களுக்கும் சுற்றுச்சூழலுக்கும் பெரும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

அணுவாயுதச் சோதனைகளைமுழுமையாகத்தடை செய்ய அனைத்து நாடுகளும்ஒன்றிணையவேண்டும்'' எனக் குத்தேரஸின் அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது. (ம)



# குருப்பெயர்ச்சி பலன்கள்



## கன்னி

சுயகட்டுப்பாட்டுடன் நடந்து கொள்பவர்களே!
உங்கள் ராசிக்கு தனஸ்தானமான 2ஆம் இடத்தில் குரு பகவான் 2.9.2017 முதல் 2.10.2018 வரை அமர்ந்து பலன்களைத் தர இருக்கிறார். மனதில் உற்சாகம் ஏற்படும். பண வரவு அதிகரிக்கும். குடும்பத்தில் மகிழ்ச்சியும் நிம்மதியும் நிலவும். பிரிந்திருந்த கணவன் மனைவி ஒன்று சேருவார்கள். கட்டடப் பணியை மீண்டும் தொடங்க வங்கிக் கடனுதவி கிடைக்கும். சுப நிகழ்ச்சிகளால் வீடு களைகட்டும். புதிய ஆடை ஆபரணங்கள் வாங்குவீர்கள்.

**குரு பகவானின் பார்வை:** குரு தனது 5ம் பார்வையால் உங்கள் ராசிக்கு 6ஆம் வீட்டைப் பார்ப்பதால் சாதிக்க வேண்டும் என்ற எண்ணம் மேலோங்கும். அரசால் அனுகூலம் உண்டாகும். பழுதான மின்னணு, மின்சார சாதனங்களை மாற்றுவீர்கள். அதிக சம்பளத்துடன் புது வேலை கிடைக்கும். சிலருக்கு வெளிநாடு செல்லும் வாய்ப்பு உண்டாகும். மகளுக்கு நல்ல இடத்தில் வரன் அமையும். குரு தனது 7ஆம் பார்வையால் உங்கள் ராசிக்கு 8ஆம் வீட்டைப் பார்ப்பதால் எதையும் திட்டமிட்டுச் செய்வது நல்லது. உடன் பிறந்தவர்களால் அலைச்சல் இருந்தாலும் ஆதாயமும் உண்டாகும். புண்ணிய ஸ்தலங் களுக்குச் செல்வீர்கள். குரு பகவான் தனது 9ஆம் பார்வையால் உங்கள் ராசிக்கு 10ஆம் வீட்டைப் பார்ப்பதால் சவாலான காரியங்களையும் செய்வீர்கள். புதிய பொறுப்புகளுக்குத் தேர்ந்தெடுக்கப்படுவீர்கள். பணிச் சுமை குறையும்.

**குரு பகவானின் நட்சத்திர சஞ்சாரம்:** உங்கள் ராசிக்கு 3ஆம் மற்றும் 8ஆம் வீடுகளுக்கு உரிய செவ்வாயின் சித்திரை நட்சத்திரம் 3ஆம், 4ஆம் பாதம் துலாம் ராசியில் 2.9.2017 முதல் 5.10.2017 வரை குரு பகவான் செல்வதால் அடிக்கடி உணர்ச்சிவசப்படுவீர்கள். சொத்துப் பிரச்னைக்குத் தீர்வு காண்பது நல்லது.

6.10.2017 முதல் 7.12.2017 வரை ராகு பகவானின் சுவாதி நட்சத்திரத்தில் குரு பகவான் செல்வதால் தெளிவான முடிவுகள் எடுக்க முடியாமல் குழம்புவீர்கள். பிள்ளைகள் பிடிவாதமாக இருப்பார்கள். உங்கள் ராசிக்கு 4 மற்றும் 7ஆம் இடங்களுக்கு உரிய குரு பகவான் தன் சுய நட்சத்திரமான விசாகம் 1, 2, 3ஆம் பாதம் துலாம் ராசியிலேயே 8.12.2017 முதல் 13.2.2018 வரை மற்றும் 4.7.2018 முதல் 2.10.2018 வரை பயணிப்பதால் கணவன் மனைவிக்குள் வாக்குவாதங்கள் வந்து செல்லும். தாயாருடன் மனவருத்தம் ஏற்படக்கூடும். தாயாரின் உடல் ஆரோக்கியமும் சிறு அளவில் பாதிக்கப்படக்கூடும்.

**குரு பகவானின் அதிசார வக்கிர சஞ்சாரம்:** 14.2.2018 முதல் 10.4.2018 வரை விசாகம் நட்சத்திரம் 4ஆம் பாதத்தில் அதிசார வக்கிரமாகச் செல்வதால் முயற்சிகள் நிறைவேறுவதில் தடை, தாமதம் ஏற்படும். வேலைச்சுமையால் பதற்றம் அதிகரிக்கும். தாழ்வு மனப்பான்மை தலைதூக்கும். சொத்து விஷயத்தில் அவசர முடிவுகள் எடுக்க வேண்டாம்.

குரு பகவானின் வக்கிர சஞ்சாரம்: 7.3.2018 முதல் 3.7.2018 வரை தன் சுய நட்சத்திரமான விசாகம் நட்சத்திரத்தில் வக்கிரகதியில் செல்வதால் தன்னம்பிக்கை அதிகரிக்கும். தடைப் பட்டிருந்த திருமணம் கூடிவரும். வியாபாரத்தில் மாற்றங்கள் செய்வ தால் இலாபம் அதிகரிக்கும். உத்தியோகத்தில் முக்கியத்துவம் கிடைக்கும். மாணவர்களே! படிப்பில் ஆர்வம் அதிகரிக்கும். எழுத்துப் போட்டி, ஓவியப் போட்டிகளில் கலந்துகொண்டு பரிசும் பாராட்டும் பெறுவீர்கள். தேர்வுகளில் அதிக மதிப்பெண்கள் பெறுவீர்கள். கலைத்துறையினரே! தடைகளைத் தாண்டி சாதிப்பீர்கள். இந்த குருப்பெயர்ச்சி, பொறுப்பு களையும் புதிய அனுபவங்களையும் தருவதோடு, எதிர்பார்த்த பலன்களைப் பெற்றுத் தருவதாகவும் அமையும்.

## வரலாற்றில் இன்றைய தினம் 31.08.2017

1422- பிரிட்டனின் ஐந்தாம் ஹென்றி அரசர் ஒருவகை வயிற்றுளைவு, வாந்தி பேதியால் உயிரிழக்க அவரது மகன் ஆறாம் ஹென்றி பிறந்து ஒன்பது மாதங்களே ஆன நிலையில் பிரிட்டன் அரசரானார்.

1920- முதலாவது வானொலிச் செய்தி மிச்சிக்கன் டெற்றொயிற்றில் ஒலிபரப்பப்பட்டது.

1936- செக் குடியரசின் தற்போதைய உத்தியோகபூர்வ வானொலி நிலையம், ஒலிபரப்பைத் தொடங்கியது.

1986- ஏயரோ மெக்ஸிகோ வானூர்தி சேவைக்குச் சொந்தமான வானூர்தி 498, கலிபோர்னியாவில் விபத்துக்குள்ளாகியதில் 82 பேர் உயிரிழந்தனர்.


1993- லித்துவேனியாவிலிருந்து ரஷ்யா தனது படைகளை முற்றாக மீளப் பெற்றது.

1999- லாபா போயிங் 737 வானூர்தி புவனெஸ் ஏயர் ஜோர்ஜ் நியூபெரி வானூர்தி நிலையத்திலிருந்து புறப்பட்ட வேளையில் விபத்துக்குள்ளாகியதில் 65 பேர் உயிரிழந்தனர்.

2003- வடக்கு கிழக்கைப் பிரிப்பதற்கு தமிழ்த் தேசியக் குழு கண்டனம்.

2006- இருபாலையில் இளைஞர் சுட்டுக்கொலை

2016- தானே விதைத்த இனவாதத் தீயால் தானே இடர்படுகிறார் ரணில் என நாடாளுமன்ற உறுப்பினர் சரவணபவன் தெரிவிப்பு.



*1986 - சோவியத் பயணிகள் கப்பல் அட்மிரல் சக்கிமோவ் கருங்கடலில் மூழ்கியதில் 423 பேர் உயிரிழந்தனர்.*

**நாளை**
**01.09.2017**
வெள்ளிக்கிழமை
**ஆவணி - 16**
திதி: தசமி கா. 07.56 வரை
நட்சத்திரம்: பூராடம் முழுவதும்
சுபநேரம்: 06.05–07.35 வரை
ராகுகாலம்: 10.35–12.05 வரை

# பத்தி எழுத்து

## தெரிவுக்குழுவின் விலகல் ஏற்றுக்கொள்ள இயலாதது

இலங்கை அணியின் தொடர் தோல்விகளை அடுத்து தலைமைத் தேர்வாளர் சனத் ஜெயசூரியவும், ஏனைய தேர்வாளர்களும் தத்தமது பதவிகளை நேற்றுமுன்தினம் துறந்துள்ளனர். ஒரு அணியின் தொடர்ச்சியான தோல்விகளை அடுத்து அந்த அணியின் தெரிவுக்குழு பதவி விலகுவது என்பது பொதுவான ஒன்றே. ஆனால் இலங்கைத் தெரிவுக்குழு பதவி விலகியமை என்பது ஏற்றுக்கொள்ளக் கூடிய ஒன்று என்று படவில்லை. இலங்கை கிரிக்கெட்டின் மும்மூர்த்திகளான சங்கா, மகேல, டில்சான் ஆகியோர் விலகியதன் பின்னர், இலங்கை அணி மிகப்பெரும் தளம்பல் நிலையைச் சந்தித்தது. அதிலும் குறிப்பாக சங்கா, மகேல இருவரினதும் பதவி விலகலை அடுத்து மிகப்பெரும் தடுமாற்றத்தை எதிர்கொண்டது. இவர்கள் இருவரும் ஓய்வுபெற்று சுமார் இரண்டு வருடங்கள் முழுமையாக நிறைவடைந்துள்ளன. எனினும் இவர்களின் வெற்றிடம் இன்றுவரை உணரப்பட்டுக்கொண்டே உள்ளது. இந்தியாவைப் பொறுத்தவரை ஒரு வீரர் ஓய்வுபெறப்போகிறார் என்றால் அவருக்கு உரிய மாற்று வீரரைத் தேடிக்கண்டுபிடித்து தயார்ப்படுத்தி விடுவார்கள். இதற்குச் சிறந்த எடுத்துக்காட்டாக சகாவைக் குறிப்பிடலாம். டோனி தனது கிரிக்கெட் வாழ்க்கையின் இறுதிக்கட்டத்தில் உள்ளார் எனவே அவரின் இடத்தை நிவர்த்தி செய்ய வல்லவர் என்று சகா அடையாளம் காணப்பட்டுள்ளார். இலங்கையில் அவ்வாறான திட்டங்கள் எதுவும் இல்லை. எனவே தவறு தெரிவுக்குழுவிடம் மட்டுமல்லாமல் ஒட்டுமொத்தக் கட்டமைப்பிலும் உள்ளது.

சங்கா, மகேலவின் ஓய்வின் பின்னர் இலங்கை அணியைக் கட்டியெழுப்ப இரண்டு வருடகால அவகாசம் போதுமானதாக இருந்தபோதிலும் அது செயற்படுத்தப்படாமைக்கு வீரர்களிடத்திலும் ஏகப்பட்ட தவறுகள் உள்ளன. களத்தில் வீரர்களின் பெறுபேறு என்பது இரண்டாவது பட்சம், முதலாவது ஒவ்வொரு வீரரும் தனது உடல்தகுதியைச் சீராகப் பேண வேண்டியது கட்டாயமானது. இந்த அடிப்படைத்தகுதி இலங்கை வீரர்களிடம் இல்லை. தற்போது விளையாடும் வீரர்களில் ஒருவர் கூட சங்கா, மகேலவின் ஓய்வின் பின்னர் சீராக அணியில் விளையாடியது கிடையாது. எனின் எவ்வாறு அணியைக் கட்டமைப்பது.

ஒரு அணியின் செயற்பாடுகள் தொடர்பில் விமர்சனங்கள் வருவது ஆரோக்கியமானது. அது அவசியமானதும்கூட. ஆனால் அந்த அணியைச் செயற்படாமல் வைக்கக்கூடிய அளவுக்கு விமர்சனம் வருவதை ஏற்றுக்கொள்ள இயலாது. இலங்கையின் ஒவ்வொரு தோல்வியின் பின்னர் அந்த அணியின் முன்னாள் தலைவர் ரணதுங்க மிகவும் கடுமையான சொற்பிரயோகங்களைப் பயன்படுத்தி விமர்சனங்களை முன்வைத்தார். ஒருதடவை “இலங்கை, இந்தியா அணிகளுக்கு இடையில் கடந்த 2011ஆம் ஆண்டு நடைபெற்ற உலகக் கிண்ணத் தொடரின் இறுதியாட்டத்தில் சூதாட்டம் இடம்பெற்றது” என்றவாறாகவும் அவர் குறிப்பிட்டார். ஒரு அணியொன்று தொடரில் விளையாடிக்கொண்டிருக்கையில் உளரீதியான பாதிப்பை ஏற்படுத்தக்கூடிய இந்த விமர்சனங்களும் நிச்சம் பின்னடைவே. எனவே தெரிவுக்குழு மட்டுமல்ல, மாறாக ஒட்டுமொத்த இலங்கை கிரிக்கெட் சபையும் மாற்றியமைக்கப்பட வேண்டியதே.

# சுடோக்கு எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | | | 6 | | | | 4 | |
| | 3 | | | 9 | | | | 1 |
| | 5 | | | | 8 | | | |
| 6 | | | | | | 7 | | |
| 2 | | | 7 | | 5 | | | 9 |
| | | 8 | | | | | | 5 |
| | | | 9 | | | | 1 | |
| 4 | | | | 2 | | | 9 | |
| | 2 | | | | 6 | | | 4 |

## நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 7 | 8 | 9 | 5 | 4 | 1 | 6 | 2 | 3 |
| 1 | 4 | 2 | 6 | 9 | 3 | 7 | 8 | 5 |
| 6 | 5 | 3 | 2 | 8 | 7 | 4 | 1 | 9 |
| 9 | 6 | 4 | 1 | 2 | 5 | 3 | 7 | 8 |
| 8 | 2 | 1 | 7 | 3 | 9 | 5 | 4 | 6 |
| 3 | 7 | 5 | 8 | 6 | 4 | 2 | 9 | 1 |
| 2 | 1 | 7 | 9 | 5 | 6 | 8 | 3 | 4 |
| 4 | 9 | 6 | 3 | 7 | 8 | 1 | 5 | 2 |
| 5 | 3 | 8 | 4 | 1 | 2 | 9 | 6 | 7 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்கு படுத்தல் தான் இதன் அடிப்படை. 1–9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளே 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டி ருக்கிறது. (உள்ளே இருப்ப வற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1–9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படு கையில் உள் பெட்டி களுக்குள்ளும் அவ்வாறே 1–9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும். தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை.

**ஒரு பெரியவர் என்னைப் பார்த்து வீரமும் விவேகமும் இளைஞன்கிட்ட கண்டிப்பா இருக்க வேனும்னு சொன்னார்...**



**நான் இரண்டு படத்தையும் டவுன்லோட் பண்ணிட்டேன்**

**வேற்றுக்கிரகவாசிகளிடம் மட்டுமல்ல வீட்டுக் கிரக வாசிகளிடமும் (மனைவி) உள்ளது**



**பறக்கும் தட்டுகள்....**

**அமைதிக்குப் பெயர் தான் சாந்தி**



**அப்போ கோபத்துக்குப் பெயர் என்ன வசந்தியா...?**

## இன்றைய நாள்

**மேடம்:** அன்றாடப் பணிகளில் அக்கறையுடன் ஈடுபடுவீர்கள். மனதில் தன்னம்பிக்கை மேலோங் கும். தொழில் வியாபாரம் சிறந்து விளங்கும். வரு மானம் பன்மடங்கு உயரும்.

**இடபம்:** உங்களின் பேச்சை சிலர் தவறாகப் புரிந்து கொள்ளலாம். தொழில் வியாபாரத்தில் இருந்த குறுக்கீடு சரியாகும். சேமிப்புப் பணம் வீட்டுச் செலவுக்கு பயன்படும்.

**மிதுனம்:** மனதில் தெய்வ நம்பிக்கை அதி கரிக்கும். புதிய முயற்சிகள் இனிதாக நிறை வேறும். தொழில் வியாபார விஷயமாக வெளியூர் செல்ல நேரிடலாம்.

**கடகம்:** குடும்பத்தினரின் ஆதரவைப் பெற்று மகிழ்வீர்கள். தொழில் வியாபார வளர்ச்சிக்கான வாய்ப்பு கிடைக்கும். எதிர்பார்த்த ஆதாயம் கிடைக்கும்.

**சிங்கம்:** சிலரது பேச்சு உங்களை சங்கடப்ப டுத்தலாம். எவருக்கும் தகுதிக்கு மீறிய வாக்குறுதி வழங்க வேண்டாம். தொழிலில் இலாபம் சுமாராக இருக்கும்.

**கன்னி:** கொடுத்த வாக்கை நிறைவேற்றுவீர்கள். தொழில் வியாபாரத்தில் குறுக்கீடு வந்து பின்னர் சரியாகும். அளவான வருமானம் கிடைக்கும். இஷ்ட தெய்வ வழிபாடு சிறக்கும்.

**துலாம்:** புதிய முயற்சியில் ஈடுபட்டு நன்மை காண்பீர்கள். குடும்பத்தினரின் ஆதரவு மகிழ்ச்சி அளிக்கும். தொழில், வியாபாரத்தில் இருந்த சிரமம் விலகும். இலாபம் உயரும்.

**விருச்சிகம்:** மனதில் உற்சாகம் அதிகரிக்கும். குடும்பத்தினரின் அன்பும் ஆதரவும் கிடைக்கும். தொழில் வியாபார வளர்ச்சியால் தாராளப் பணவரவு கிடைக்கும்.

**தனுசு:** பெருந்தன்மை குணத்துடன் நடந்து கொள்வீர்கள். தொழில் வியாபாரத்தில் வேலைப்பளு அதிகரிக்கும். இலாபம் படிப்படியாக உயரும். உடல்நலனில் அக்கறை தேவை.

**மகரம்:** நண்பர்களிடம் வாக்குவாதம் செய்ய வேண்டாம். தொழில் வியாபாரத்தில் மந்த கதி நிலவும். இலாபம் சுமாராக இருக்கும். பெண்க ளுக்கு தாய் வீட்டினரின் உதவி கிடைக்கும்.

**கும்பம்:** உற்சாக மனதுடன் செயல்படுவீர்கள். நீண்டநாள் திட்டமிட்ட செயல் நிறைவேறும். தொழில், வியாபாரத்தில் மூலதனத்தை அதிகப்படுத்துவீர்கள்.

**மீனம்:** உங்களின் வளர்ச்சி கண்டு அனை வரும் புகழ்ந்து பேசுவர். தொழில் வியாபா ரத்தில் இருந்த தடையனைத்தும் மறையும். பணவரவு அதிகரிக்கும்.

# ‘திருட்டுப் பயலே – 2’

## பாடல்கள் நாளை திரைக்கு வருகின்றன



பாபி சிம்ஹா, பிரசன்னா, அமலாபால் ஆகியோர் நடிப்பில் சுசி கணேசன் இயக்கத்தில் உருவாகி இருக் கும் ‘திருட்டுப் பயலே 2’ படத்தின் பாடல்கள் செப் ரெம்பம்பர் மாதம் முதலாம் திகதி அதாவது நாளை வெளியிடப்படவுள்ளது.

சுசி கணேசன் இயக்கத்தில் வெளியாகி பெரும் வரவேற் பைப் பெற்றபடம் ‘திருட்டுப்பயலே’. இதில் ஜீவன், அப் பாஸ், சோனியா அகர்வால், மாளவிகா உள்ளிட்ட பலர் நடித்திருந்தார்கள். இந்தப் படத்தின் வெற்றியைத் தொடர்ந்து, அதன் இரண்டாவது பாகம் உருவாகியுள் ளது. படத்தின் முன்னோட்டக் காணொலி அண்மை யில் வெளியாகி நல்ல வரவேற்பைப் பெற்றது. இந்த நிலையில் படத்தின் பாடல்கள் நாளை வெளியாகும் என்று அறிவிக்கப்பட்டுள் ளது. (ம)

# மார்க்கின் குழந்தையின் பெயருக்குப் பின்னால் உள்ள காரணங்கள்!

முகப்புத்தக நிறுவுநர் பார்க்குக்குக் கடந்த 28 ஆம் திகதி பெண் குழந்தை பிறந்தது. அந்தக் குழந்தைக்கு ‘ஓகஸ்ட்’ எனப் பெயர் வைத்துள்ளார். ஓகஸ்ட் அவரது இரண்டாவது குழந்தை. ஆகஸ்ட் பிறந்த செய்தியை முகப்புத்தகத்தில் பகிர்ந்த மார்க், பெயர்க்காரணத்தையும் தெரிவித்தார். ஆகஸ்டஸ் என்ற லத்தின் வார்த்தையிலிருந்து பெறப்பட்டது ஆகஸ்ட். இதற்கு மிகுந்த மரியாதைக்கு உரியவர், உச்சங்களைத் தொடுபவர் என்று பொருள். ஆகஸ்ட் என்பது இருபாலருக்குமான பொதுவான பெயர். இதில் பெண் குழந்தைகளை விட ஆண் குழந்தை களுகே இந்தப் பெயர் அதிகம் வைக்கப்படு கிறது. 2016ஆம் ஆண்டில் இந்தப் பெயர் 2ஆயிரத்து 76 ஆண் குழந்தை களுக்கும், 222 பெண் குழந்தை களுக்கும் வைக்கப்பட்டுள்ளது.



இதுதான் 2016ஆம் ஆண்டில் அமெரிக்காவில் பிறந்த குழந்தை களுக்கு வைக்கப்பட்ட பெயரிலேயே பிரபலமான பெயராம். 2ஆவது குழந்தைக்கும் மட்டும் மார்க் இப்படி ஆராய்ச்சி செய்து வைக்கவில்லை. தன் முதல் குழந்தையான மேக்ஸுக்கும் இதே உத்தியை தான் கையாண்டுள்ளார். 2015இன் பிரபலமான பெயரான மேக்ஸ் என்பதை தன் குழந்தைக்கு சூட்டினார். மேக்ஸி மஸ் என்ற லத்தின் வார்த்தையிலிருந்து பெறப்பட்ட வார்த்தை தான் மேக்ஸ். மார்க் தன் முதல் குழந்தையின் வளரும் வேகத்தை முகப்புத்தகத்தில் சிலாகித்துக் கொண்டாடியது அனைவரும் அறிந்ததே. தனது இரண்டாவது மகள் பிறந்ததற்காக ஒரு கடிதம் ஒன்றை தன் மனைவி பிரிசில்லாவுடன் சேர்ந்து எழுதியுள்ளார்.

டியர் ஆகஸ்ட்,

இந்த உலகிற்கு உன்னை வரவேற்கிறோம். நானும், உன் தாயும் நீ என்ன ஆகப்போகிறாய் என்பதை காண ஆவலாய் இருக்கிறோம். உன் சகோதரி பிறந்த போது உனக்கான உலகம் எப்படி இருக்கப் போகிறது என்ற கடிதம் ஒன்றை எழுதினோம். இப்போது அந்த உலகம் வளர்ந்து வருகிறது. நீ காணும் உலகில் நல்ல கல்வி, குறை வான எண்ணிக்கையில் நோய்கள், வளமான சமூகம் மற்றும் சமத் துவம் ஓங்கி இருக்கும். அறிவியல் தொழில்நுட்பத்தில் உள்ள மேம் பாடுகள் குறித்து எழுதியிருந்தோம்.

உன் தலைமுறை எங்களுடைய தலைமுறையைவிட சிறப்பானதாக இருக்கும். அதனை உருவாக்கித் தருவதில் எங்களின் பங்கு அதிக மாக உள்ளது. இன்றைய தலைப்பு செய்திகள் தவறாக இருந்தா லும், அதனை சரியாக மாற்ற வேண்டியது எங்கள் கடமை. உனது தலைமுறையை செம்மையாக்குவது தான் எங்களது வேலை.

ஆனால், உன் எதிர்காலத்தை பற்றி எழுதுவதை விட உன் குழந் தைப்பருவம் பற்றி பேச வேண்டியது அவசியம். உலகம் தற்போது உள்ள மோசமான சூழலில் நீ வெளியில் சென்று விளையாட சாதக மான சூழல் இப்போது இல்லை. அதனை ஏற்படுத்த கடமைப்பட்டி ருக்கிறோம். நீ வளர்ந்த பின்பு பிஸியாகி விடுவாய்.

அதனால் இப்போதே நீ பூக்களின் வாசம் நுகர வேண்டும், இலைக ளின் பசுமை அறிய வேண்டும். நீ மேக்ஸுடன் சேர்ந்து புத்தகங்க ளைப் படிக்க வேண்டும், வீட்டின் எல்லாப் பக்கங்களிலும் தவழ்ந்து விளையாட வேண்டும். மேலும் நீ நிறைய தூங்குவாய் என நினைக் கிறேன். உன் கனவிலும் நாங்கள் உன்னை எவ்வளவு அன்போடு பார்த்துக்கொள்கிறோம் என்பது உனக்கு தோன்றும் என நம்புகி றேன். குழந்தைப்பருவம் என்பது அதிசயமானது. ஒருமுறைதான் எமக்கு அது கிடைக்கும். அதனால் எதிர்காலத்தைக் குறித்து கவ லைப்படாமல் குழந்தைப்பருவத்தை அனுபவி. உன் எதிர்காலத்தை நாங்கள் கவனித்து கொள்கிறோம். உனக்கு மட்டுமல்லாமல் உன் தலைமுறை குழந்தைகள் அனைவருக்குமான சிறந்த உலகை உரு வாக்குவோம்.

ஆகஸ்ட் உன்னை அதிகம் நேசிக்கிறோம். உன்னுடனான ஆச்சர் யங்களுக்குக் காத்திருக்கிறோம். உன் வாழ்க்கை மகிழ்வாக அமைய வாழ்த்து கிறோம். நீ தந்த மகிழ்ச்சியை நாங்கள் உனக்குத் திரும்பத் தருவோம்.

அன்புடன் – அம்மா, அப்பா



## விளையாட்டில்

- எமது உடல் வலிமையானதாக இருக்க வேண்டும். அதிக உணவுகள் உண்பதால் மட்டும் உடல் வலுப் பெற்று விடுவதில்லை.
- உண்ட உணவு சரியான முறையில் சமிபாடைந்தால் தான் உடல் வலுப்பெறும்.
- எமது உடல் திறந்த வெளிகளில்விளையாடுவதாலும் உடற் பயிற்சிகள் செய்வதாலும் வலுப் பெறுகிறது.
- யோகாப் பயிற்சிகள் செய்தல் நன்று. விளையாட்டுப் போட்டிகளில் ஈடுபடுபவர்கள் தோல்வியுற்றாலும் அதை மகிழ்ச்சியுடன் ஏற்றுக் கொள்ளும் குணம் கொண்டவராக இருந்தல் இன்றியமையாதது.
- வெற்றி தோல்விகளில் நிலை குலையாத மனநிலை பெற்றவர்கள் வாழ்க்கையிலும் சுக துக்கங்களை சமமாக ஏற்றுக் கொள்ள முடியும்.
- பெருந்தன்மை என்னும் பண்பு மனதிலிருந்து தீய எண்ணங்களை விரட்டி மன அமைதியைக் கொடுக்கும்.
- அணி சேர்ந்து விளையாடும் போது அணித் தலைவருடன் ஒத்துழைப்பது மிக அவசியம்.
- தலைவரும் எல்லா அங்கத்தவர்களுக்கும் வாய்ப்புக் கொடுப்பதன் மூலம் எல்லோரையும் ஒத்துழைக்கச் செய்து வெற்றிக்காகப் பாடுபட வேண்டும்.
- ஒருவரே தனது திறமையைக் காட்டுவதற்கு எல்லா சந்தர்ப்பங்களையும் பறித்துக் கொள்வது முறையல்ல.
- நாம் தோற்றாலும் அணியினரை முழு மனதுடன் பாராட்டத் தவறக் கூடாது.
- வெற்றி பெற்று விட்டால் தோற்றவர்களிடம் கர்வமாக நடந்து கெள்ளாமல் பெருந்தன்மையுடன் நடந்து கொள்ள வேண்டும். அவர்களைக் கௌரவிக்க வேண்டும்.
- விளையாட்டில் வெற்றியும் தோல்வியும் சகஜம் என்பதை நினைவில் கொண்டால் எந்தப் பிரச்சினையும் ஏழாது.
- விளையாட்டு வீரர் எப்போதும் பரந்த மனம் கொண்டவராகவும், நன்னடத்தை உடையவராகவும், உற்சாகமானவராகவும் நடுநிலை பிறழாதவராகவும் இருக்க வேண்டும்.

## சிரிப்போம்

### நாய்க்குத் தெரியாது



தலைமை நீதிபதியை அவருடைய வீட்டில் பார்ப்பதற்கு சட்டத்தரணி ஒருவர் சென்றிருந்தார். அவரைப் பார்த்து விட்டு வெளியே வரும் போது நீதிபதியின் வீட்டில் உள்ள நாய் சத்தமாகக் குரைத்துக் கொண்டே சட்டத்தரணியின் பின்னால் ஓடி வந்தது. சட்டத்தரணி அச்சமடைந்தார். வேகமாக ஓடத் தொடங்கினார். அதை அவதானித்த நீதிபதி உரத்த குரலில், "ஏனப்பா ஓடுகிறீர்? குரைக்கிற நாய் கடிக்காது என்ற பழமொழி உமக்குத் தெரியாதா?" சட்டத்தரணி திரும்பிப் பார்த்தார், பழமொழி உங்களுக்கும் தெரியும் எனக்கும் தெரியும் நாய்க்குத் தெரிய வேண்டுமே"!

## பெரிய உருவின் கீழ் கோடு வரைவோம்





### அப்பா தந்த அறிவும் திறனும்

துள்ளித் திரிந்த என்னைத் தூக்கித்
தோளில் வைத்து ஆடினார்
பள்ளிக் கோடும் வயதிலெனக்குப்
பலவும் தந்து போற்றினார்

அழுதிடாது பள்ளி சென்றால்
அறிஞன் ஆவாய் என்றனர்
உழுது உழைத்துப் பொருளும் தந்து
உணர்ச்சி பலவும் ஊட்டினார்

தொழு தடிமை செய்யா வாழ்வைத்
தூக்கிப் போற்றிப் பேசினார்
விழுது போல் நாடு வாழ
பழுதில் வழிகள் காட்டினார்

அப்பா தந்த அறிவும் திறனும்
ஆயுள் முழுதும் போதுமே
தப்பாமற் சொல் கேட்டதாலே
சான்றோர் சபையில் நிற்கிறேன்



## ஒரு நேரத்தில் ஒரு வேலை

ஒரு சீடன் தனது குருநாதரிடம் நிறைவாகவும் விரைவாகவும் கற்றுக் கொள்ள வேண்டும் என்ற ஆசை கொண்டிருந்தான். தான் எல்லா விடயங்களையும் விரைவாக அறிந்து விடக் கூடாதென குருநாதர் ஒரு நேரத்தில் ஒரு விடயத்தை மட்டும் கற்றுத் தருகிறார் என வெகு நாள்களாக அவன் எண்ணிக் கொண்டிருந்தான். இதனால் அவரிடத்தில் கடும் கோபம் அவனுக்கு ஏற்பட்டிருந்தது. தான் விரைவாக கற்க வேண்டியதைக் கற்றுக் கொள்ளாமல் இருப்பதால் நேரம் வீணாகிப் போவதை எண்ணி கவலை கொண்டிருந்தான். ஒரு நாள், சீடன் குருநாதரிடம் தன் சந்தேகத்தை வாய்விட்டுக் கேட்டு விட்டான். "குருவே நான் தங்களிடம் நிறைய விடயங்கள் கற்க வேண்டும். ஆனால் நீங்கள் எனக்குக் கற்றுக் கொடுக்கும் விடயங்களோ மிகவும் சொற்பமாக உள்ளன. ஒரே நேரத்தில் பல விடயங்களைக் கற்றுத் தருவீர்களானால் நான் விரைவில் உங்களுக்கு நிகரான அறிவாளியாகி விடுவேன்" மேலும் எனது நேரமும் மிச்சமாகும்" என்றான்.

குருநாதர் சிறிது நேரம் யோசித்தார். அவனது அவசர புத்தியையும் புரிந்து கொண்டார். தனது வீட்டின் கோடிப் புறத்துக்கு சீடனை அழைத்துச் சென்றார். அங்கு ஒரு கூண்டில் அடைக்கப்பட்டிருந்த பத்துக் கோழிகளை திறந்து விட்டு பத்துக் கோழிகளையும் சீடனைப் பிடித்து வரச் சொன்னார். கூண்டில் இருந்து வெளியேறிய அனைத்துக் கோழிகளும் எல்லாத் திசைகளிலும் சிதறி ஓடின. இப்போது சீடன் எல்லாக் கோழிகளையும் மாறி மாறி துரத்திப் பிடிக்க முயற்சி செய்து கொண்டிருந்தான். ஆனால் ஒரு கோழியைக் கூட பிடிக்க முடியவில்லை. அவன் மிகக் களைத்துப் போன நிலைக்கு வந்து விட்டான். அவன் நிலை கண்ட குருநாதர் சீடனை விழித்தார். "கழுத்தில் கொண்டையுள்ள அந்த பேட்டுக் கோழியை மட்டும் பிடி" என்று கூறினார்.

சில நிமிடங்களில் சீடன் கொண்டைக் கோழியைத் துரத்தி பிடித்து விட்டான். அவனைப் பாராட்டிய குருநாதர் "சீடனே! ஒரு நேரத்தில் ஒன்றை மட்டும் பின்பற்றினால் எளிதில் அதனைப் பிடித்து விடலாம். ஒரு நேரத்தில் பலதையும் பிடிக்க முயன்றால் இறுதியில் எல்லாவற்றையும் இழந்துதான் நிற்க வேண்டிவரும்புரிந்ததா?" என்றார். பின்பு அவனை அரவணைத்த படி, "இதைப் போலே கல்வியும் படிப்படியாகத்தான் கற்க வேண்டும். ஒரே நேரத்தில் எல்லாவற்றையுமம் கற்க எண்ணினால் எமக்கு எதுவும் மனதில் நிற்காது எந்தெந்த காலத்தில் என்னென்ன கற்றுக் கொடுக்க வேண்டுமென்பதை ஒரு நல்லாசிரியன் அறிந்து வைத்திருப்பான்" என்றார். இப்போது சீடன் தனது எண்ணம் தவறானது எனப் புரிந்து கொண்டன்.



புள்ளிகளை இணைத்து உருவத்தைப் பூர்த்தி செய்யுங்கள்

## சிகிச்சைகள்...

விசாரணை அதிகாரி ந.பிரேமகுமார் விசாரணைகளை மேற்கொண்டார்.

நாவாந்துறையைச்சேர்ந்தவர்கள்குருசடித்தீவு அந்தோனியார் ஆலயத்துக்கு சென்றபோதே இந்த விபத்து நடந்தது. ஒரு படகில் 6 பேர் பயணித்தனர். படகு கவிழ்ந்து விபத்துக்குள்ளானது. அங்கிருந்தவர்களால் உடனடியாக ஐவர் காப்பாற்றப்பட ஒருவர் நீரில் மூழ்கி உயிரிழந்தார். காப்பாற்றப்பட்டவர்கள் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர். அவர்களில் ஒன்றரை வயதுக் குழந்தை ஒன்றும், பெண் ஒருவரும் தீவிர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டனர்.

அவர்களில் ஒருவரே நேற்று உயிரிழந்தார். ஏனையோர்சிகிச்சைபெற்றுவீடுதிரும்பியுள்ளனர். (ற-8,ரி1)

**வீடு விற்பனைக்கு**

உடுவில் மகளிர் கல்லூரிக்கு அருகில் முதலாம் கட்டையில் அமைதியான நல்ல சுற்றாடலில் சகல வசதிகளுடன் அமைந்த வீடு விற்பனைக்கு.

**077 854 6124**

**வேலையாள் தேவை**

சாவகச்சேரியில் இயங்கும் பிரபல கிறீம் ஹவுஸ் ஒன்றிற்கு றோல்ஸ், வடை செய்ய அனுபவமுள்ளவர் தேவை.

**தொடர்பு- 077 312 6534**

## வீட்டுக்கிருத்திய அழைப்பு



நிகழும் ஏவிளம்பி வருடம் ஆவணி மாதம் 04ஆம் நாள் (20.08.2017) ஞாயிற்றுக்கிழமை அமரத்துவம் அடைந்த எமது குடும்பத் தலைவர்

அமரர்

**சண்முகரத்தினக்குருக்கள் கனகசபாபதி ஐயர்**

அவர்களின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனை நாளை (01.09.2017) வெள்ளிக்கிழமை இடம்பெறும். அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளும் வண்ணம் அழைக்கின்றோம்.

இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும்.

தலங்காவற் பிள்ளையார் கோவிலடி,
திருநெல்வேலி.

குடும்பத்தினர்.

## கண்ணீர் அஞ்சலி



"தெல்லிப்பழை பிரதேச செயலகத்தில் திறன் அபிவிருத்தி உத்தியோகத்தராக கடமையாற்றும் **ந.ஜெகன்** அவர்களின் அன்புத் தாயார்

**திருமதி தங்கம்பிள்ளை நல்லதம்பி**

அவர்களின் 19.08.2017 அன்று திடீர்மறைவு எம்மையெல்லாம் ஆழ்ந்த சோகத்தில் ஆழ்த்தியுள்ளது. அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதோடு அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

நலன்புரி சங்கம், பிரதேச செயலகம்,
தெல்லிப்பழை.

பிரதேச செயலாளரும்
சகல நலன்புரி சங்க அங்கத்தவர்களும்.

## பெறுகை அறிவித்தல்

### வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை, மானிப்பாய்

### குறித்தொதுக்கப்பட்ட மாகாண அபிவிருத்தி நன்கொடை - 2017

1) தலைவர், உள்ளூராட்சி மன்றப் பெறுகைக்குழு, வலி தென்மேற்கு பிரதேச சபையினால் கீழ்க்காட்டப்பட்ட அட்டவணையில் விபரிக்கப்பட்ட இணைப்புக்கள் , உபகரணங்கள் வழங்குவதற்கு தகுதிவாய்ந்த விநியோகஸ்தர்களிடமிருந்து அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன.
2) கேள்வி பெற தகுதியுடையவராவதற்கு வெற்றி பெறும் கேள்விதாரர் கறுப்புப்பட்டியலில் சேர்த்துக்கொள்ளப்படாதவராகவும், அட்டவணையிற் காட்டியபடி பொருத்தமான தரத்தில் சீடா (CIDA) பதிவு மேற்கொள்ளப்பட்டவராகவும் இருத்தல் வேண்டும்
3) தேசிய போட்டி கேள்விகோரல் நடைமுறைக்கு அமைவாகவே கேள்வி கோரப்படுகின்றது. ஆயினும் பொதுநிதிச் சுற்றறிக்கை இல 04/2016(1) இற்கமைவாக இவ் விலைமனுக்கோரலானது தகுந்த வியாபார அல்லது கம்பனிப்பதிவுகளை வடக்கு மாகாணத்திற்குள் கொண்டுள்ள கேள்வியாளருக்கு வழங்கப்படுவதற்கு உரித்துடையதாக மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.
4) தேவையான தகைமைகள்,கேள்வி ஆவணம் பகுதி 4 இல் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலதிக தகவல்கள் தரவு அட்டவணை (Schedule ) பகுதி 5 இல் காட்டப்பட்டுள்ளது.
5) ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் செயலாளர், வலிகாமம் தென்மேற்குப் பிரதேசசபை, மானிப்பாய் (தொலைபேசி இல - 021-2255381) இல் இருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்ளலாம்.
6) ஆங்கில மொழியிலான பூரணமான கேள்வி ஆவணமொன்றை தலைவர், உள்ளூராட்சி மன்றப் பெறுகைக்குழு, வலி தென்மேற்கு பிரதேச சபை, மானிப்பாய் எனும் இடத்தில் 31 ஆகஸ்ட் 2017 ம் திகதியிலிருந்து 18 செப்ரெம்பர் 2017 வரை காலை 09.00 மணிக்கும் 14.00 மணிக்கும் இடையில் பார்வையிடவும், மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா 2000/- மற்றும் வரி செலுத்தி பெற்றுக்கொள்ளவும் முடியும்.
7) கேள்வி இரு பிரதிகளில் சமர்ப்பிக்கப்படவேண்டும். தலைவர், உள்ளூராட்சி மன்றப் பெறுகைக்குழு, வலி தென்மேற்கு பிரதேச சபை, மானிப்பாய் எனும் முகவரிக்கு 19 செப்ரெம்பர் 2017 ம் திகதி பி.ப 14.30 மணிக்கு முன்பதாக கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைக்கப்படவேண்டும். பிந்தியகேள்விகள் நிராகரிக்கப்படும்.
8) கேள்வியானது, கேள்வி நேரம் முடிவடைந்தவுடன் வருகைதரும் கேள்விதாரர்/அவரது பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.
9) கேள்வியாளர்களுக்கான முன் கலந்துரையாடல் 08 செப்ரெம்பர் 2017ம் திகதி பி.ப 14.30 மணிக்கு வலி தென்மேற்கு பிரதேசசபை மண்டபத்தில் நடைபெறும்.
10) கேள்விப் பிணைவைப்புத் தொகையானது கீழே அட்டவணையிற் காட்டப்பட்டவாறு அமையும்.

| இல | வேலைவிபரம் | மதிப்பீட்டு தொகை (மில்லியன்) | ஒப்பந்த காலம் | வேண்டப்படும் தரம் | வேண்டப்படும் கேள்விப் பிணை | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | பிணை வைப்பு(ரூபா) | செல்லுபடியாகும் காலம் |
| மாகாண குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்தி நன்கொடை வேலைத்திட்டம் - 2017 | | | | | | |
| 01 | பண்டத்தரிப்பு காலநடை வைத்தியசாலை வீதி புனரமைத்தல் | 4.27 | 02 மாதம் | C8 (வீதி வேலை) | 43,000.00 | 18.12.2017 |
| 02 | பெரியவிளான் விநாயகர் கோவில் முன் வீதி புனரமைத்தல் | 3.38 | 02 மாதம் | C8 (வீதி வேலை) | 34,000.00 | 18.12.2017 |
| 03 | சுதுமலை ஈஞ்சடி வைரவர் கோவில் பின் வீதி புனரமைத்தல் | 3.81 | 02 மாதம் | C8 (வீதி வேலை) | 38,500.00 | 18.12.2017 |

31.08.2017

தலைவர்,
உள்ளூராட்சிமன்றப் பெறுகைக்குழு,
வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை,மானிப்பாய்
வடக்குமாகாணம்

## கண்ணீர் பூக்கள்



தோற்றம்
28 . 08 . 2000

மறைவு
28 . 08 . 2017

**ஜெயசாந்தி டினேஸ்**

(யா/சென்ஜோன்ஸ் கல்லூரி 2019 உ.த வர்த்தக பிரிவு மாணவனும், கொக்குவில் இந்துக்கல்லூரியின் பழைய மாணவனும்)

அன்பு மகனே டினேஸ் நீ எங்கு சென்றாயடா?
முதல் நாள் தானே உன்னைத்திருமண வீட்டில் கண்டோம்.
மறுநாள் வந்த செய்தி எம்மைக்கதிகலங்க வைத்ததடா
உன்பிறந்த தினத்தைக் கொண்டாட காலன் உன்னையும் உன் தோழர்களையும்
அழைக்க படகுடன் வந்தானோ !
நீ எம் குடும்பத்தின் ஐந்தாவது பிள்ளை யென்றிருந்தோம்.பதினேழு வயதினிலே
உன் அண்ணன் சென்ற வழியில் நீயும் சென்றாயோ டினேஸ்.
உன் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல அளவெட்டி
முத்துமாரி அம்மனை பிரார்த்திக்கின்றோம்.

உயிர்ரவாடி துயருறும்,
பெரியப்பா - ஜெயக்குமார்
பெரியம்மா - பாக்கியலட்சுமி
அண்ணன் - ஆர்த்தன், அக்கா - ஆரபி,
தம்பி - அபிஷன்

நந்தாவில் ஒழுங்கை,
கொக்குவில்.

## மரண அறிவித்தல்கள்

### கதிர்காமு வேலுப்பிள்ளை



தோற்றம் 1927.05.19 மறைவு 2017.08.29

அச்சுவேலி பத்தமேனியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட கதிர்காமு வேலுப்பிள்ளை நேற்று முன்தினம் (29.08.2017) செவ்வாய்க் கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற கதிர்காமு - சீதவப்பிள்ளை தம்பதியரின் அன்புமகனும் இராசமணியின் அன்புக்கணவரும் செல்வரட்ணம் (கனடா), நவரட்ணம், கமலாதேவி, ராஜரஞ்சினி, லலிதாதேவி, ராஜகுலம், யோகரட்ணம் (கனடா) ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (01.09.2017) வெள்ளிக்கிழமை மு.ப. 10 மணியளவில் பத்தமேனியில் உள்ள இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக தீத்தாங்குளம் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**பத்தமேனி, அச்சுவேலி.**

**தகவல்:**
**குடும்பத்தினர்**

### பழனிப்பிள்ளை ஸ்ரீஅனந்தராசா

**(ஆனந்தண்ணை)**



மண்ணுலகம் 22.06.1939 விண்ணுலகம் 27.08.2017

அல்வாயைப்பிறப்பிடமாகவும், முரசுமோட்டையை வசிப்பிடமாகவும் கொண்ட **பழனிப்பிள்ளை ஸ்ரீஅனந்தராசா** கடந்த **(27.08.2017)** ஞாயிற்றுக்கிழமை இறைபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பழனிப்பிள்ளை ஞானரத்தினம் தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான பழனிப்பிள்ளை இராசம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் **கமலாம்பிகை**யின் பாசமிகு கணவரும் சத்தியலிங்கம், யோகலிங்கம், வானதி ஆகியோரின் பாசமிகு தந்தையும் சந்திரநாயகி, கௌரி, பிறேம்குமார் ஆகியோரின் பாசமிகு மாமனும் காலஞ்சென்றவர்களான ஸ்ரீஸ்கந்தராசா, ஸ்ரீகிருஷ்ணராசா, கெங்காதேவி ஸ்ரீபுவனேஸ்வரதேவி மற்றும் ஸ்ரீபாரததேவி (தேவி), ஸ்ரீபரமேஸ்வரிதேவி ஆகியோரின் சகோதரரும் ஆரபி, சாரங்கா, பிரணவன், பிருந்தன், செந்தூரன் ஆகியோரின் அன்புப்பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் **இன்று (31.08.2017) வியாழக்கிழமை பிற்பகல் 3.00** மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மடத்தடி, **கருகம்பன் இந்து மயானத்திற்கு** எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**T.P. : 077 654 4565**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

## இலங்கைப்...

விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டு வருகின்றதே? என்று எழுப்பப்பட்ட கேள்விக்கு அவர் பதிலளித்தார்.

"பொறுப்புகூறலுக்குரியநடவடிக்கைமுன்னெடுக்கப்பட்டு வருகின்றது. அரசியல் சூழ்நிலை இலங்கையின் சுயாதீனம் ஆகியவற்றைக் கருத்திற்கொண்டு இலங்கைக்குப் பொருத்தமானமுறையிலேயேவிசாரணை இடம்பெறும் என்று பன்னாட்டுச் சமூகத்திடம் தெளிவாக எடுத்துரைத்துள்ளோம். இதுவிடயத்தில்அவசரப்படமுடியாது. கலக்கமடையவும்கூடாது. வேகமான பயணத்தின் முடிவில் தீர்வு இருக்காது. இந்த அரசின் பயணம் மெதுவாகவே இருக்கின்றது. இதுபோன்றபிரச்சினைகளுக்கு ஒரு நாளிலோ அல்லது ஒரு மாதத்திலோ தீர்வைக் கண்டுவிட முடியாது. எப்படியிருந்த போதிலும் தீர்வை நோக்கி நகர்வோம்"" என்று அரசதலைவர் மைத்திரிபால பதிலளித்தார்.

**அவருடனான கேள்வி பதில் இங்கே.**

இலங்கையின் முன்னாள் இராணுவத்தளபதியும் பிரேசிலுக்கான தூதுவருமான மேஜர் ஜெனரல் ஜெகத் ஜயசூரியவுக்கு எதிராகப் பிரேசில் நீதிமன்றத்தில் மனித உரிமை அமைப்புகளால் வழக்குத் தொடுக்கப்பட்டுள்ளதே?

இது பற்றி எனக்கு அறிவிக்கப்படவில்லை. பத்திரிகைகளிலேயேநான்பார்வையிட்டேன். இது குறித்து தேடிப் பார்ப்போம் என்று அவர் பதிலளித்தார்.

**2020வரை கூட்டு அரசு தொடரும்**

கூட்டுஅரசைஅமைப்பதற்காகஐக்கியதேசியக் கட்சிக்கும், சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கும் இடையே செய்து கொள்ளப்பட்ட புரிந்துணர்வு உடன்படிக்கைடிசெம்பர்மாதத்துடன்முடிவடைகின்றது. கூட்டு அரசிலிருந்து வெளியேறுவார்கள் என்று சுதந்திரக்கட்சி உறுப்பினர்கள் சிலர் தெரிவிக்கின்றனர். உடன்படிக்கை நீடிக்கப்படுமா அல்லது அரசிலிருந்து சுதந்திரக் கட்சி வெளியேறுமா?

இருதரப்பினருமே இவ்வாறான கருத்தைத் தெரிவித்து வருகின்றனர். தனித்து ஆட்சியமைப்பதற்குரிய பெரும்பான்மை எந்தவொரு கட்சிக்கும் இல்லை. பிரிவு ஏற்பட்டால் மறுபடியும் கூட்டணி அல்லது இணக்க அரசையே உருவாக்கவேண்டும். 2015ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் மையச்செயற்குழு எடுத்த முடிவின் பிரகாரமே கூட்டு அரசில் 2017ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம்வரை இருப்பதற்குதீர்மானிக்கப்பட்டது. டிசெம்பர்மாதம்முடிவடைந்ததும்தொடர்ந்தும் இருப்பதா? இல்லையா? என்பதைக்கட்சியின் மையச் செயற்குழுவே முடிவெடுக்கும். சுதந்திரக் கட்சியின் நாடாளுமன்றக்குழுதான் கூட்டு அரசில் அங்கம் வகிக்கின்றது. நான் அரச தலைவர். எனவே, யார்வந்தாலும், போனாலும் ஆட்சியை நடத்த வேண்டிய பொறுப்பு எனக்கு இருக்கின்றது" என்றார் அரசதலைவர்.

கூட்டு அரசு 2020ஆம் ஆண்டு வரை தொடரும் என்ற நம்பிக்கை உங்களுக்கு இருக்கின்றதா? ஆம்

**மீண்டும் போட்டியிடமாட்டேன்**

பதவிக்குவரும்போது இரண்டாவது தடவை அரச தலைவர் வேட்பாளராக களமிறங்கமாட்டீர்கள் என்று உறுதி வழங்கிவிட்டே வந்தீர்கள். ஆனால் நீங்கள் இரண்டாவது முறையாகவும் போட்டியிடவுள்ளீர்கள் என்று சுதந்திரக் கட்சி உறுப்பினர்கள் சிலர் தெரிவிக்கின்றனர். முன்னையநிலைப்பாட்டில்உறுதியாக இருக்கின்றீர்களா? இல்லை நிலைப்பாடு மாறியுள்ளதா?

சிறிலங்காசுதந்திரக்கட்சி அவ்வாறு (இரண்டாவது தடவையாகப் போட்டியிடுவதா) கூறவில்லை. நானும் சொல்லவில்லை.

**மிரட்டிய மகிந்த**

சாதாரண மக்களுக்கு துரிதமாகச் செயற்படும் சட்டம், அரசியல்வாதிகளின் விவகாரத்தின் போன்போது மந்தகதியில் ஏன் செயற்படுகின்றது?

சட்டம் என்பது அனைவருக்கும் சமம். அதில் துளியளவேனும் பாகுபாடு இருக்கக்கூடாது. கடந்தகாலத்தில் இருந்தவர்கள்திட்டமிட்ட அடிப்படையில் நன்கு மூளையைப் பாவித்தே சில விடயங்களைச் செய்துள்ளனர். தாமதித்தேனும் உண்மைகள் வெளிவரும். அன்றும் இன்றும் என்றும் நான் ஊழல், மோசடிகளுக்கு எதிரானவன்.

2012ஆம் ஆண்டு [illegible] அபிவிருத்தி அமைச்சின் மீளாய்வுக் கூட்டத்தின்போது [illegible] அபிவிருத்தியின்போதுமோசடிஇடம்பெறுவதாகப் பலரும் சுட்டிக்காட்டுகின்றனர் எனத் தெரிவித்து அது பற்றிக் கேள்வி எழுப்பினேன். மறுநாள் காலை அழைப்பு வருகின்றது. உடனடியாக அலரிமாளிகை வருமாறு பணிக்கப்பட்டேன்.

அலரிமாளிகை வந்ததும் முன்னாள் அரச தலைவரின் (மகிந்தவின்) முகம் கோபமாக காட்சியளித்தது. வழமையானவரவேற்புஇருக்கவில்லை. "என்ன! ஊழல் பற்றிக் கேள்வி எழுப்பியுள்ளீர்களாமே? அரசில் இருந்து கொண்டு, கட்சிச் செயலாளர் பதவியை வகித்துக்கொண்டு எப்படி ஊழல் பற்றிக் கேட்ட முடியும்?" என்று கடுந்தொனியில் அவர் (மகிந்த) திட்டினார். "வேறொரு அரசியல் பயணத்தை ஆரம்பிக்கப்போகின்றீரா?" என்றும்என்னிடம் கேட்கப்பட்டது. அன்று நிலமை அப்படித்தான் இருந்தது.

இப்படித்தெரிவித்தார் அரசதலைவர் மைத்திரி பாலசிறிசேன. (உ-வ-5)

## போரின் போதான...

ராஜித சேனாரத்ன தெரிவித்தார்.

அரச தகவல் திணைக்களத்தில் நேற்று நடைபெற்ற வாராந்த அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும்செய்தியாளர்கள்மாநாட்டில்கருத்துத் தெரிவித்தபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

குற்றஞ்சாட்டப்பட்டுள்ளகாணாமற்போனோர், மனிதப் படுகொலை, கொலை, சித்திரவதை, துர்நடத்தை உள்ளிட்ட காரணிகள் தொடர்பில் சட்டரீதியான நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை இலங்கை அரசு தெளிவாக பன்னாட்டுச் சமூகத்துக்கு எடுத்துரைத்துள்ளது. ஆதாரங்கள் இல்லாமல் போரின் போது போர்க்குற்றங்கள் இடம்பெற்றதாக இராணுவத் தளபதிகள் மீது பொய்யான குற்றச்சாட்டுகளை சுமத்த முடியாது.

போரின்போதுஇடம்பெற்றஅனைத்துக்குற்றச்சாட்டுகளும்கொலைஎன்றுநினைக்கின்றனர். அரசுஎன்றரீதியில்அவ்வாறானநிலைப்பாட்டில் நாங்கள் இல்லை. நாடு என்ற அடிப்படையில் தீர்மானம்எடுத்துதீவிரவாதத்தைத்தோற்கடிக்கவே நாங்கள் போருக்குச் சென்றோம். அதில் நாங்கள் வெற்றி கொண்டோம் - என்றார்.

முன்னாள்இராணுவத்தளபதிஜெனரல்ஜெகத் ஜயசூரியவின் கீழ் இயங்கிய முகாம்களில் சித்திரவதை இடம்பெற்றதாக சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுதொடர்பில்செய்தியாளர்கள்எழுப்பியகேள்விக்குப்பதிலளித்தஅவர், சித்திரவதை தொடர்பிலும் ஆதரமற்ற குற்றச்சாட்டுகளே முன்வைக்கப்பட்டுள்ளன - என்றார். (வ-5)

## ஜெனரல்...

பதவிக் காலம் நிறைவடைந்தே நாடு திரும்பினார் என்று தெரிவித்துள்ளது.

முன்னாள் இராணுவத் தளபதியும், பிரேசிலுக்கான தூதுவருமான, ஜெனரல் ஜெகத் ஜயசூரியவுக்கு எதிராக, பிரேசிலில் போர்க்குற்ற வழக்குத்தாக்கல்செய்யப்பட்டது. உண்மை மற்றும் நீதிக்கான திட்டம் தலைமையிலான, மனித உரிமை அமைப்புகள் இந்த வழக்கைதாக்கல் செய்தன.

2009ஆம்ஆண்டுபோரின்இறுதிக்கட்டத்தில், ஜெனரல் ஜெகத் ஜயசூரியவின் மேற்பார்வையில் இருந்த இராணுவப் பிரிவுகளால், மருத்துவமனைகள் மீது தாக்குதல் நடத்தியதாகவும், ஆயிரக்கணக்கான மக்கள் கொல்லப்பட்டதாகவும், காணாமல் ஆக்கப்பட்டதாகவும், சித்திரவதை செய்யப்பட்டதாகவும் இந்த வழக்கில் குற்றம்சாட்டப்பட்டுள்ளது.

ஜெனரல் ஜெகத் ஜயசூரியவுக்கு எதிரான விசாரணைகளைஆரம்பித்து, அவரது இராஜதந்திர விலக்குரிமையை நீக்கி, வெளியேற்றுவதற்கு பிராந்திய அரசுகளுக்கு அழுத்தம் கொடுக்க முடியும்என்றநம்பிக்கையில்இந்தவழக்கைத் தொடர்ந்துள்ளதாக மனித உரிமை அமைப்புகள் தெரிவித்துள்ளன.

பிரேசில் மற்றும் கொலம்பியாவில், ஜெனரல் ஜெகத் ஜயசூரியவுக்கு எதிரான வழக்குகள் கடந்ததிங்கள் கிழமை தாக்கல்செய்யப்பட்டன என்று, இந்த முயற்சியை மேற்கொண்டுள்ள சட்டத்தரணி கார்லோஸ் காஸ்ரேசனா பெர்னாண்டஸ் ஊடகங்களிடம் தெரிவித்தார்.

"எதிர்வரும் நாள்களில் ஆஜென்ரீனா, பெரு, சிலி ஆகிய நாடுகளிலும் வழக்குகள் தாக்கல் செய்யப்படும். சுரினாம் அதிகாரிகள் இந்த மனுவை ஏற்றுக் கொள்ள மறுத்துவிட்டனர். இதுமறக்கப்பட்டுவிட்ட ஒரு இனப்படுகொலை. ஆனால், இந்த முயற்சி சனநாயக நாடுகளை ஏதோ ஒன்றைச் செய்யக் கட்டாயப்படுத்தும். இது போரின் ஆரம்பம் தான்" என்றும் சட்டத்தரணி கார்லோஸ் காஸ்ரேசனா பெர்னாண்டஸ் தெரிவித்துள்ளார்.

**சேவை முடிந்தது**

இதுதொடர்பில்பிரேசிலில்உள்ளதூதரகத்தின் பதில்தூதுவர்பிரேமதிலகஜெயக்கொடி, தனது 2 ஆண்டுகள் சேவைக்காலம் முடிந்து, ஜெனரல் ஜெகத் ஜயசூரிய பிரேசிலில் இருந்து இலங்கை திரும்பிவிட்டார். அவர் இப்போது இங்குதூதுவராக இல்லை. அவருக்குஎதிராக, மனித உரிமை அமைப்புகளால் தொடரப்பட்டுள்ள வழக்குத் தொடர்பாக கருத்து எதையும் வெளியிடமுடியாது என்றார்.

இலங்கைஅயலுறவுத்துறைஅமைச்சின்பேச்சாளர் மஹேஷினி கொலன்னே தெரிவித்ததாவது:

பிரேசில், கொலம்பியா, பெரு, சிலி, ஆஜென்ரீனா, சுரினாம் ஆகிய நாடுகளுக்கான தூதுவராககடந்தஇரண்டுஆண்டுகளாகப்பணியாற்றிய ஜெனரல் ஜெயகத் ஜயசூரிய, பிரேசிலை விட்டுப் புறப்பட்டு விட்டார். அவர் கொழும்பை நேற்றுவந்தடைந்தார். இந்தமாதத்துடன்அவரதுபதவிக்காலம்முடிவடையும்நிலையிலேயே நாடு திரும்புகிறார். போர்க்குற்ற வழக்கால் அவர், பிரேசிலைவிட்டுவெளியேறியுள்ளதாக வெளியானசெய்திகள்தவறு. அவரதுபயணம் முன்கூட்டியேதிட்டமிடப்பட்டது. வழக்கால்அவர் அங்கிருந்து வெளியேறவில்லை என்றார்.

**பொய்க் குற்றச்சாட்டு**

இந்தவிடயம்தொடர்பில்அமைச்சரவைமுடிவுகளைஅறிவிக்கும்பத்திரிகையாளர்சந்திப்பில், இராணுவப் பேச்சாளரிடம் கேள்வி எழுப்பப்பட்டது.

"2009ஆம் ஆண்டு போர் நிறைவுக்குக் கொண்டுவரப்பட்டபின்னர் இவ்வாறான அடிப்படையற்றபொய்யானகுற்றச்சாட்டுகள்இதற்கு முன்னரும்பலதடவைகள்சுமத்தப்பட்டுள்ளன. அவையனைத்தும் அர்த்தமற்ற குற்றச்சாட்டுகள் என்பதுடன், பொய்யானவை என்றும் நாங்கள் பன்னாட்டுச் சமூகத்துக்கு நிரூபித்துள்ளோம். ஆயுத ரீதியான போர் முடிவுக்குக் கொண்டுவரப்பட்ட போதிலும் விடுதலைப் புலிகளின் சித்தாந்தங்கள் பன்னாட்டு ரீதியில் தோற்கடிக்கப்படவில்லை. அவை தொடர்ந்தவாறே உள்ளன. ஜெனரல் ஜெகத் ஜயசூரியமீதுசுமத்தப்பட்டுள்ளகுற்றச்சாட்டுகள் அடிப்படையற்ற பொய்யான குற்றசாட்டுகள் என்பதையே தெரிவிக்க வேண்டியுள்ளது" என்று இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் ரொசான்செனவிரட்னபதிலளித்தார். (வ-5,31)

## பொறுப்புக்கூறலை...

கம் இன்னமும் நிறுவப்படவில்லை. இவ்வாறு அரசு பொறுப்புக் கூறல் விடயத்தில் இழுத்தடிப்புச்செய்துவருகின்றது. சட்டத்தைநாடாளுமன்றத்தில்நிறைவேற்றியும்உருப்படியாகஎதனையும்செய்யாததன் விளைவுதான், போர்க்குற்ற வழக்குத் தாக்கலாகுவதற்குக் காரணம்.

உலக நாடுகளுக்கு வாக்குறுதி கொடுத்தும் அதனை நிறைவேற்றவில்லை. ஐ.நா. தீர்மானத்தை நடைமுறைப்படுத்த அரசு எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. எந்த நியாயப்படும் இன்றி இவ்வாறு அரசு செயற்படுவதன் விளைவாகத்தான், இராணுவத்தின்முன்னாள் தளபதிகளுக்குஎதிராகபோர்க்குற்றவழக்குகள் தாக்கலாகுகின்றன என்றார். (வ-5)

## உண்மையை...

தினத்தைமுன்னிட்டுகொழும்புவிகாரமாதேவி பூங்காவில் நேற்று மாலை 4 மணிக்கு நடைபெற்றகூட்டத்தில்கலந்துகொண்டுஉரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

2009ஆம் ஆண்டுக்கு முன்னரும் பின்னரும், பலஆயிரக்கணக்கானோர்பலவந்தமாக காணாமல்ஆக்கப்பட்டுள்ளார்கள். காணாமல் ஆக்கப்பட்டவர்களைமீட்கஅவர்களின்நெருங்கிய அன்புக்குரிய உறவுகள் போராடி வருகின்றார்கள். இது சாதாரண விடயமல்ல. மிகப் பாரதூரமான விடயம்.

தெற்கில் 1989ஆம் ஆண்டு காலப் பகுதியில் பல ஆயிரக் கணக்கானோர் காணாமல் ஆக்கப்பட்டார்கள். இந்த நாட்டு மக்கள் அப்போது இந்த விடயத்துக்கு முக்கியத்துவம் கொடுத்திருந்தால், சில வேளைகளில் 2009ஆம் ஆண்டு நடந்தவை நடக்காமல் விட்டிருக்கக் கூடும். தாங்கள் விரும்பியவற்றைச் செய்துவிட்டு சட்டத்தின் முன்னால் செல்ல வேண்டிய தேவையில்லை, எதனையும் செய்து விட்டுத் தப்பிவிடலாம். அதற்குப் பொலிஸ், இராணுவம், அரசு உதவும். எமக்குஎதிராகநடவடிக்கைஎடுக்கமாட்டார்கள் என்ற நிலை மாற வேண்டும். அந்தத் துணிவு அகற்றப்பட வேண்டும். அது இல்லாமல் செய்யப்பட்டால்தான் நாட்டில் பலவந்தமாகக் காணாமல் ஆக்கப்படுதல் இல்லாமல் போகும்.

நாட்டில்அனைவரும்ஏற்கக்கூடியஅரசமைப்பு உருவாக வேண்டும். அப்போதுதான் நாட்டில் அமைதியாக எல்லோரும் வாழ முடியும்.

காணாமல் ஆக்கப்பட்டோருக்கான அலுவலகத்தை நிறுவும் சட்டம் கடந்த ஆண்டு நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது. அது இன்னமும் நடைமுறைக்கு வரவில்லை. அந்த அலுவலகம் நிறுவப்பட வேண்டும். சட்டரீதியான செயற்பாடுகள் இடம்பெற வேண்டும். அதனூடாக குற்றவாளிகள் கண்டுபிடிக்கப்பட்டு நீதி நிலைநாட்டப்பட வேண்டும்.

பலவந்தமாககாணாமல்ஆக்கப்பட்டவர்களில் எல்லோரும் உயிருடன் இருக்கின்றார்கள் என்று கூறவில்லை. பலர் உயிருடன் இல்லாமல் இருக்கலாம். நிலமை எப்படியாக இருந்தாலும் நாம் உண்மையை அறியாமல் இருக்க முடியாது. காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கு என்ன நடந்தது தொடர்பில் உண்மைகளைக் கண்டறிய வேண்டும்.

இந்தக் கடமையை நிறைவேற்றுவதாக இலங்கைஅரசுஐ.நா.வுக்குவாக்குறுதிஅளித்துள்ளது. இதற்கான சகல நடவடிக்கையும் எடுப்போம் என்று கூறியுள்ளது. ஆனால் அதனை நிறைவேற்றவில்லை. பன்னாட்டுச் சமூகம்இதில்மிகவும்கவனமாகஇருக்கின்றது. நாம் பல முனைகளில் போராட வேண்டும் என்றுகேட்கின்றேன். நாமும்பலவழிகளிலும் அழுத்தங்களைக் கொடுத்து வருகின்றோம். நாம்அனைவரும்பன்னாட்டுப்பங்களிப்புடன் வெற்றியடைவோம். எமது அனைத்து முயற்சிகளையும் சனநாயக ரீதியில் முன்னெடுக்க வேண்டும் - என்றார். (வ-5,8,31)

## டெங்கு...

இந்தச் சம்பவம் மீசாலை, மண்டுவிலில் நடந்துள்ளது.

தென்மராட்சியில் டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன. சாவகச்சேரி சுகாதாரத் திணைக்களத்தினர் வீடு வீடாகச் சென்றுசோதனைநடத்திடெங்குக்கட்டுப்பாட்டு நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ள னர்.

மண்டுவிலில்தொடருந்துத்திணைக்களத்தின் தண்டவாளப் பணியாளர்கள் தங்கியுள்ள விடுதியிலும் டெங்குச்சோதனை நடத்தப்பட்டது.

விடுதியின் பின்புறத்தில் வெண்டிச் செடிகள் பயிரிடப்பட்டிருந்தன. அவற்றுடன் கலந்து கஞ்சா செடிகளும் பயிரிடப்பட்டிருந்தமை கண்டுபிடிக்கப்பட்டது.

டெங்குச்சோதனைக்குச் சென்றவர்கள் உடனடியாகசாவகச்சேரிபொலிஸாருக்குஇதுதொடர்பில்தகவல் தெரிவித்தனர்.

அங்கு சென்ற பொலிஸார் சோதனை நடத்தினர். விடுதியின் ஓரிடத்தில் பெருமளவு கஞ்சா, போத்தல்களில் அடைக்கப்பட்டிருந்த நிலையில் கண்டுபிடிக்கப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது. கஞ்சாதிணிக்கப்பட்டிருந்தஒருதொகை பீடிகளும் கண்டுபிடிக்கப்பட்டன என்றும் கூறப்பட்டது. பயிரிடப்பட்டிருந்த கஞ்சா செடிகள் அழிக்கப்பட்டன.

இதுதொடர்பில்சந்தேகநபர்ஒருவர்கைதுசெய்யப்பட்டுள்ளார். சம்பவம்தொடர்பில்பொலிஸார் மேலதிகவிசாரணைகளைமேற்கொண்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது. (ற-ஜ-ரி2,9)

## மயக்க...

யிருந்துள்ளனர். அவர்கள்இரவுவேளைஉறங்கிக்கொண்டிருந்த போது, வீட்டின் கூரையைப் பிரித்துக்கொண்டு உள்ளே சென்ற ஒருவர் மயக்கமருந்தை தெளித்துவிட்டு அங்கிருந்த 35பவுண்நகைகளைத்திருடிச்சென்றுள்ளார். புதன்கிழமை காலை வீட்டுக்குச் சென்ற உறவினர் ஒருவர், வீட்டிலுள்ளவர்கள் எழுந்திராமல் மயக்க நிலையிலிருப்பதை அறிந்து யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்துக்கு அறிவித்தார். அத்துடன், மயக்கமுற்ற 5 பேரும் யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக யாழ்ப்பாணம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

(வ-106)

# புதிய அரசமைப்பை உருவாக்கும் பணிக்கு பௌத்த பீடங்கள் ஆதரவளிக்கவேண்டும்

## இந்துக் குருமார்கள் யாழ்ப்பாணத்தில் வலியுறுத்து

யாழ்ப்பாணம், ஓக. 31

புதிய அரசமைப்புக்கு அஸ்கிரிய பீடத்தினரும், மல்வத்தபீடத்தினரும் ஆதரவளிக்கவேண்டும் என்று இந்து மத குருமார்களால் நேற்றுக் கோரிக்கை முன்வைக்கப்பட்டது. இருப்பினும் அதற்கு அஸ்கிரியபீடாதிபதிஎந்தவொருபதிலையும் தெரிவிக்கவில்லை.

அஸ்கிரிய பீடத்தின் மகாநாயக்க தேரர் வரக்கொடசிறிஞானரத்தினதேரர்தலைமையிலான குழுவினர் யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்தனர். இவர்களுக்கும்யாழ்ப்பாணத்தைச்சேர்ந்த அனைத்து மதத் தலைவர்களுக்கும் இடையே யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்தில் நேற்றுக் கலந்துரையாடல் நடைபெற்றது.

யாழ்ப்பாணத்தில் இயங்கிய சிங்களமகாவித்தியாலயத்தை மீள ஆரம்பிக்கவேண்டும் என்று இந்தச் சந்திப்பில் கோரிக்கை விடுக்கப்பட்டது. அதற்கு அஸ்கிரிய பீடத்தினர், இது தொடர்பில் அரசதலைவருடன்பேசிநடவடிக்கைஎடுப்பதாகத் தெரிவித்துள்ளனர்.

"புதிய அரசமைப்பு உருவாக்க முயற்சி நடந்து கொண்டிருக்கின்றது. அதற்குநீங்களும்(அஸ்கிரிய பீடத்தினர்), மல்வத்து பீடத்தினரும் ஒத்துழைத்து ஆதரவளிக்கவேண்டும்.

புதிய அரசமைப்பில் பௌத்த மதத்துக்கு முன்னுரிமை அளிக்கப்படுவதில் ஆட்சேபனையில்லை. ஆனால் ஏனைய மதங்களைச் சிறுமைப்படுத்தக் கூடாது.

நாட்டின் பல பாகங்களிலும் மத வழிபாட்டுத் தலங்கள் மீது இடம்பெறும் தாக்குதல்கள் வன் செயல்கள் கட்டுப்படுத்தப்படவேண்டும்.

ஞானசாரதேரர் போன்றோர் தெரிவிக்கும் இனவாதக் கருத்துக்களால் அதிக முரண்பாடு ஏற்படுகின்றது. அதனைத் தடுக்க ஆவண செய்யப்படவேண்டும்" என்று இந்துக் குருமார்களால் வேண்டுகோள் விடுக்கப்பட்டது. (வ-101)

# மறுவாழ்வு பெற்ற முன்னாள் போராளிகளுக்கு பட்டதாரிகள் வேலைவாய்ப்பில் முன்னுரிமை

மறுவாழ்வுபெற்றமுன்னாள்போராளிகளில்பட்டதாரிகளாக உள்ளோர் தமக்கான வேலைவாய்ப்பை முன்னுரிமை அடிப்படையில் பெறுவதற்கு வடக்கு மாகாண ஆளுநர் அலுவலகத்தில் பதிவு செய்யுமாறு கேட்கப்பட்டுள்ளது.

வடக்குமாகாணஆளுநர்அலுவலகத்தால் அனுப்பிவைக்கப்பட்ட செய்திக் குறிப்பிலேயே இவ்வாறு அறிவிக்கப்பட்டது. அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

வாரம்தோறும் புதன்கிழமைகளில் ஆளுநர் றெஜினோல்ட்குரேயாழ்ப்பாணம்சுண்டுக்குளியில்அமைந்துள்ள அலுவலகத்தில் மக்களைச் சந்தித்து அவர்களின் குறைகளைத் தீர்த்து வைக்கும்வேலைத்திட்டத்தைமுன்னெடுக்கின்றார்.

இதில் நேற்றுக் காலை 9 மணி முதல் சமூக மட்ட அமைப்புக்கள், கிராம அபிவிருத்திச்சங்கங்கள், விவசாயசம்மேளனப் பிரதிநிதிகள் அரச ஊழியர்கள், தொண்டர்ஆசிரியசங்கப்பிரதிநிதிகள், பொதுமக்கள் எனப் பல்வேறு தரப்பட்டோர்ஆளுநர்குரேயைச்சந்தித்துதமது கோரிக்கை கடிதங்களை கையளித்தனர்.

அவர்களின்பிரச்சினைகளுக்குஉரிய அதிகாரிகளுடன் தொலைபேசி ஊடாகத் தொடர்பு கொண்ட ஆளுநர் தம்மிடம் தெரிவிக்கப்பட்ட முறைப்பாடுகள் தொடர்பில் கவனம் செலுத்தி உரிய பதில் வழங்குமாறு பணிப்புரை விடுத்தார்.

அமைச்சரவைப்பத்திரத்தில்இடம்பிடிக்காத மேலும் மறுவாழ்வு பெற்ற முன்னாள் போராளிகளில் 27 பட்டதாரிகள் ஆளுநரைச் சந்தித்து தங்களையும் வேலைவாய்ப்புப் பட்டியலில் உள்ளடக்க ஆவணை செய்யுமாறு வேண்டிக்கொண்டனர்.

ஏற்கனவே மறுவாழ்வு பெற்ற 35 முன்னாள் போராளிகள் ஆளுநர் றெஜினோல்ட் குரே மற்றும் கொழும்பு அமைச்சர்சுவாமிநாதன்ஆகியோரின் ஒழுங்கமைப்பில்அமைச்சரவைபத்திரத்தில் உள்வாங்கப்பட்டு பட்டதாரிகள் நியமனத்தில் அவர்களை உள்வாங்குவதற்கானதீர்மானம்நிறைவேற்றப்பட்டுள்ளது என்று அந்தச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ,101)

DLB
CAR PLUS
சீட்டிழுப்பு இல 21
சீட்டிழுப்பு திகதி 2017.08.30
வெற்றி இலக்கங்கள்
16 23 36 P தங்க
06 12 48
1 17
5,425,600/=
www.dlb.lk

Galaxy Star
வெற்றி வாரம் 190
திகதி 30.08.2017
நட்சத்திர மற்றும் வெற்றி இலக்கங்கள்
04 37 43 50 58
15 30 46 49
அடுத்த ஞாயிற்றுக்கிழமை
சுப்பர் பரிசுப் பொதி
ரூ. 3, 912, 856/-
2017.09.03 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மஞ்சள் நிற டிக்கட்டுகளாகும்.
வெற்றிபெற்ற சீட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

சனிக்கிழமை அதிர்ஷ்டம்
வெற்றி வாரம் 2923 திகதி 30.08.2017
வெற்றி எண்கள் மற்றும் ஆங்கில எழுத்து
01 05 21 69 B
போனஸ் இல.
56
சனிக் கிழமை ஜக்பொட்
39, 467, 020/-
07 20 34 75
பச்சை நிற டிக்கட்டுக்கள்
2017.09.02 ஆம் திகதி சனிக்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.
வெற்றிபெற்ற டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு
தொ.பே : 011 4824824
SMS: DLB<space>LOT<space>SF என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்
www.dlb.lk

## தன்னைப்...

சிவநேசன் ஆகியோருக்கு அமைச்சுப் பதவி வழங்கப்பட்டமைக்கு எதிராகத் தடை விதிக்கும்படியும் அவர் அந்த மனுவில்கோரியுள்ளார். இந்தவழக்கில்முதலமைச்சர்சி.வி.விக்னேஸ்வரன் மற்றும் அமைச்சர்கள் அனந்தி சசிதரன், கே. சர்வேஸ்வரன், ஜி.குணசீலன், கே.சிவநேசன், மாகாண ஆளுநர் றெஜினோல்ட் குரே, முன்னாள் அமைச்சர் ப.சத்தியலிங்கமும்ஆகியோர்பிரதிவாதிகளாகக்குறிப்பிடப்பட்டுள்ளனர்.

மூத்த சட்டத்தரணி சுரேன் பெர்னான்டோவின் நெறிப்படுத்தலில், சட்டத்தரணி நிலந்தி டீ சில்வா வழக்கைத் தாக்கல் செய்தார். வழக்கு இன்று அல்லது எதிர்வரும் 4ஆம் திகதி அல்லது 7ஆம்திகதிவிளக்கத்துக்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளது.

முதலமைச்சர்தன்னைப்பதவிநீக்கியதுசெல்லாதுஎன்றும் தான் இன்னமும் அமைச்சராக இருக்கிறார் என்றும் வடமாகாணமீன்பிடிமற்றும்போக்குவரத்துறைமுன்னாள்அமைச்சர்பா.டெனீஸ்வரன்கூறிவந்தார். விக்னேஸ்வரனின்நடவடிக்கைக்கு எதிராக நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப் போகிறார்என்றும்அவர்தெரிவித்திருந்தார். அதனடிப்படையில் நேற்றைய தினம் அவர் தனது மனுவை மேன்முறையீட்டு நீதிமன்றில் தாக்கல் செய்தார்.

வடமாகாணஅமைச்சரவையில்அங்கம்வகித்தஓர்அமைச்சருக்கு எதிராகச் சுமத்தப்பட்ட குற்றச்சாட்டு எவ்வாறு அனைத்து அமைச்சர்களுக்கும் எதிரான ஊழல், மோசடி விசாரணைக் குழுவாகப் பரிணமித்தது என்பது முதற்கொண்டு இந்தவிடயத்தில்நடந்தவைகள் அனைத்தையும் அவர் தனது மனுவில் விலாவாரியாகக் குறிப்பிட்டுள்ளார்.

தன்மீதுஎந்தக்குற்றங்களும்நிரூபிக்கப்படாதநிலையிலும் சட்டத்துக்குப்புறம்பாகப்பதவிநீக்கியிருப்பதுதனது சட்டபூர்வமான எதிர்பார்ப்பை தகர்த்தெறிந்துள்ளது என்றும் அவர் தனது மனுவில் கூறியுள்ளார்.

இதனடிப்படையில்,தான்அமைச்சராகப்பணியாற்றுவதற்கு முதலமைச்சர் சி.வி.விக்னேஸ் வரன் தலையீடு, தடுத்தல் மேற்கொள்ளக்கூடாது என்றுதடைவிதிக்குமாறு அவர்கேட்டுள்ளார்.

முதலமைச்சர் நியமித்த விசாரணைக்குழுவின் செயற்பாடுகளுக்குத்தடைவிதிக்கக்கோரியும்தன்னுடையஅமைச்சின் சார்பில் எந்தவொரு அமைச்சரும் விசாரணைக்கு முகங்கொடுப் பதற்குத் தடை விதிக்கக் கோரியும் அவர் இந்த மனுவைத் தாக்கல் செய்துள்ளார்.

அமைச்சர்களாகப் பொறுப்பேற்றுள்ள ஜி.குணசீலன், க. சிவநேசன் இருவரையும் அமைச்சுப் பொறுப்புக்கள் பணியாற்ற தடை விதிக்கும்படியும்,

முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன், போக்குவரத்து, வீதி அபிவிருத்தி, கிராம அபிவிருத்தி, மோட்டார் போக்குவரத்து திணைக்களம்ஆகிய அமைச்சுப்பொறுப்புக்களைச்செயற்படுத்த தடை விதிக்கும் படியும்,

அமைச்சர் திருமதி அனந்தி சசிதரன், வர்த்தக வாணிப அமைச்சராகச் செயற்படுவதற்குத் தடை விதிக்கும்படியும், அமைச்சர்க.சிவநேசன், மீன்பிடிஅமைச்சராகச்செயற்படுவதற்குத் தடை விதிக்கும்படியும் டெனீஸ்வரன் தனது மனுவில் மேலும் கோரியுள்ளார்.

இந்த வழக்கு இன்று அல்லது 4ஆம் திகதி அல்லது 7ஆம் திகதி விளக்கத்துக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளது. (உ-5)

## அபிவிருத்தி...

பரீட்சைகளுக்காக உள்ளீர்க்கப்பட்டிருந்தனர்.

இந்த பரீட்சைப் பெறுபேறுகளை http://www.np.gov.lk/result/index2017.phpஎன்ற இணைய முகவரியினூடாகச் சென்றுபார்வையிட முடியும்என்று அறிவிக்கப்பட்டுள்ளது. தெரிவு செய்யப்பட்டவர்களுக்கு நேர்முகத் தேர்வுகள் நடத்தப்பட்டு அவர்களுக்கான நியமனக் கடிதங்கள் வழங்கப்படும் என்று கூறப்படுகின்றது. (ற)

## மாகாண...

அமைச்சரும் அமைச்சரவை இணைப் பேச்சாளருமான ராஜித சேனாரத்ன தெரிவித்தார்.

அரசதகவல்திணைக்களத்தில்நேற்றுநடைபெற்றவாராந்த அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் செய்தியாளர் மாநாட்டிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அரசமைப்பின் 20ஆவது திருத்தச் சட்டவரைவு மாகாண சபைகளில்தொடர்ச்சியாகதோற்கடிக்கப்பட்டவாறுஉள்ளது. மாகாண சபைகளில் அதிகாரங்கள் அரசிடம் உள்ளபோது சட்டவரைவு ஏன் இவ்வாறு தோல்வியடைகின்றது? ஏதும் சதித்திட்டம் நடைபெறுகின்றதா? என்று செய்தியாளர்கள் எழுப்பிய கேள்விக்குப் பதிலளித்த அமைச்சர்,

"ஒரே தினத்தில் தேர்தலை நடத்தவேண்டும் என்பது அனைவரும் ஒன்றிணைந்து எடுத்த தீர்மானமே. உள்ளூராட்சி சபைத்தேர்தல்ஒரேதினத்தில்நடத்துவதுபோன்றுமாகாண சபைத் தேர்தல் மற்றும் நாடாளுமன்ற, அரச தலைவர் தேர்தல்களை ஒரே தினத்தில் நடத்துவது குறித்து ஓர் இணக்கப்பாடு எட்டப்பட்டிருந்தது. கொள்கை ரீதியாக எடுக்கப்பட்ட முடிவுகள் மாகாண சபைகளால் நிராகரிக்கப்பட்டால் நாடாளுமன்றம் 20ஆவது திருத்தச் சட்டவரைவை நிறை வேற்றும்" என்றார். (வ-5)

## மரண அறிவித்தல்

### திருமதி இலங்கைநாயகி சிவஞானம்



வவுனியா கிடாச்சூரியைப் பிறப்பிடமாகவும், சாஸ்திரி கூழாங்குளம், கற்குளத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இலங்கைநாயகி சிவஞானம் நேற்று (30.08.2017) புதன்கிழமை காலமானார்.

அன்னார் கந்தையா - அன்னம்மா தம்பதியரின் அன்பு மகளும் இராமபிள்ளை பூரணம் தம்பதியரின் அன்புமருமகளும் காலஞ்சென்ற சிவஞானத்தின் அன்புமனைவியும் நாகதீசன் (நான்காம் ஆண்டு மருத்துவபீட மாணவன் - யாழ்ப்பாண பல்கலைக்கழகம்), நந்தீசன், நதியரசி (முதலாம் ஆண்டு மாணவி, கலைப்பீடம், யாழ்ப்பாண பல்கலைக்கழகம்) ஆகியோரின் தாயும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (01.09.2017) வெள்ளிக்கிழமை மு.ப. 10 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கிடாச்சூரி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்
077 074 7395

## கைதடியின் கரப்பந்தில் நாளைய ஆட்டங்கள்

யாழ்ப்பாணம், ஓக. 31
கைதடி வளர்மதி சனசமூக நிலையத்தின் 58ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு யாழ்ப்பாண மாவட்ட ரீதியாக நடத்தப்பட்டுவரும் கரப்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் சில குறித்த கழக மைதானத்தில் நாளை நடைபெறவுள்ளன.
நாளை இரவு 7.30 மணிக்கு இடம்பெறும் 'ஏ' பிரிவு அணிகளுக்கான ஆட்டத்தில் கலையொளி விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து நீர்வேலி ஐக்கிய விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. இரவு 8.30 மணிக்கு இடம்பெறும் 'ஏ' பிரிவு அணிகளுக்கான ஆட்டத்தில் மோகனதாஸ் விளையாட்டுக் கழக 'ஏ' அணியை எதிர்த்து வொலிகிங்ஸ் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.
இரவு 9.30 மணிக்கு இடம்பெறும் 'ஏ' பிரிவு அணிகளுக்கான ஆட்டத்தில் பாரதி விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து விவேகானந்தா விளையாட்டுக் கழக 'ஏ' அணி மோதவுள்ளது.
(ம-23)

## கனகபுரம் கழகத்தின் கால்பந்து முடிவுகள்

யாழ்ப்பாணம், ஓக. 31
கனகபுரம் விளையாட்டுக் கழகம் நடத்தும் அணிக்கு 9 வீரர்கள் பங்குபற்றும் விலகல் முறையிலான கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் குறித்த கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டங்கள் சிலவற்றின் முடிவுகள் வருமாறு.
நேற்றுமுன்தினம் இரவு 7 மணிக்கு இடம்பெற்ற ஆட்டத்தில் உழவர் ஒன்றியம் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து பரந்தன் மத்திய விளையாட்டுக் கழக அணி மோதியது. நிர்ணயிக்கப்பட்ட நிமிடங்களின் நிறைவுவரை இரண்டு அணிகளும் கோலெதுவும் பதிவு செய்யாததை அடுத்து சமநிலைத் தவிர்ப்பு உதைகளில் வெற்றியைத் தீர்மானிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. 4:3 என்ற கோல் கணக்கில் பரந்தன் மத்திய விளையாட்டுக் கழக அணி வெற்றிபெற்றது.
தொடர்ந்து இரவு 8 மணிக்கு இடம்பெற்ற ஆட்டத்தில் விளைபூமி முரசுமோட்டை விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து சென். ஜேம்ஸ் பூநகரி விளையாட்டுக் கழக அணி மோதியது. இதில் சென். ஜேம்ஸ் விளையாட்டுக் கழகம் 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.
இரவு 9 மணிக்கு இடம்பெற்ற ஆட்டத்தில் கணேசானந்தா விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து கலைமகள் சாந்தபுரம் விளையாட்டுக் கழக அணி மோதியது. நிர்ணயிக்கப்பட்ட நிமிடங்களின் நிறைவு வரை இரண்டு அணிகளும் கோலெதையும் பதிவுசெய்யாததை அடுத்து சமநிலைத் தவிர்ப்பு உதைகளில் வெற்றியைத் தீர்மானிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. 4:3 என்ற கோல் கணக்கில் கலைமகள் அணி வெற்றிபெற்றது.
(ம-23)




# இங்கிலாந்தை வீழ்த்தி மே.இ.தீவுகள் பதிலடி



இங்கிலாந்துக்கு எதிரான இரண்டாவது டெஸ்ட் ஆட்டத்தில் 5 இலக்குகளால் வெற்றிபெற்றது மேற்கிந்தியத் தீவுகள் அணி. தொடரில் மூன்று ஆட்டங்கள். முதலாவது ஆட்டத்தில் இங்கிலாந்து வெற்றிபெற்றிருந்தது. இந்த நிலையில் இரண்டாவது ஆட்டத்தில் மேற்கிந்தியத் தீவுகள் வெற்றிபெற்றமையானது இங்கிலாந்துக்கு வழங்கப்பட்ட பதிலடி என்று கருதப்படுகிறது.
நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற இங்கிலாந்து முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்து 258 ஓட்டங்களுக்கு சகல இலக்குகளையும் இழந்தது. அதிகபட்சமாக ஸ்ரோக்ஸ் 100 ஓட்டங்களையும், ரூட் 59 ஓட்டங்களையும், வோக்ஸ் 29 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் றோச், கபிரியேல் இருவரும் தலா 4 இலக்குகளையும், கோல்டர், பிஸ்கூ இருவரும் தலா ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.
பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய மேற்கிந்தியத் தீவுகள் அணி 427 ஓட்டங்களைக் குவித்து பிரம்மிக்க வைத்தது. அதிகபட்சமாக கோப் 147 ஓட்டங்களையும், பிளக்வூட் 49 ஓட்டங்களையும், கோல்டர் 43 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் அண்டர்சன் 5 இலக்குகளையும், ஸ்ரோக்ஸ் 2 இலக்குகளையும், புரோட், வோக்ஸ் இருவரும் தலா ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.
169 ஓட்டங்கள் பின்னிலையுடன் இரண்டாவது இன்னிங்ஸை ஆரம்பித்த இங்கிலாந்து அணி முதல் இன்னிங்ஸில் கிடைத்த பின்னடைவைச் சிறப்பாகச் சமாளித்தது. அந்த அணி 8 இலக்குகளை இழந்து 490 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் ஆட்டத்தை இடைநிறுத்தினார் இங்கிலாந்து அணித் தலைவர் ரூட். அதிகபட்சமாக மொயின் அலி 84 ஓட்டங்களையும், ரூட் 72 ஓட்டங்களையும், வோக்ஸ் 61 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் சேஸ் 3 இலக்குகளையும், கபிரியேல், கோல்டர் இருவரும் தலா 2 இலக்குகளையும், பிஸ்கூ ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.
இங்கிலாந்து இன்னும் கூடுதலாக சுமார் 100 ஓட்டங்கள் வரையில் பெற்றிருக்க வேண்டும். ஆனால் 95 பந்துப்பரிமாற்றங்களே மீதமிருந்ததால் அந்த அணி ஆட்டத்தை இடைநிறுத்தியது. இதுவே இங்கிலாந்துக்குப் பின்னடைவையும் கொடுத்தது.
இரண்டாவது இன்னிங்ஸிற்காகக் களமிறங்கியது மேற்கிந்தியத் தீவுகள். ஆரம்ப வீரர்களாக பிரீத்வைட் மற்றும் பவல். 23 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார் பவல். கோப் இரண்டாவது இன்னிங்ஸிலும் தனது ஆதிக்கத்தை நிலைநாட்டினார். பிரீத்வைட் மறுமுனையில் நிதானிக்க, இலக்குக்காக இலவுகாத்த கிளிபோல் ஆனது இங்கிலாந்து. இருவரும் இணைப்பாட்டமாக 144 ஓட்டங்களைப் பகிர்ந்தனர். பிரீத்வைட் 95 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தாலும், மறுமுனையில் மீண்டும் சதம் கடந்தார் கோப். நாள் முவதற்கு சுமார் 7 பந்துப் பரிமாற்றங்கள் மீதமிருந்த நிலையில் வெற்றிபெற்றது மேற்கிந்தியத் தீவுகள்.
இரண்டு இன்னிங்ஸிலும் சதம் கடந்து வெற்றிக்கு வித்திட்ட கோப் ஆட்டநாயகனானார். (ம)

## சொன்னதைச் செய்தார் தீவுகளின் பயிற்சியாளர் அம்புரோஸ்

இங்கிலாந்துக்கு எதிரான டெஸ்ட் தொடரில் குறைந்தது ஓர் ஆட்டத்திலாவது வெற்றிபெறுவோம் என்று அந்த அணியின் தலைமைப் பயிற்சியாளர் அம்புரோஸ் தெரிவித்திருந்த நிலையில் தற்போது அவர் அதைச் செய்து காட்டியுள்ளார்.
இங்கிலாந்துக்கு எதிரான தொடர் ஆரம்பமாவதற்கு முன்னதாக, "மேற்கிந்தியத் தீவுகள் அணி கடந்த பல ஆட்டங்களில் தொடர்ந்து தோல்விகளைச் சந்தித்து வருகிறது. இதை மறுக்கவில்லை. ஆனால் இங்கிலாந்துக்கு எதிரான மூன்று ஆட்டங்களைக் கொண்ட டெஸ்ட் தொடரில் குறைந்தது ஓர் ஆட்டத்திலாவது மேற்கிந்தியத் தீவுகள் அணி வெற்றிபெறும். மிகச் சவாலான ஆட்டத்தை மேற்கிந்தியத் தீவுகளின் வீரர்கள் வெளிப்படுத்துவார்கள்" என அம்புரோஸ் தெரிவித்திருந்தார். இந்த நிலையில் நேற்றுமுன்தினம் முடிவுக்கு வந்த இந்த இரண்டு அணிகளுக்கும் இடையிலான இரண்டாவது டெஸ்ட் ஆட்டத்தில் மேற்கிந்தியத் தீவுகள் வெற்றிபெற்றுள்ளது. (ம)



## கரப்பந்தாட்டம் அடுத்த மாதம்

யாழ்ப்பாணம், ஓக. 31
டயலொக் மற்றும் மஞ்சி வெற்றிக் கிண்ணத்துக்கான கரப்பந்தாட்டத் தொடர் அடுத்த மாதம் ஆரம்பமாகவுள்ளது. இந்தத் தொடரில் பங்குபற்ற விரும்பும் விளையாட்டுக் கழகங்கள் யாழ்ப்பாண மாவட்ட கரப்பந்தாட்டச் சங்கத்தின் தலைவரிடம் தொடர்புகொண்டு விண்ணப்பப்படிவங்களை பெற்றுப் பூர்த்தி செய்யுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ம-23)

## இன்றைய மோதல்கள்

கரணவாய் ஓக 31
அரியாலை திருமகள் சனசமுக நிலையத்தின் 65ஆவது ஆண்டு விழாவை முன்னிட்டு நடதத்தத் திட்டமிட்ட கரப்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் குறித்த கழகத்தின் மைதானத்தில் இடம்பெறவுள்ளன. இந்தத் தொடரில் இன்று இரவு 7.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத் தில் சிறுப்பிட்டி கலையொளி விளையாட்டுக் கழக 'ஏ' அணியை எதிர்த்து அச்சுவேலி கலைமகள் விளையாட்டுக் கழகமும், தொடர்ந்து இரவு 8.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் நீர்வேலி காமாட்சி அம்பாள் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து மட்டுவில் மோகனதாஸ் விளையாட்டுக் கழகமும் மோதவுள்ளன.
(ம-198)

## சைக்கிளோட்டம்

யாழ்ப்பாணம், ஓக. 31
நாவற்குழி சரஸ்வதி சனசமூக நிலையமும், விளையாட்டுக் கழகமும் இணைந்து நடத்தும் வட மாகாண ரீதியிலான 60 கிலோ மீற்றர் சைக்கிள் தூரமுடைய ஓட்டப்போட்டி



எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை இடம்பெறவுள்ளது.
இந்தப் போட்டியில் பங்குபற்ற விரும்பும் போட்டியாளர்கள் நாளை மறுதினம் சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு முன்னர் தமது பதிவுகளை மேற்கொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் அறிவித்தனர்.
(ம-23)



# டெஸ்ட் ஆட்டத்தில் ஆஸ்திரேலியாவை வீழ்த்தி வரலாற்றுச் சாதனை படைத்தது பங்களாதேஷ்

ஆஸ்திரேலியாவுக்கு எதிரான டெஸ்ட் தொடரின் முதலாவது ஆட்டத்தில் அபார வெற்றி பெற்றது பங்களாதேஷ் அணி.

டாக்காவில் கடந்த 27ஆம் திகதி ஆரம்பமாகியது இந்த ஆட்டம். நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற பங்களாதேஷ் முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. அந்த அணியின் தமீம் இக்பால், சகிப் அல் ஹசன் இருவரும் பொறுப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தினார்கள். இதனால் முடிவில் 260 ஓட்டங்களைப் பெற்றது பங்களாதேஷ். அதிகபட்சமாக சகிப் அல் ஹசன் 84 ஓட்டங்களையும், ' தமீம் இக்பால் 71 ஓட்டங்களையும், நசீர் கொசைன் 23 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் கம்மின்ஸ், லையன், அகர் மூவரும் தலா 3 இலக்குகளை வீழ்த்தினர்.

பதிலுக்குக் களமிறங்கிய ஆஸ்திரேலிய அணி 217 ஓட்டங்களுக்கு சகல இலக்குளையும் இழந்தது. ரென்சொவ் 45 ஓட்டங்களையும், அகர் 41 ஓட்டங்களையும், ஹான்ட்ஸ்கொம் 33 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் சகிப் அல் ஹசன் 5 இலக்குகளையும், மிராஸ் 3 இலக்குகளையும், தயுல் இஸ்லாம் ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.



43 ஓட்டங்கள் முன்னிலையுடன் பதிலுக்குக் களமிறங்கிய பங்களாதேஷ் மத்திய வரிசையின் தடுமாற்றத்தால் 221 ஓட்டங்களுக்கு சகல இலக்குகளையும் இழந்தது. தமீம் இக்பால் 78 ஓட்டங்களையும், ரகிம் 41 ஓட்டங்களையும், மிராஸ் 26 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் லையன் 6 இலக்குகளையும், அகர் 2 இலக்குகளையும், கம்மின்ஸ் ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.

ஆஸ்திரேலிய அணிக்கு 265 ஓட்டங்கள் இலக்காக நிர்ணயிக்கப்பட்டது. நேற்றுமுன்தின மூன்றாம் நாள் முடிவில் ஆஸ்திரேலிய அணி 2 இலக்குகளை இழந்து 109 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. ஆஸ்திரேலியா வெற்றிபெற இன்னும் 156 ஓட்டங்களும், பங்களாதேஷ் வெற்றிபெற இன்னும் 8 இலக்குகளும் தேவை என்ற நிலையில் நான்காம் நாள் ஆட்டம் நேற்று ஆரம்பமானது. மேலதிக இலக்கை இழக்காமல் 150 ஓட்டங்களைப் பெற்றது ஆஸ்திரேலியா. சதம் கடந்தார் வோர்ணர். ஆஸ்திரேலியா இலகுவாக வெற்றிபெறும் என்ற அபிப்பிராயம் தோற்றம் பெற்ற வேளையில் சிமித்தை வீழ்த்தினார் சகிப் அல் ஹசன். அவர் வோர்ணரையும் ஆட்டமிழக்கச் செய்தார். ஹான்ட்ஸ்கொம், அகர் இருவரும் தயுல் இஸ்லாமாலும், மக்ஸ்வெல், வேட் இருவரும் சகிப் அல் ஹசனாலும் ஆட்டமிழக்கச் செய்யப்பட்டனர். இறுதி இலக்காக ஹசில்வூட்டை வீழ்த்தினார் தயுல் இஸ்லாம். முடிவில் 20 ஓட்டங்களால் வெற்றிபெற்றது பங்களாதேஷ். பந்துவீச்சில் சகிப் அல் ஹசன் 5 இலக்குகளையும், தயுல் இஸ்லாம் 3 இலக்குகளையும், மிராஸ் 2 இலக்குகளையும் கைப்பற்றினர். (ம)

# இலங்கை இன்றாவது வெல்லுமா?

இலங்கை - இந்திய அணிகளுக்கு இடையிலான ஒருநாள் தொடரின் நான்காவது ஆட்டம் இன்று நடைபெறவுள்ளது.

கொழும்பு பிரேமதாச மைதானத்தில் பகலிரவு ஆட்டமாக இன்றைய ஆட்டம் நடைபெறவுள்ளது. முடிவடைந்த முதல் மூன்று ஆட்டங்களிலும் வெற்றிபெற்று கிண்ணத்தை வெல்வதை இந்திய அணி உறுதி செய்துள்ளது. இதனால் இன்றைய ஆட்டத்தின் முடிவு கிண்ணத்தைத் தீர்மானிக்கும் ஒன்றாக அமையப் போவதில்லை.

இந்தியாவுக்கு எதிரான இரண்டாவது ஒருநாள் ஆட்டத்தில் தாமதமாகப் பந்துவீசிய குற்றத்துக்காக இலங்கை அணியின் தலைவர் தரங்கவுக்கு இரண்டு ஆட்டங்களில் விளையாடத் தடை விதிக்கப்பட்டது. இதனால் மூன்றாவது மற்றும் நான்காவது ஆட்டங்களில் அவர் விளையாட முடியாத நிலை உள்ளது. இதனால் பொறுப்புத் தலைவராக கப்புகெதர நியமிக்கப்பட்டார். அவரும் காயமடைந்து வெளியேறியுள்ளதால் இன்றைய ஆட்டத்தில் இலங்கை அணியின் தலைவராக மலிங்க செயற்படவுள்ளார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. தனஞ்சய டி சில்வா, டில்சான் முனவீர ஆகியோரும் அணிக்கு அழைக்கப்பட்டுள்ளனர். (ம)

# அடுத்த ஆட்டத்திலும் வெல்வோம் நம்பிக்கை தெரிவித்துள்ளார் ரகிம்



ஆஸ்திரேலியாவுக்கு எதிரான அடுத்த டெஸ்ட் ஆட்டத்திலும் வெற்றிபெறக்கூடிய நம்பிக்கையை வெளிப்படுத்தினார் பங்களாதேஷ் அணியின் தலைவர் ரகிம். ஆஸ்திரேலிய அணிக்கெதிராக நேற்றுக் கிடைத்த வெற்றியின்பின்னர் கருத்துத் தெரிவிக்கையிலேயே ரகிம் இவ்வாறு தெரிவித்தார்.

"எமது அணியின் வீரர்கள் சகல துறைகளிலும் சிறந்த ஆட்டத்தை வெளிப்படுத்தினர். பலம்மிக்க ஆஸ்திரேலிய அணியை வீழ்த்தியது அருமையானது. அடுத்த டெஸ்ட்டிலும் ஆதிக்கம் செலுத்தி 2:0 என்ற அடிப்படையில் தொடரைக் கைப்பற்ற இயலுமான முயற்சிகளை மேற்கொள்வோம்" என்று ரகிம் மேலும் தெரிவித்தார். (ம)

# வங்கத்துச் சிங்கங்களுக்கு குவிகின்றன வாழ்த்துக்கள்



ஆஸ்திரேலியாவுக்கு எதிரான முதலாவது டெஸ்ட் ஆட்டத்தில் வரலாற்றுச் சிறப்புமிக்க வெற்றிபெற்ற பங்களாதேஷ் அணிக்கு பல தரப்புக்களிடம் இருந்தும் வாழ்த்துக்கள் குவிந்த வண்ணம் உள்ளன.

பங்களாதேஷ் தலைமை அமைச்சர் ஷேக் ஹசீனா ஆட்டத்தை நேரில் சென்று பார்த்ததுடன், வெற்றிபெற்ற பங்களாதேஷ் அணியினருக்கு தனது வாழ்த்தைத் தெரிவித்தார். இந்த ஆட்டத்தில் ஒட்டுமொத்தமாக 10 இலக்குகளைக் கைப்பற்றி ஒரு அரைச்சதத்தையும் பதிவுசெய்த சகிப் அல் ஹசனுக்கு விசேடவிதமாக அவர் தனது வாழ்த்தைத் தெரிவித்தார்.

கிரிக்கெட் உலகின் பிரபலங்கள் பலரும் தத்தமது வாழ்த்துக்களைத் தெரிவித்தனர். இந்திய அணியின் முன்னாள் ஜாம்பவான் சச்சினும் பங்களாதேஷ் அணிக்கு தனது வாழ்த்தைத் தெரிவித்தார். மேற்கிந்தியத் தீவுகள் பெற்ற வெற்றியையும் அவர் பாராட்டினார். (ம)




# 300ஆவது ஆட்டத்தில் களமிறங்குகிறார் டோனி

இலங்கை–இந்திய அணிகளுக்கு இடையில் இன்று நடைபெறவுள்ள ஆட்டம் டோனியின் 300ஆவது ஆட்டமாக அமைந்துள்ளது.

தொடரில் ஐந்து ஆட்டங்கள் முடிவடைந்த முதல் மூன்று ஆட்டங்களிலும் வெற்றிபெற்று கிண்ணம் வெல்வதை இந்திய அணி உறுதிசெய்துவிட்ட போதிலும் இன்றைய ஆட்டம் டோனியின் 300ஆவது ஆட்டமாக அமைந்துள்ளதால் இன்றைய ஆட்டத்திலும் இந்தியா வெற்றிபெறவேண்டும் என்பது இந்திய ரசிகர்களின் பெரிய எதிர்பார்ப்பு.

இதுவரை 299 ஆட்டங்களில் விளையாடியுள்ள டோனி ஓட்டு மொத்தமாக 9ஆயிரத்து 608 ஓட்டங்களைக் குவித்துள்ளார். 10 சதங்களும், 65 அரைச்சதங்களும் இதில் உள்ளடங்குகின்றன. டோனி இதுவரை 99 ஸ்டம்பிங் செய்துள்ளார். தனது 300 ஆவது ஆட்டத்தில் 100ஆவது ஸ்டம்பிங்கை அவர் நிவர்த்தி செய்வாரா என்பது தொடர்பிலும் எதிர்பார்ப்பு ஏற்பட்டுள்ளது. (ம)

**பணியாளர் தேவை**
கணக்காளர், காசாளர், விற்பனையாளர் தேவை. அனுபவமுள்ளவர்களும் அனுபவமில்லாத ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம். திறமைக்கேற்ற சம்பளம் வழங்கப்படும்.
பேப்பர் ஹவுஸ், 300, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

# சொந்த ரசிகர்கள் தாக்கியமையே பதவியிலிருந்து விலகக் காரணம்

## ஜெயசூர்யவின் கடிதத்தில் தகவல்



இலங்கை கிரிக்கெட் அணியின் தெரிவுக் குழு பதவி விலகியமைக்கு, 'மூன்றாவது ஒருநாள் ஆட்டத்தின் பின்னர் இலங்கை ரசிகர்கள் தமது சொந்த வீரர்களைத் தாக்கியமையே காரணம்' என்று பதவி விலகல் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது என்று பன்னாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டன.

சனத் ஜெயசூரிய தனது பதவி விலகல் கடிதத்தில், "என் இருதயத்தில் துயரத்தைத் தாங்கி இந்தக் கடிதத்தை எழுதுகிறேன். சக தேர்வாளர்களுடன் நீண்ட நேரம் ஆலோசித்த பிறகு நாங்கள் பதவி விலகுவது என்று ஏகமனதாக முடிவெடுத்தோம்.

நாட்டை பலமட்டங்களிலும் பிரதிநிதித்துவம் செய்த வீரர், முன்னாள் தலைவர், நடப்பு தேர்வுக்குழு தலைவர் என்ற அடிப்படையில், கடந்த ஞாயிறன்று மைதானத்தில் நடந்தது (தோல்வியின் விரக்தியில் இலங்கை வீரர்கள் மீது போத்தல்களால் வீச்சு) கடைசியாக இருக்கட்டும் என்று நினைத்தோம். கிரிக்கெட் எப்போதும் என் வாழ்க்கையாகவே இருந்து வருகிறது. எனவே எமது ரசிகர்களே எமது வீரர்கள் மீது தாக்குதல் நடத்தியது மிகவும் வலிதருவதாக இருக்கிறது.

இந்த ஆண்டு மோசமாக அமைந்தது என்பதை ஏற்றுக் கொள்கிறோம். ஆனால் ஓராண்டுக்கு முன்பாகத்தான் ஆஸ்திரேலியாவை 3:0 என்று வீழ்த்தினோம். அது மறக்க முடியாத ஒரு கணம். திறமையான வீரர்கள் பலர் இந்த அணியில் உள்ளனர். நிச்சயம் இவர்கள் அணியை உச்சத்துக்கு இட்டுச்செல்வார்கள். இலங்கை கிரிக்கெட்டுக்காக தேவை ஏற்படும்போது எப்போது வேண்டுமானாலும் உதவத் தயாராக இருக்கிறோம்.

1996 (உலகக்கோப்பை வெற்றி) வீரர்கள், எப்போதும் இலங்கை கிரிக்கெட்டின் அபாரமான நாள்களை ஏக்கத்துடன் நினைவு கூர்கிறோம். எங்களுக்கு நீங்கள் அளித்த ஆதரவுக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். கிரிக்கெட் சபையின் தலைவருக்கும் நன்றி தெரிவித்துக்கொள்கிறோம்.

கடைசியாக அணியினருக்கும் நன்றி தெரிவித்துக்கொள்கிறோம். நாங்கள் எங்கள் கண்களில் நீர் நிரம்ப விடைபெறுகிறோம். ஆனால் எங்கள் தலை நிமிர்ந்துதான் உள்ளது. அனைத்து ரசிகர்களிடத்திலும் நான் கேட்டுக்கொள்வதெல்லாம் வீரர்கள் மீது நம்பிக்கை வையுங்கள். இந்த வீரர்கள் நிச்சயம் வெற்றிக்கு இட்டுச் செல்வார்கள். வீரர்களுக்கு நாங்கள் கூறுவதெல்லாம், உங்கள் திறமைகளில் நம்பிக்கை வையுங்கள். ரசிகர்களிடத்தில் நம்பிக்கை வையுங்கள். அவர்கள் உங்களுடன் தான் இருக்கப் போகிறார்கள். ஒரு அணியாக, ஒருநாடாக நாம் திரண்டு மீண்டெழுவோம் என்ற நம்பிக்கை உள்ளது" என அந்தக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ம)




கணனி சார் உபகரணங்களுக்கான
விசேட விலைத் தள்ளுபடி
10% முதல் 70% வரை
01.09.2017 - 04.09.2017 வரை மட்டுமே
கையிருப்பு உள்ளவரை மட்டுமே!!!
NALIN Information Technologies Pvt Ltd.
NALIN INFORMATION TECHNOLOGIES (PVT) LTD.
No.195/2, Parameswara Junction,
Palaly Road, Jaffna
Phone: 021 222 1121 Mobile: 0777 667 975




விளையாட்டுத்துறை அமைச்சு விளையாட்டுத்துறை அபிவிருத்தித் திணைக்களத்துடன் இணைந்து மாத்தறைகெட்டவலவில் எதிர்வரும் 22ஆம், 23ஆம், 24ஆம் திகதிகளில் நடத்தத் திட்டமிட்டுள்ள 43 ஆவது தேசிய விளையாட்டுப் போட்டியை முன்னிட்டு ஒலிம்பிக் சுடர் இலங்கையின் பல பாகங்களுக்கும் கொண்டுசெல்லப்படுகிறது. யாழ்ப்பாணம், சாவகச்சேரி உள்ளிட்ட பகுதிகளுக்கு நேற்றுக் கொண்டுசெல்லப்பட்டது. (ம-9)

**முக்கிய அறிவித்தல்**

இத்தால் சகலருமறிக கோப்பாய் இருபாலை சந்தியில் வசிக்கும் கிருஸ்ணமோகன் கைம்பெண் பதிவிரதாமணியும் 46 1/4 கொலிங்வூட்பிளேஸ் வெள்ளவத்தை கொழும்பு - 06 இல் வசிக்கும் கந்தையா சிவசாமி பாலகிருஸ்ணனும் ஆகிய நாங்கள் வெளிப்படுத்திக்கூறுவதாவது அச்சுவேலியில் மகா வித்தி யாலயத்திற்கு முன்பாகவும் இலங்கை வங்கிக்கு அருகிலும் அமைந்திருக்கும் (யாழ்ப்பாணம் பிரதான வீதியில் அமைந் திருக்கும்) நிலப்பரப்பு ஏழும் குழி பத்துதசம் இரண்டு இரண்டும் விசாலம் கொண்ட கொத்திக்கலட்டி எனும் பெயருடைய காணியின் உரிமையாளர்கள் குறித்த கிருஸ்ண மோகன் கைம்பெண் பதிவிரதாமணியுமும் கந்தையா சிவசாமி பாலகிருஸ்ணன் ஆகிய நாங்கள் ஆகையால் இவ்வாதனத்தில் தற்போது எவ்விதமான நயமுரித்து சோந்தையும் இல்லாத வரிடமிருந்து குறித்த ஆதனத்தையோ அல்லது அதன் ஒரு பகுதியையோ கொள்வனவு செய்வதனை தவிர்த்துக் கொள்ளும்படியும் இவ்வாதனத்தை அளப்பனவு செய்வதனை உத்தரவு பெற்ற நில அளவையாளராக தொழில்சார் கடமைகளை ஆற்றும் எல்லீரும் தவிர்த்துக் கொள்ளுமாறு இத்தால் வேண்டப்படுகிறீர்கள்

2017 ஆம் ஆண்டு ஆவணி மாதம் 30 ஆம் திகதி

### சர்ஜீல் கானுக்கு 5 ஆட்டங்களில் தடை விதிப்பு

பாகிஸ்தான் அணியின் முன்னணித் துடுப்பாட்ட வீரர் சர்ஜீல் கானுக்கு 5 ஆட்டங்களில் விளையாடத் தடை விதிக்கப்பட்டுள்ளது. பாகிஸ்தான் சுப்பர் லீக் தொடர் அண்மையில் நடைபெற்றது. இந்தத் தொடரின் போது ஆட்டநிர்ணயச் சூதாட்டத்தில் ஈடுபட்டார் என்று தெரிவித்தே சர்ஜீல் கானுக்கு 5 ஆட்டங்களில் விளையாடத் தடை விதிக்கப்பட்டுள்ளது. பாகிஸ்தான் கிரிக்கெட் வீரர்கள் ஆட்டநிர்ணயச் சூதாட்டத்தில் ஈடுபடுவது வழக்கமான ஒன்றாக மாறிவிட்டது. அந்த அணியின் முன்னாள் தலைவர் சல்மான் பட், ஆமிர், அசிப் ஆகியோர் சூதாட்டத்தில் ஈடுபட்டு 5 ஆட்டங்களில் விளையாடத் தடை விதிக்கப்பட்டது. தடைக்காலம் முடிவடைந்த பின்னர் ஆமிர் மட்டும் மீண்டும் பன்னாட்டு கிரிக் கெட் அரங்குக்குத் திரும்பியுள்ளார். ஏனை[illegible]களை பாகிஸ்தான் கிரிக்கெட் சபை கண்டுகொள்ளவில்லை. இவ்வாறான ஓர் நிலைமையே சர்ஜீலுக்கும் ஏற்படும் என்று கருதப்படுகிறது. (ம)

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 31.08.2017 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.